பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:17 வள்ளுவர் ஆண்டு 2032 மார்கழி 07 சனிக்கிழமை (22-12-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:27

# அரசும் யுத்தநிறுத்தம்!

## புலிகளின் அறிவிப்புக்கு சாதகமாக உடன் பதில்

கொழும்பு,டிசெம்பர்22

**விடுதலைப் புலிகளின் ஒருதலைப்பட்ச யுத்த நிறுத்த அறிவிப்பை ஏற்று ஸ்ரீலங்கா அரசும் ஒரு மாதத்துக்கு யுத்தநிறுத்தம் அறிவித்திருக்கின்றது.**

**இதன்படி, இரு தரப்புக்கும் இடையில் நாளை மறுதினம் திங்கட்கிழமை தொடக்கம் முழு அளவில் யுத்தநிறுத்தம் நடைமுறைக்கு வருகின்றது.**

சமாதான முயற்சிகளுக்கு ஊக்கமளிக்கும் ஒரு நல்லெண்ண நடவடிக்கையாக - டிசெம்பர் 24 ஆம் திகதிமுதல் ஜனவரி 24 ஆம் திகதி வரை ஒரு மாத காலத்துக்கு - பண்டிகை சமயத்தில் - ஒரு தலைப்பட்ச யுத்தநிறுத்தத்தைப் புலிகள் கடந்த புதனன்று அறிவித்திருந்தனர் என்பது தெரிந்ததே.

அதற்குப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான புதிய

(12ஆம் பக்கம் பார்க்க)

## இருதரப்பு யுத்தநிறுத்தத்தை வரவேற்கின்றது பிரிட்டன்!

கொழும்பு,டிசெ.22

விடுதலைப் புலிகளும் அரசும் யுத்தநிறுத்தத்தைப் பிரகடனம் செய்துள்ளமை சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் தொடர வழிவகுக்கும்.

- இவ்வாறு நம்பிக்கை தெரிவித்துள்ளார் பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் ஜக் ஸ்ட்ரோ.

சமாதான முயற்சிகள் தொடர பிரிட்டன் பூரண ஆதரவை வழங்கும் என்றும் -

விடுதலைப் புலிகளும் அரசும் கோரிக்கை விடுத்தால் இனப்பிரச்சனைத் தீர்வில் மத்தியஸ்தம் வகிக்கவும் பிரிட்டன் முன்வரும் என்றும் -

அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ.-7)

## பிரதமர் ரணில் இன்று இந்தியாவுக்கு விஜயம்

கொழும்பு,டிசெ.22

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மூன்று நாள் விஜயத்தை மேற்கொண்டு இன்று இந்தியா புறப்படுகிறார்.



இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் உட்பட இந்தியத் தலைவர்கள் பலரையும் ரணில் தமது விஜயத்தின் போது சந்தித்துப் பேச்சு நடத்தவிருக்கிறார்.

இந்தியத் தலைவர்களுடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இலங்கையின் இனப்பிரச்சினை விவகாரம், சமாதான முயற்சிக்கான பேச்சுக்களை ஆரம்பித்தல் போன்ற முக்கிய விடயங்கள் குறித்து பேச்சு நடத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதனால் ரணிலின் இந்திய விஜயம் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

இலங்கை மக்கள் மட்டுமன்றி உலகத் தலைவர்களும் கூட இலங்கைப் பிரதமரின் இந்திய விஜயத்தை மிகவும் ஆவலுடன் எதிர்பார்த்துள்ளனர் என்று அவதானிகள் குறிப்பிடுகின்றனர். (க-4)

### பேச்சை ஆரம்பிக்க ஏதுவாக

## இலங்கை அரசுப் பிரதிநிதி நோர்வேக்கு விரைவு!

கொழும்பு,டிசெ.22

நோர்வேயின் அனுசரணையுடன் சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பது குறித்து ஆராய்வதற்கென அரசின் பிரதிநிதி ஒருவர் அந்த நாட்டுக்கு அவசரமாக அனுப்பிவைக்கப்பட்டுள்ளார் எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பின் பிரதிநிதிகளுடன் நேற்று இடம்பெற்ற சந்திப்பின்போதே பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

நோர்வே அரசின் பங்களிப்புடன் சமாதானப் பேச்சுக்கள் தொடரவேண்டும் என்பதே சகலரதும் விருப்பமாக உள்ளது.

இதனைப் வலுப்படுத்தும் வகையில் சென்றுள்ள அரசின் பிரதிநிதி நாடு திரும்பியதும் உரிய நடவடிக்கைகள் தொடரப்படும் என்றும் பிரதமர் தமிழ்க் கட்சிக் கூட்டமைப்பினரிடம் தெரிவித்தார்.

நோர்வே சென்றிருக்கும் பிரதிநிதி யார் என்பது குறித்து தகவல்கள் வெளிவராதபோதும், பிரதமரின் செயலாளரான பிரட்மன் வீரக்கோன் தான் அங்கு சென்றிருக்கிறார் என ஊகிக்கப்படுகிறது. (க-7-4)

## யுத்தநிறுத்தம், சமாதான முயற்சிகளை பொ.ஐ.முன்னணியும் வரவேற்கின்றது

### மத்திய குழுக் கூட்டத்தில் ஜனாதிபதி அறிவிப்பு

கொழும்பு,டிசெ.22

இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காண்பதற்காக புதிய அரசால் மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகளை பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வரவேற்கின்றது. இந்த முயற்சியின் ஒரு கட்டமாக யுத்த நிறுத்தம் செய்யப்பட்டால் அதற்கும் பொ.ஐ. முன்னணி ஆதரவு தரும்.



- இப்படித் தெரிவித்திருக்கிறார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

நேற்றுப் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் மத்திய குழு உறுப்பினர்கள், எம்.பிக்கள் மற்றும் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியின் மாவட்ட மட்டத் தலைவர்கள் ஆகியோர் மத்தியில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

மேற்படி கூட்டம் ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்றது. சுமார் 200 இற்கும் அதிகமான கட்சிப் பிரமுகர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

அங்கு ஜனாதிபதியால் முன்வைக்கப்பட்ட கருத்துகள் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டன. அங்கு

(11ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியாவின் மத்தியஸ்தத்தை கோருகின்றனர் டக்ளஸ், வரதர்!

### தூதுவரை நேற்றுச் சந்தித்து வற்புறுத்து

கொழும்பு,டிசெ.22

ஈ.பி.டி.பி. கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவும், ஈ.பி.ஆர்.எல்.எவ். (வரதர் அணி) தலைவர் அ.வரதராஜப்பெருமாளும் நேற்று நண்பகல் கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்தில் தூதுவர் கோபாலகிருஷ்ணகாந்தியையும், தூதரகத்தின் ஏனைய இராஜதந்திரிகளையும் சந்தித்து விரிவான பேச்சுக்களை நடத்தினர்.

இலங்கை இனப்பிரச்சினைக்கு சமாதானத்தீர்வு காணும் முயற்சிகளைச் சுட்டிக்காட்டிய அவர்கள், அந்த முயற்சிக்கு மூன்றாம் தரப்பு மத்தியஸ்தராக - அனுசரணையாளராக - இந்தியா செயற்படவேண்டும் என்று வலியுறுத்தினர்.

"எந்த விடயத்திலும் அனுசரணையாளர் பொறுப்பில் இருவர் செயற்படமுடியாது. ஒருவரே செயற்படமுடியும். இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தைப் பொறுத்தவரை நோர்வேயைவிட இந்தியா அனுசரணையாளராகச் செயற்படுவதையே பெரும்பான்மைச் சிங்களவர்களும் பெரும்பாலான தமிழர்களும் விரும்புகின்றனர்.

"இந்தியாதான் இந்த விடயத்தில் பக்கச்சார்பற்ற நடுநிலையாளராகச் செயற்படமுடியும். எனவே அந்தப் பொறுப்பை இந்தியா ஏற்றுக்கொள்ள வேண்டும்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## மத்தியஸ்தம் வகிக்க மறுக்கிறது இந்தியா!

புதுடில்லி,டிசெ.22

"இலங்கையில் சமாதான முயற்சிகள் புதிதாக ஆரம்பிக்கப்பட்டிருப்பதை இந்தியா வரவேற்கிறது. ஆனால் இனப்பிரச்சினை விவகாரத்தில் மத்தியஸ்தம் வகிப்பதை அது விரும்பவில்லை. புதிய அரசுக்கு ஆலோசனை மட்டுமே வழங்கும். அதற்கு மேல் மிகுந்த ஈடுபாடு ஏதும் காட்டமாட்டாது."

- இந்தியாவின் நிலைப்பாடு குறித்து இவ்வாறு கருத்து வெளியிட்டிருக்கிறார் அந்த நாட்டின் வெளிவிவகார அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி யொருவர்.

இலங்கைப் பிரதமர் ரணில் இந்தியாவுக்கு விஜயம் செய்ய இருக்கை

(12ஆம் பக்கம் பார்க்க)

## பிரதமருடன் கூட்டமைப்பினர் நேற்று முக்கிய விடயங்கள் குறித்து பேச்சு

### கோரிக்கைகளுக்கு நடவடிக்கை எடுப்பதாக உறுதி

கொழும்பு,டிசெ.22

நான்கு தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் நால்வர் நேற்று முதல் முறையாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

நேற்றைய சந்திப்பின்போது பிரதமருடன் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் முக்கிய கோரிக்கைகள் சிலவற்றை முன்வைத்தனர்.

இந்தக் கோரிக்கைகளை பிரதமர் சிரத்தையுடனும் பொறுமையாகவும் கேட்டார்.

நாட்டின் முக்கிய பிரச்சினைகளாக விளங்கும் கூட்டமைப்பினரின் கோரிக்கைகள் குறித்து பரிசீலனை செய்து விரைவில் தகுந்த நடவடிகைகை எடுக்கப்படும் என்று பிரதமர் உறுதியளித்தார்.

கூட்டமைப்பின் சார்பில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகமும் திருகோணமலை மாவட்ட எம்.பியுமான இரா.சம்பந்தன், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவரும் யாழ். எம்.பியுமான அ.விநாயகமூர்த்தி, ரெலோ தலைவரும் வன்னி மாவட்ட எம்.பியுமான செல்வம் அடைக்கலநாதன், ஈ.பி.ஆர்.எல்.எவ். (சுரேஷ் அணி) தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் நேற்றைய சந்திப்பில் பங்குபற்றினர்.

அவர்கள் பிரதமரிடம் கூட்டமைப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## பொருளாதாரத் தடை பொங்கலோடு போகும்!

கொழும்பு,டிசெ.22

இராணுவக் கட்டுப்பாட்டிலீல்லாத வன்னிப் பிரதேசங்களுக்கு பொருள்களை எடுத்துச் செல்வதற்கு விதிக்கப்பட்டிருந்த தடை விரைவில் தளர்த்தப்படும்.

இத்தகைய பொருள்களுடன் பெரும் எண்ணிக்கையான வாகன அணி அனேகமாக எதிர்வரும் தைப் பொங்கலுக்கு அடுத்தநாள் இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத வன்னிப் பிரதேசத்துக்குச் செல்லும். - இவ்வாறு தகவல் வெளியிட்டார் அமைச்சர் தி.மகேஸ்வரன்.

நேற்று பிரதமர் ரணில் விக்கிரம

(12ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம்

வலி.தெற்கு,டிசெ.22

1983 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் நியமனம் பெற்று ஆசிரியர்களாகக் கடமையாற்றிய பெண் ஆசிரியர்கள் பலர் விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்தில் சேர்ந்து கொள்ளும் பொருட்டு தமது விருப்புரிமைப் பத்திரத்தை அக்காலத்தில் சமர்ப்பிக்கத் தவறிவிட்டனர். இதன்காரணமாக அவ்வாசிரியர்கள் விதவைகள், அநாதைகள் இலக்கத்தைப் பெற்றுக்கொள்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு விருப்புரிமைப் பத்திரத்தைச் சமர்ப்பிக்கத் தவறியவர்களுக்கு அதனைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 2002 ஆம் ஆண்டு பெப்ரவரி முதலாம் திகதிவரை விருப்புரிமைப் பத்திரத்தைச் சமர்ப்பிப்பதற்காக கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளது.

வலிகாமம் கல்விவலய ஆசிரியர்கள் எவரேனும் இருப்பின் வலய அலுவலகத்துடன் தொடர்புகொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வி.இராசையா அறிவித்துள்ளார். (க-152)

# புலிகள் இயக்கத்துக்கு ஆஸி. அரசும் தடை!

கொழும்பு,டிசெ.22

ஆஸ்திரேலியாவும் விடுதலைப் புலிகள் இயக்கத்தைப் பயங்கரவாத அமைப்புகள் பட்டியலில் சேர்த்துள்ளது.

தடைசெய்யப்பட்ட பயங்கரவாத இயக்கங்களின் பட்டியலை ஆஸ்திரேலியா அரசு நேற்று வெளியிட்டது.

2001 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 28 ஆம் திகதி ஐக்கியநாடுகள் சபையினால் நிறைவேற்றப்பட்ட - ஆயிரத்து 373 ஆம் இலக்க - பயங்கரவாத அமைப்புகள் தடைச்சட்டத்துக்கு அமையவே ஆஸ்திரேலியாவின் இந்தமுடிவு எடுக்கப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டது.

கொழும்பிலுள்ள ஆஸ்திரேலியத் தூதரகம் நேற்று இது தொடர்பாக அறிவித்தலொன்றை வெளியிட்டது.

உலகில் அதிகரித்துள்ள பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்தும் முகமாகவே - ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை நிறைவேற்றியுள்ள தீர்மானத்துக்கமைய - பயங்கரவாத இயக்கங்களுக்கு நிதி சேகரிப்பதையும், அவற்றுக்கு நிதியுதவி அளிப்பதையும் தடைசெய்ய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியாவின் பட்டியலில் ஒஸாமா பின்லேடனின் அல்கெய்டா, தலிபானுடன் தொடர்புடைய இயக்கங்கள், பலஸ்தீன ஹமாஸ், ஹிஸ்புல்லா, விடுதலைப் புலிகள், ஐ.ஆர்.ஏ. என்பன பிரதானமாக உள்ளடக்கப்பட்ட இயக்கங்கள் ஆகும்.

இதன்மூலம் ஆஸ்திரேலியப் பிரஜைகள், குறிப்பிட்ட பயங்கரவாத இயக்கங்களின் சொத்துகள், நிதிகள் என்பவற்றைக் கையாள்வதும், அவற்றுக்கு நிதி சேகரித்துக்கொடுப்பதும் சட்டவிரோத நடவடிக்கைகளாகத் தடைசெய்யப்பட்டுள்ளன.

கனடா கடந்த மாதத்தில் விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடைசெய்தது.

ஏற்கனவே பிரிட்டன், இந்தியா, அமெரிக்கா ஆகியன விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடைசெய்துள்ளன. (உ-4)

## ஐவர் கைது!

தென்மராட்சி,டிசெ.22

தொண்டமனாறு செல்வச்சந்நிதி ஆலய பிரதம அர்ச்சகர் வீட்டினுள் புகுந்து தாக்குதல் நடத்தியவர்களில் உள்ளூர்வாசிகள் ஐந்து பேரை வல்வெட்டித்துறைப் பொலீஸார் கைது செய்து பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

இந்த 5 பேரையும் தலா 5 ஆயிரம் ரூபா பிணையில் செல்ல நீதிவான் உத்தரவிட்டார்.

இதேவேளை, இச்சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனக்கருதப்படும் வலிகாமத்தைச் சேர்ந்த ஏனையோரைக் கைது நீதிமன்றில் ஆஜர் செய்யுமாறும் நீதிவான் உத்தரவிட்டார். (க-117)

## பரிசளிப்பு விழா

நல்லூர் சயன்ஸ் அக்கடமி நிறுவனத்தினால் நடத்தப்பட்ட பரீட்சையில் சிறப்புத்தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கான பதக்கம் சூட்டலும் பரிசளிப்பு விழாவும் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு நிறுவன மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் ஆர்.மருதலிங்கம் கலந்துகொள்கிறார். (க-10)

## ஆசிரிய கலாசாலை மாணவர் ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம்,டிசெ.22

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் தற்போது பயிற்சியில் ஈடுபட்டிருக்கும் ஆசிரிய மாணவர்களுக்கான ஒன்றுகூடல் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 10 மணிக்கு கலாசாலையில் நடைபெறவுள்ளது.

உள்வாரிப் பரீட்சை பற்றி கலந்தாலோசிக்க இருப்பதால் மாணவர்கள் அனைவரையும் ஒன்றுகூடலில் பங்குபற்றுமாறு கலாசாலை அதிபர் அறிவித்துள்ளார். (க-8)

## கிறிஸ்மஸ் நாடக பிரதியாக்க போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,டிசெ.22

கிறிஸ்மஸ் தினத்தையொட்டி யாழ். திருமறைக் கலாமன்றத்தால் நடத்தப்பட்ட நாடகப் பிரதியாக்கப் போட்டிகளின் முடிவுகள் வெளியாகியுள்ளன.

மல்லாகம், கோட்டைக்காடைச் சேர்ந்த குணசேகரம் சுதர்சன் எழுதிய "உயிர்க் கற்கள்" என்ற நாடகப் பிரதி முதலாம் பரிசுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், பிரதான வீதியைச் சேர்ந்த கு.இராயப்பு எழுதிய "புதிய பிறப்பு" என்னும் நாடகப் பிரதி இரண்டாம் பரிசுக்கும் கொய்யாத் தோட்டம், புது வீதியைச் சேர்ந்த கே.டொறின சுகந்தா எழுதிய "விடியலைத் தேடும் பறவை" என்னும் நாடகப் பிரதி மூன்றாம் பரிசுக்கும் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

இவர்களுக்கான பரிசில்கள் எதிர்வரும் 28ஆம் திகதி யாழ்.திருமறைக் கலாமன்றத்தில் நடைபெறவுள்ள ஒளிவிழா நிகழ்வின்போது வழங்கப்படவுள்ளதாக திருமறைக் கலாமன்றப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார். (க-6)

### யுத்த அனர்த்தங்கள் காரணமாக

# அவயவங்கள் இழந்த ஆதரவற்ற சிறுவர்கள் ஜேர்மனில் இலவசமாகச் சிகிச்சை பெற வசதி

யாழ்ப்பாணம்,டிசெ.22

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் யுத்த நடவடிக்கைகளினால் அவயவங்களை இழந்த ஆதரவற்ற சிறுவர், சிறுமியர்களுக்கு மருத்துவ சிகிச்சைகளை வழங்குவதற்கும், செயற்கைக் கால்களை வழங்குவதற்கும் "பீஸ் வில்லேஜ் ஸ்ரீலங்கா" என்ற நிறுவனம் முன்வந்துள்ளது.

இலங்கையில் தற்போது வசித்து வரும் டியட்மார் டோரிங் என்ற ஜேர்மன் பிரஜை ஒருவரைத் தலைவராகக் கொண்டு செயற்படும் இந்த அமைப்பு, அவயவங்களை இழந்த சிறுவர், சிறுமியர்களை மேலதிக சிகிச்சைகளுக்காக ஜேர்மனுக்கு அழைத்துச் செல்லவும் -

இவ்வாறு அழைத்துச்செல்லப்படும் அனைத்து நலிவுற்றவர்களுக்குமான விமானக்கட்டணம் உட்பட அனைத்துச் செலவினங்களை இலவசமாக வழங்கவும் முன்வந்துள்ளது.

சிலாபத்தில் உள்ள வலஹாப்பிட்டிய என்ற கிராமத்தில் அவயவங்களை இழந்தோருக்கான சிகிச்சை நிலையம் ஒன்றும் இந்த அமைப்பினால் நிறுவப்பட்டுள்ளது.

**உணவு விடுதி வசதி**

இந்த நிலையத்தில் ஏழ்மைக் குடும்பங்களைச் சேர்ந்த 14 வயதுக்குக் குறைந்த சிறுவர், சிறுமியர்கள் சிகிச்சையைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் -

சிகிச்சைக் காலத்தில் சம்பந்தப்பட்ட சிறார்கள் மற்றும் பாதுகாவலர்கள் ஆகியோருக்கான உணவு, விடுதி வசதிகள் அனைத்தும் இலவசமாகச் செய்துகொடுக்கப்படும் என்றும் -

'பீஸ் வில்லேஜ் ஸ்ரீலங்கா' என்ற அமைப்பு விடுத்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'பீஸ் வில்லேஜ் ஸ்ரீலங்கா', 'பீஸ் வில்லேஜ் இன்டர்நேஷனல்' என்ற சர்வதேச அமைப்பின் கிளை நிறுவனமாகும். இந்த நிறுவனம் ஆப்கானிஸ்தான், வியட்நாம் போன்ற நாடுகளிலும் இத்தகைய மனிதாபிமான உதவிகளை மேற்கொண்டுவருகின்றது.

மேற்படி நாடுகளில் இருந்து சுமார் 5 ஆயிரம் சிறுவர், சிறுமியர்கள் ஜேர்மனுக்கு அனுப்பப்பட்டு மேலதிக சிகிச்சையும் பெற்றுள்ளனர்.

ஜனவரி மாதத்தின் இரண்டாவது வாரத்தில் இரண்டு விசேட வைத்திய நிபுணர்கள் இவ்வாறான சிகிச்சைகளை வழங்குவதற்காக இலங்கை வந்து ஒருமாத காலம் தங்கியிருப்பர். அத்துடன் செயற்கைக்கால் தயாரிப்பது தொடர்பாக ஐந்து இளைஞர்களுக்குப் பயிற்சியும் வழங்குவர். -

மேற்படி சிகிச்சையைப் பெற விரும்புவோர் "MR. DIETMAR DOERING, PEACE VILLAGE SRI LANKA, C/O AQUARIOUS BEACH HOTEL, BEACH ROAD, MARAWILA." என்ற முகவரியுடன் தொடர்புகொள்ளமுடியும் - என்று அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-7)

### அப்புத்தளையில் நேற்று

# இருநூறு அடி பள்ளத்தினுள் பயணிகள் வான் புரண்டது

## ஒருவர் பலி; எண்மர் படுகாயம்

அப்புத்தளை,டிசெ.22

அப்புத்தளை நகரில் இருந்து நேற்றுப் பிற்பகல் தம்பேதன்னை நோக்கிச் சென்றுகொண்டிருந்த பயணிகள் வான் ஒன்று சுமார் இருநூறு அடி பள்ளத்தில் வீழ்ந்து புரண்டு விபத்துக்குள்ளானதில் அதே இடத்தில் ஒருவர் பலியானார். எட்டுப்பேர் கடும் காயங்களுக்குள்ளாகினர்.

காயமடைந்தவர்கள் பதுளை, தியத்தலாவை வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டனர். இருவரினது நிலை கவலைக்கிடமாகவுள்ளது என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. விபத்தில் இறந்தவர் இராமன் என்ற 56 வயது முதியவராவார். அப்புத்தளை பொலீஸார் விபத்துக்குறித்து விசாரணை செய்கின்றனர். (உ)

# பண்டிகை முற்பணம் வழங்க நிதி எடுத்துச் சென்றவர் கைது!

### கிழக்கில் சம்பவம்

செங்கலடி,டிசெ.22

வாகரைக் கட்டுமுறிவு வீதி மற்றும் குளப்புனரமைப்புப் பணியாளர்களுக்கான பண்டிக்கைக் கால முற்பணத்தை எடுத்துச்சென்ற மூவர் கடந்த புதன்கிழமை மாலை இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வாகரை கட்டு முறிவு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் க.குணம், பொருளாளர் எஸ். இந்திரன் ஆகியோரும் மற்றும் ஒருவருமே கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கடந்த புதன்கிழமை பிற்பகல் வாழைச்சேனையில் இருந்து நான்கு லட்சம் ரூபா பணத்துடன் இவர்கள் பஸ்வண்டியில் பயணம் செய்துள்ளனர். அப்போதே அவர்கள் கைது செய்யப்பட்டதுடன் வியாழனன்று வாழைச்சேனை பொலீஸ் நிலையத்தில் அவர்கள் ஒப்படைக்கப்பட்டனர். எதிர்வரும் திங்கட்கிழமை அமர்வு நீதிவான் நீதிமன்றத்தில் அவர்கள் ஆஜர்படுத்தப்படுவர் என்று வாழைச்சேனைப் பொலீஸ் பொறுப்பதிகாரி நிமால் அன்ரனி தெரிவித்தார்.

நியாத் திட்டத்தின் கீழ் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியில் மேற்கொள்ளப்படும் இந்தப் புனரமைப்புத் திட்டத்தில் பணியாற்றும் பணியாளர்களுக்கு நத்தார் பண்டிகை முற்பணக் கொடுப்பனவு வழங்க இப்பணம் எடுத்துச்செல்லப்பட்டது என்று தெரிகிறது. பணத்தை எதிர்பார்த்திருந்த பணியாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். (உ)

# ரத்வத்தையின் புத்திரர் இருவரையும் கைதுசெய்ய 'இன்டர்போல்' உதவி!

மடவளை முஸ்லிம் இளைஞர்கள் 10 பேர் படுகொலை செய்யப்பட்டது தொடர்பாகத் தேடப்படும் லொஹான் ரத்வத்தை, சானக்க ரத்வத்தை ஆகிய இருவரையும் கைதுசெய்ய உதவுமாறு சர்வதேச பொலிஸுக்கு (இன்டர்போல்) அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சரான அனுருத்த ரத்வத்தையின் புத்திரர்களான இருவரும் இதுவரை கைதுசெய்யப்படவில்லை. இருவரும் வெளிநாட்டுக்குத் தப்பிச் சென்றிருக்கலாம் என்று பொலீஸார் சந்தேகிக்கின்றனர்.

இதனால் அவர்களைக் கைது செய்ய சர்வதேச பொலீஸின் உதவி கோரப்பட்டுள்ளது என்று இரகசியப் பொலீஸ் பிரிவின் இயக்குநர் பி.டி. சில்வா கூறினார்.

வெளிநாட்டுக்குத் தப்பிச்செல்லாது உள்நாட்டில் இருந்தால் அவர்கள் பற்றிய தகவல்களைத் தெரிவிக்கும்படி இரகசியப் பொலீஸ் பிரிவு கேட்டுள்ளது. (க)

# நாட்டில் சமாதானத்தை நிலைநாட்ட நல்லதொரு தருணம் கிடைத்துள்ளது

### இந்து சமயப் பேரவை மகிழ்ச்சி

யாழ்ப்பாணம்,டிசெ.22

விடுதலைப் புலிகளின் யுத்த நிறுத்த அறிவிப்பை ஐ.தே.கட்சியும், பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும் தக்க முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

நாட்டில் சமாதானத்தை நிலைநாட்ட நல்லதொரு தருணம் கிடைத்துள்ளது.

- இவ்வாறு அறிவித்திருக்கிறது. இந்து சமயப் பேரவை.

இது தொடர்பாக இந்த சமயப் பேரவை விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பன்னெடுங்காலமாகத் தீர்க்கப்படாதிருக்கும் இனப்பிரச்சினைக்கு ஆக்கபூர்வமான நடவடிக்கை மேற்கொள்ளும் வகையில் தமிழீழ விடுதலைப்புலிகள் யுத்தநிறுத்த அறிவிப்பை விடுத்துள்ளனர்.

இலங்கையில் கடந்த கால் நூற்றாண்டுக்கு மேலாக இடம்பெற்று வரும் இன மோதல்கள் முடிவுக்கு வரவேண்டுமானால் திரிகரண சுத்தியோடு இலங்கை அரசு புலிகளுடன் பேச்சை ஆரம்பிக்க வேண்டும்.

நடைபெறும் போரால் எமக்கு ஏற்பட்டுள்ள அனர்த்தங்கள், அழிவுகளை எழுத்தில் அடக்கிவிட முடியாது. தமிழ் மக்களும், ஏன் சிங்கள மக்களும் இந்தப் போரால் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

வாழ வேண்டிய தமிழ், சிங்கள இளைஞர்கள் போர்க்களத்தில் மாண்டு மடிகின்றனர். இதற்கு ஒரு முடிவு ஏற்படவேண்டும் என்பதை வலியுறுத்தி கடந்த பொதுத் தேர்தலில தமிழ், சிங்கள மக்கள் ஒரே அணியில் திரண்டு தமது எண்ணத்தைத் தெளிவாக வெளிப்படுத்தி உள்ளனர்.

இதனைக் கருத்திற்கொண்டு சகல கட்சிகளும் தமிழீழ விடுதலைப் புலிகளின் யுத்தநிறுத்த அறிவிப்புக்கு மதிப்பளித்து இந்த நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த மிகுந்த தியாக சிந்தையுடன் செயற்பட முன்வருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**இந்தியாவின் தார்மீகக் கடமை**

மேலும் எமது ஆத்மீக பாரம்பரியங்களுக்கு உறைவிடமாக விளங்கும் இந்தியா, குறிப்பாக இலங்கை வாழ் இந்துக்களைப் பாதுகாக்க வேண்டுமாயின் தற்போது ஏற்பட்டுள்ள சமாதான சூழ்நிலையை வலுவடையச செய்வற்கு பேராதரவு நல்கவேண்டும்.

இந்தத் தார்மீகக் கடமையை இந்திய அரசு நிறைவேற்றாது போனால் இலங்கைத் திருநாட்டில் இந்துக்கள் முழுமையாக இல்லாதொழிக்கப்படுவதற்கான முழுப் பொறுப்பையும் ஏற்கவேண்டிவரும்.

இலங்கையில் உள்ள சகல அரசியற் கட்சிகளும் அனைத்து சமயத் தலைவர்களும் இலங்கை, இந்திய அரசுகளும் தமிழீழ விடுதலைப் புலிகளின் யுத்தநிறுத்த அறிவிப்புக்கு மதிப்பளித்து சமாதானத்தை நிலைநாட்ட ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு எல்லாம்வல்ல ஸ்ரீ பார்வதி சமேத பரமேஸ்வரன் திருவருளை வேண்டி நிற்கின்றோம் - என்று அதில தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-7)



அஜன்ரீனாவில் ஜனாதிபதி பெர்னாண்டோ டி லா றுவாவின் அரசியல் கொள்கைகளுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தியோரை பொலீஸார் தடியடி மற்றும் கண்ணீர் புகைக் குண்டுப்பிரயோகம் நடத்தி கலைந்துபோகச் செய்தனர். இந்த நடவடிக்கையின் போது பொலிஸாரின் தடியடிக்கு இலக்காகி காயமடைந்து வீதியில் விழ்ந்து கிடக்கும் எதிர்க் கட்சி ஆர்ப்பாட்டக்காரர் ஒருவரையும் அவரைச் சுற்றி நிற்கும் பொலீஸாரையும் படத்தில் காணலாம்.

## பிந்திய நிலைவரம்

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் பிரிட்டனுக்கு விஜயம் செய்துள்ளார். அவர் நேட்டோ அமைப்புடன் பயங்கரவாதம் மற்றும் ஆப்கான நிலைவரம் என்பன குறித்து பேச்சு நடத்துவார்.

☆ ☆ ☆

பாகிஸ்தானுக்குள் நுழைய முயன்ற தலிபான் தலைவர்கள் சிலரை பாகிஸ்தானிய உளவு அமைப்பின் அதிகாரிகள் தடுத்து நிறுத்தி விட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

☆ ☆ ☆

ஆப்கானிஸ்தானில் இடைக்கால அரசாங்கம் பொறுப்பேற்றதும் காபூல் நகர வீதிகளில் ஆயுதப் பாவனை கட்டுப்படுத்தப்படும் என்று ஆப்கான் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

☆ ☆ ☆

கடந்த ஒக்ரோபர் மாதம் 7 ஆம் திகதி ஆப்கானிஸ்தானில் அமெரிக்கத் தாக்குதல்கள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் தீவிரவாதிகளின் - குறைந்தது - 11 பயிற்சி முகாம்கள் முற்றாக அழிக்கப்பட்டன என்று ஜோர்ஜ் டபிள்யூ.புஷ் தெரிவித்தார். (ம)

# ஆப்கான் இடைக்கால அரசு இன்று பதவியேற்கின்றது!

காபூல்,டிசெ.22

ஆப்கானிஸ்தானின் இடைக்கால அரசு தலைநகர் காபூலில் இன்று பதவியேற்கின்றது.

பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஹமீத் ஹர்சே இடைக்கால அரசின் புதிய பிரதமராகப் பதவிப்பிரமாணம் செய்துகொள்வார். புதிய அமைச்சர்களும் இன்று பதவிப்பிரமாணம் செய்துகொள்வார்கள்.

இன்றைய பதவியேற்பு நிகழ்வில் உலக நாடுகள் பலவற்றினதும் பிரதிநிதிகள் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வில் பாகிஸ்தானின் சார்பில் அந்த நாட்டு வெளிவிவகாரத் துறை அமைச்சர் அப்துல் சர்தார் கலந்துகொள்வார் என்று பாகிஸ்தான அரசு அறிவித்துள்ளது. ஆனால் அப்துல் சர்தார் இந்த நிகழ்வில் கலந்துகொள்ளக் கூடாது என்று ஆப்கான் எச்சரித்துள்ளதாக ஒரு செய்தி தெரிவித்தது.

ஆப்கானுக்கான இந்தியத் தூதரகமும் இன்று காபூலில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இதற்கிடையில் -

ஆப்கானிஸ்தானில் அமைதிப் பணிகளில் ஈடுபட பன்னாட்டு படைகளுக்கு (ஐ.எஸ்.ஏ.எவ்) ஐ.நா. பாதுகாப்பு சபை அனுமதி அளித்துள்ளது.



பன்னாட்டுப் படைகள் ஆப்கானிஸ்தானுக்கு வருவதற்கான முன்னேற்பாடுகளை கவனிக்க என ஆப்கானில் தரையிறங்கியுள்ள அமெரிக்கப் படையினர்.

பிரிட்டன் தலைமையிலான சர்வதேச பாதுகாப்பு உதவிப் படைகள் (ஐ.எஸ்.ஏ.எவ்) ஆப்கானிஸ்தானுக்குச செல்வதற்கான முன் ஏற்பாடுகளைக் கவனிக்க என அமெரிக்காவின் விசேட இராணுவப் பிரிவு ஒன்று காபூல் போய்ச் சேர்ந்துள்ளது.

ஐ.எஸ்.ஏ.எவ். படைகள் ஆறு மாத காலம் மட்டுமே ஆப்கானில் தங்கியிருந்து பணியாற்றும் என்று ஐ.நா. அறிவித்துள்ளது.

பன்னாட்டுப் படைகள் ஆப்கானுக்கு வந்து சேர்ந்ததும் காபூலிலிருந்து வடக்குக் கூட்டணிப் படையினர் வெளியேறி விடுவர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

### தீவிரவாதக் குழு எச்சரிக்கை

இந்திய நகரங்கள் மீது பெரும் எடுப்பில் மேலும் பல தாக்குதல்களை நடத்தப்போவதாக ஜெய்ஷி மொஹமட் என்ற காஷ்மீர் தீவிரவாதக்குழு எச்சரிக்கை செய்துள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பின் செய்தித் தொடர்பாளர் ஒருவர்

உலக அரங்கில்

அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

எதிர்வரும் நாள்களில் இராணுவ மற்றும் துணை இராணுவ நிலைகள் மீது தாக்குதல் நடத்தப்படும். பெரும சேதங்களை விளைவிக்கக் கூடிய வகையில் இந்தத் தாக்குதல்கள் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# இந்தியா - பாகிஸ்தான் பரஸ்பரம் ஷெல் வீச்சு

புதுடில்லி,டிசெ.22

ஜம்மு காஷ்மீரில் கட்டுப்பாட்டு எல்லைக் கோட்டுக்கு அருகில் இந்தியாவும் பாகிஸ்தானும் நேற்று பரஸ்பரம் ஷெல் தாக்குதலில் ஈடுபட்டன.

இந்தத் தாக்குதலுக்கு இரு தரப்புகளும் ஒருவரையொருவர் மாறிமாறி குற்றஞ்சாட்டி வருகின்றனர். சுமார் ஒரு மணி நேரத்துக்கும் மேல் இந்த ஷெல் தாக்குதல் இடம்பெற்றது.

தொடர்ந்து இரு தரப்புகளும் தத்தமது முன்னணி நிலைகளில் இருந்து கடும் துப்பாக்கிப் பிரயோகமும் நடத்தின.

ஜம்முவில் நௌஷேரா பிரிவில் எல்லைக் கட்டுப்பாட்டுப் பகுதியில் பாகிஸ்தானின் தாக்குதலுக்கு இந்தியா தகுந்த பதிலடி வழங்கியதாகவும் -

பதில் தாக்குதலில் பல பாகிஸ்தானிய நிலைகள் அழிக்கப்பட்டதாகவும் - இந்தியா தெரிவித்துள்ளது.

எல்லையின் மற்றுமொரு பகுதியிலும் இரு தரப்புகளுக்கும் இடையில் பெரும் துப்பாக்கிச் சண்டை இடம்பெற்றுவருவதாகவும் கூறப்பட்டது. எல்லையில் தொடர்ந்தும் பெரும் பதற்றம் நிலவி வருகின்றன.

# ஆக்கிரமித்த பகுதிகளிலிருந்து இஸ்ரேலியப் படைகள் வாபஸ்

ஜெருசலேம்,டிசெ.22

பலஸ்தீனக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் தாம் ஆக்கிரமித்திருந்த சில பகுதிகளைவிட்டு இஸ்ரேலியப் படைகள் வெளியேறியுள்ளன.



பலஸ்தீன நகரங்களில் இருந்து வெளியேறும் இஸ்ரேலிய டாங்கிகள்.

புதுப்பிக்கப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் ரமழா நகரின் வடக்கு மற்றும் தெற்கு நகர்களில் இருந்தும் மற்றும் சில பகுதிகளில் இருந்தும் இஸ்ரேலியப் படைகள் வாபஸ் பெறப்படுகின்றன. எனினும் இது உத்தியோகபூர்வ வாபஸ் நடவடிக்கை அல்ல என்று இஸ்ரேலியத் தரப்புத் தெரிவித்தது.

கடந்த புதன்கிழமை இஸ்ரேல் மற்றும் பலஸ்தீனப் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு இடையில் இடம்பெற்ற பேச்சுக்களை அடுத்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

எனினும் வன்முறைகளை முடிவுக்குக் கொண்டு வருமாறு அமெரிக்காவும் வேறுசில மேற்கு நாடுகளும் இரு தரப்புக்களுக்கும் கொடுத்து வரும் கடும் அழுத்தத்தை அடுத்தே இஸ்ரேல் படை வாபஸுக்கு இணங்கியது என்றும் -

யஸீர் அரபாத் பலஸ்தீனத் தீவிரவாதிகளுக்கு எதிராகத் கடும் நடவடிக்கை எடுத்து வருகின்றார் என்றும் -

செய்திகள் தெரிவித்தன.

மேற்குக் கரையில் கடந்த ஒன்றரை மாதகாலமாக இடம்பெற்று வரும் வன்முறைகளை முடிவுக்குக் கொண்டு வருவதில் மேற்கு நாடுகள் தற்போது தீவிர கவனம் செலுத்திவருகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம-10)

# மஷார் - ஏ ஷெரிப் நகர சந்தையில் குண்டு வெடிப்பு; 100 பேர் காயம்

காபூல்,டிசெ.22

ஆப்கானிஸ்தானின் வடபகுதி நகரான மஷார் - ஏ ஷெரிப்பில் உள்ள பிரதான சந்தையில் நேற்று சனநெரிசல் மிகுந்த நேரத்தில் குண்டு ஒன்று வெடித்தது. இதில் பொதுமக்கள் 100 பேர் காயமடைந்தனர். அவர்களில் ஆறு பேர் ஆபத்தான நிலையில் உளளனர்.

சந்தையின் பணம்மாற்றுப் பிரிவுப் பகுதியில் கிரனேட் ஒன்று வீழ்ந்து வெடித்ததைத் தான் கண்டதாக பொது மகன் ஒருவர் கூறினார் என்று 'அஸோஸியேட்டட் பிறஸ்' செய்தி நிறுவனம் தெரிவித்தது.

இந்தத் தாக்குதல் தீவிரவாதிகளின செயல் என உள்ளூர் சுகாதார அமைச்சர் மிர்வைஸ் ஏப்டி ஷர்ஷாத் தெரிவித்தார்.

மஷார் - ஏ ஷெரிப் நகர், எதிரணிப படைகளின் கட்டுப்பாட்டின் கீழ் வந்த பின்னர் தற்போதே அங்கு இயல்பு வாழ்க்கை திரும்பிக் கொண்டிருக்கின்றது. இந்த நிலையில் நகரம் எதிரணிப் படைகளின் கைகளில் வந்த பின்னர் இடம்பெறும் முதலாவது குண்டுத் தாக்குதல் இதுவாகும். தப்பியோடியுள்ள தலிபான்களும் அல கெய்டா உறுப்பினர்களும் கெரில்லாத் தாக்குதல்களை நடத்துவதற்கு ஆயத்தமாகியுள்ளதை இந்தத் தாக்குதல் எடுத்துக் காட்டுவதாக அமையக் கூடும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ம-7-10)

# ஈரான் எண்ணெய்க் கப்பல் மீது அமெரிக்கக் கடற்படை தாக்குதல்

தாக்கப்பட்ட கப்பல்



தெஹ்ரான்,டிசெ.22

ஈரானில் பதிவு செய்யப்பட்ட சவூதி எண்ணெய்த் தாங்கிக் கப்பல் மீது அமெரிக்கக் கடற்படை தாக்குதல் நடத்தியுள்ளதற்கு ஈரான் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

வளைகுடாக் கடலில் வைத்து கடந்த புதன்கிழமையன்று இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் அது குற்றஞ்சாட்டியுள்ளது. தன்பாட்டில் சென்று கொண்டிருந்த எண்ணெய்த் தாங்கிக் கப்பலை வழிமறித்த அமெரிக்கக் கடற்படையின் பீரங்கிக்கப்பல்கள் அதன் மீது கண்டபடி சுட்டதாக ஈரானிய தொலைக்காட்சி தெரிவித்தது. இந்தத் தாக்குதலால் கப்பலின் மாலுமிகள் அறை சேதமானதாகவும் அது கூறியது.


இதேவேளை -

ஈராக்கில் இருந்து எண்ணெய் கடத்திச் செல்லும் கப்பல் என அமெரிக்கப் படையினர் தவறுதலாக எண்ணியதாலேயே ஈரானியக் கப்பல் மீது தாக்குதல் நடத்தப்பட்டது என்று சுவிஸ் நாட்டுத் தூதுவர் தெரிவித்தார்.(ம-10)

# மேலும் இரண்டு அமைப்புகள் பயங்கரவாதப் பட்டியலில் சேர்ப்பு

நியூயோர்க்,டிசெ.22

அமெரிக்கா தனது பயங்கரவாதிகள் பட்டியலில் மேலும் இரு அமைப்புகளையும் சேர்த்துள்ளது.



புதிய பயங்கரவாத பட்டியல் குறித்து அறிவித்த புஷ் மற்றும் பவல்.

பாகிஸ்தானைத் தளமாகக் கொண்டு இயங்கும் 'உம்மா தமிர் - ஏ நௌ' மற்றும் காஷ்மீரில் இயங்கி வரும் 'லக்ஸர் ஈ தொய்பா' ஆகிய இரு அமைப்புகளையுமே அமெரிக்கா புதிதாகப் பயங்கரவாதப் பட்டியலில் சேர்த்துள்ளது.

ஒஸாமா பின்லேடனின் அல்கெய்டா அமைப்புக்கு அணு ஆயுதங்கள் தொடர்பான தகவல்களை 'உம்மா - தமிர் ஏ நௌ' என்ற அமைப்பே வழங்கியதாக அமெரிக்கா குற்றஞ்சாட்டியுள்ளது. "லக்ஸர் ஈ தொய்பா பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவுகளைச் சீர்குலைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது" என்று ஜனாதிபதி புஷ் தெரிவித்தார்.

இரு அமைப்புகளையும் பயங்கரவாத அமைப்புகளாக அறிவித்ததை அடுத்து அமெரிக்காவில் அந்த அமைப்புகளுக்கு நிதி கிடைக்கும் வழிகளை அமெரிக்க அரசு மூடியுள்ளது.

பயங்கரவாத அமைப்பாக அறிவிக்கப்பட்டுள்ள 'லக்ஸர் - ஈ தொய்பா' அமைப்பு, அண்மையில் இந்திய நாடாளுமன்றக் கட்டடம் மீதான தாக்குதலில் தொடர்புபட்டிருந்தது என்று இந்தியா குற்றஞ்சாட்டி வருவதும் குறிப்பிடத்தக்கது. (ம-10)

## பொலீஸ்-ஹமாஸ் ஆதரவாளரிடையே

# காஸாவில் நடந்த கலகத்தில் பலஸ்தீனர் ஒருவர் உயிரிழப்பு



காஸாவில் தயார் நிலையில் இருக்கும் பலஸ்தீன கலகம் அடக்கும் பொலீஸார்.

ஜெருசலேம்,டிசெ.22

மேற்குக்கரையின் காஸா பகுதியில் ஹமாஸ் இயக்கத் தலைவர் ஒருவரைக் கைது செய்யச்சென்ற பலஸ்தீனப் பொலீஸாருக்கும் ஹமாஸ் இயக்க ஆதரவாளர்களுக்கும் இடையே இடம்பெற்ற மோதலில் பலஸ்தீனர் ஒருவர் உயிரிழந்தார்.

ஹமாஸ் தலைவரான அப்துல் அஸீஸ் அல்-ரன்டிஸி என்பவரைக் கைது செய்யச் சென்ற சமயமே பொலீஸாருக்கும் ஹமாஸ் ஆதரவாளர்களுக்கும் இடையே இந்த மோதல் இடம்பெற்றதாக பலஸ்தீனப் பொலீஸார் தெரிவித்தனர். இந்த மோதலில் 18 பொலீஸாரும் 5 பொது மக்களும் காயமடைந்தனர்.

அப்துல் அஸீஸைக் கைது செய்யுமாறு பலஸ்தீன அதிகார சபைக்கு சர்வதேசச் சமூகம் நெருக்குதல்களைக் கொடுத்துவருகின்றது. இதனை அடுத்தே அவரைக் கைது செய்ய பலஸ்தீனப் பொலீஸார் முயன்றுவருகின்றனர்.

காஸாவில் உள்ள அவரது வீட்டுக்கு பொலீஸார் செல்லும் முன்பே தகவல் கேட்டு அங்கு பெரும் எண்ணிக்கையான ஹமாஸ் ஆதரவாளர்கள் திரண்டனர். அவர்களில் சிலரிடம் ஆயுதங்களும் இருந்தன. அவர்கள் பலஸ்தீனப் பொலீஸாரை நோக்கிச் சுட்டனர். இதனை அடுத்து அங்கு மோதல் ஆரம்பமானது.

பலஸ்தீனப் பொலீஸார் இரு தடவைகள் பெரும் முயற்சி எடுத்தும் அப்துல் அஸீஸைக் கைது செய்யமுடியவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. (ம-10)

# குடாநாட்டுக்குத் தனியார் துறையினரும் எரிபொருள் எடுத்துவர விரைவில் அனுமதி

கொழும்பு,டிசெ.22

குடாநாட்டுக்குத் தனியார் துறையினரும் எரிபொருள் வகைகளை எடுத்துச்செல்ல விரைவில் அனுமதி கிடைக்கவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மேற்கொண்டுள்ளது.

இந்து விவகார அமைச்சர் தி. மகேஸ்வரன் கொழும்பில் பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரிகளுடனும் மின்சக்தி, எரிபொருள் பிரதி அமைச்சருடனும் நடத்திய பேச்சுக்களையடுத்து இதற்கான ஏற்பாடுகள மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குடாநாட்டில் எரிபொருள்களுக்கு ஏற்பட்டிருக்கும் தட்டுப்பாட்டை நீக்குவது தொடர்பாக அமைச்சர் மகேஸ்வரன் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் தஹம்ம் விமலசேன, மின்சக்தி, எரிபொருள் பிரதி அமைச்சர் சாகல ரத்நாயக்கா ஆகியோருடன் பேச்சு நடத்தினார்.

குடாநாட்டு மக்களுக்கு எரிபொருள்களைத் தாராளமாக விநியோகிக்கவும் அதில் உள்ள தலையீடுகளைத் தவிர்க்கவும் உடனடி நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் அதிகாரிகளிடம் கேட்டுக்கொண்டார்.

குடாநாட்டுக்குத் தனியார் வர்த்தகர்களும் எரிபொருள்களை எடுத்துச் செல்ல அனுமதித்தால் அங்கு தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்பிருக்காது என்று அமைச்சர் அப்போது ஆலோசனை தெரிவித்தார்.

பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரிகள் அந்த ஆலோசனையை ஏற்றுக்கொண்டதாக அமைச்சர் மகேஸ்வரன் பின்னர் தெரிவித்தார்.

தனியார் வர்த்தகர்கள் யாழ்ப்பாணத்துக்கு எரிபொருள்களை எடுத்துச்செல்வதில் தமக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை என்று பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரிகள் அமைச்சரிடம் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்துக்கு எரிபொருள்களை தனியார் வர்த்தகர்கள் எடுத்துச்செல்ல அனுமதிக்குமாறு கோரும் கடிதம் ஒன்றை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் நேற்றுப் பாதுகாப்பு அமைச்சுக்கு அனுப்பி வைத்தாகத் தெரிவிக்கப்பட்டது.(ஐ)

## குரும்பசிட்டி வளர்மதி சனசமூக நிலையம்

எமது கிராம மக்களின் சுபீட்சத்துக்காக கிராம ஆலயங்கள் சார்பாக இடம்பெறும்

### திருவெம்பாவை
### பூஜையும் கூட்டுப்பிரார்த்தனையும்

இடம்:- அருள்மிகு வசந்த நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம், ஏழாலை தெற்கு.

காலம்:- 2001-12-28 வெள்ளிக்கிழமை அதிகாலை 5.00 மணிமுதல்.


*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

குறிப்பு:- நிதி உதவி செய்ய விரும்புவோர் நிர்வாகத்துடன் தொடர்புகொள்ளவும்.

அ.சக்திவேல், தலைவர். (96189) பொ.பாலசுப்பிரமணியம், செயலாளர்.

## ஏழாவது ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 05 . 06 . 1928



மறைவு 09 . 01 . 1995

பலாலி தெற்கு - வயாவிளான்

### செல்லத்துரை உலகநாதன் J.P.

*(கிராம சேவையாளர்)*

*இல்லையென்னாது எவர்க்கும் உதவிடும்*
*நல்ல மனமும், நாடிவந்தோர்க்கு*
*ஈந்து உவந்து இன்புற்ற வாழ்வும்*
*எல்லோரும் வாழ எண்ணிடும் உழைப்பும்*
*சாந்தம் தவழும் தண்ணளி உருவும்*
*எங்களைப் பிரிந்து ஏழாண்டென்ன*
*எத்தனை காலமும் எண்ணியே வாழ்வோம்.*
*எங்களை வாழ வைப்பீர் நீரே!*

*"உதயகிரி", பலாலி தெற்கு, வயாவிளான்.*

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சுற்றத்தார்.

தற்போதைய முகவரி:- *நாமகள் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.*

(C/19889)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 09 . 08 . 1943



மறைவு 22 . 12 . 1999

### திருமதி நா.இமெல்டா அல்வின் (லக்கி)

*ஆண்டவனில் விசுவாசம் கொண்டவன்*
*இறப்பிலும் உயிர் வாழ்வான்.*

*மானிப்பாய்.* (96187) - குடும்பத்தினர்.

## மருந்து வந்தது

யாழ்.சுகாதாரத் திணைக்களத்துக்கு கொழும்பிலுள்ள மத்திய மருந்துக் களஞ்சியத்தினால் இவ் வருட கடைசிக்காலாண்டுக்கான மருந்து வகைகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

கடந்த புதன்கிழமை இங்கு வந்து சேர்ந்த செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பலில் இம்மருந்து வகைகள் எடுத்து வரப்பட்டுள்ளன. பனடோல் குளிசைகள் இம்முறை அனுப்பி வைக்கப்படவில்லை என்று யாழ். சுகாதாரத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-135)

## விசாரணை பொறுப்பு மாற்றம்

மடவளை கொலைகள் தொடர்பான விசாரணைகள் வடமேல் மாகாணப் பிரதிப் பொலீஸ்மா அதிபர் நிமல் மெதிவக்கயிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. மத்திய மாகாண பிரதிப் பொலீஸ்மா அதிபர் மஹிந்த பாலசூரியா உரிய நடவடிக்கை எடுக்காததை அடுத்தே இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்கா தெரிவித்தார். கண்டி உட்பட நுவரெலியா மாவட்டத்திலும் தேர்தல் காலத்தில் பல வன்செயல்கள் இடம்பெற்றிருக்கின்றன. குறிப்பாக மடவளைச் சம்பவத்தை மூடி மறைக்கவும் விசாரணையை மழுங்கடிக்கவும் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. (ஐ)

## பரீட்சை நிலையம் இடம்மாற்றம்

இமையாணன் அ.த.க. பாடசாலையில் இயங்கிய ஜி.சி.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கான பரீட்சை நிலையம் இன்றுமுதல் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரிக்கு இடம்மாற்றம் செய்யப்படவுள்ளது.

சம்பந்தப்பட்ட பரீட்சார்த்திகள் இன்றுமுதல் உடுப்பிட்டி அ.மி. கல்லூரிக்கு சமுகமளிக்கவேண்டுமென வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஐ-7)


## தாரணி பதிப்பகம் & ஆட்ஸ்

*கலண்டர்கள் கொம்பியூட்டர் டிசைனில் ஸ்கிறீன் பிறிண்டிங் செய்து கொடுக்கப்படும்.*

319 (537), கே.கே.எஸ். வீதி,
(மனோகராச் சந்தி அருகில்)
யாழ்ப்பாணம். (C/19885)

கிளை:
பொன்னாலை வீதி,
மானிப்பாய்.



## விற்பனைக்கு

புதுவருட வாழ்த்து மடல்களும், 2002ஆம் ஆண்டுக்கான (வாடிக்கையாளர்களுக்கு) அன்பளிப்புச் செய்யும் தரமான வண்ண வண்ண றோல் கலண்டர்களும் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ளலாம். மற்றும் போட்டோ பிரதி மெஷின்களுக்கான (Canon, Sharp) உதிரிப்பாகங்களும் (Spare parts), ரோணர் (Toner) முதலியவையும் விற்பனைக்கு உண்டு.

விரையுங்கள்: **C.S.மூர்த்தி,**
**குமரன் ரூரிஸ் இன்,**
*67, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.* (96174)


## இலண்டன் சிவயோகம் இந்து அறக்கட்டளை நிறுவனம்

### வீடு நன்கொடை - விண்ணப்பம்

கந்தரோடையில் அமையும் சிவயோகம் அன்னையர் குடியிருப்பில் 5 புதிய கல் வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. குடும்பத் தலைவரை இழந்து தவிக்கும் விதவைப் பெண்களுக்கு இவ் இல்லங்கள் அன்பளிப்பாக வழங்கப்படவுள்ளன. விண்ணப்பதாரிகளின் உச்சவறுமை, குடும்பப்பொறுப்பு யாவும் கருத்திற்கொண்டு உரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

☆ விண்ணப்பதாரிகள் தமது குடும்ப விவரம் யாவும் அமைந்த வகையில் விண்ணப்பிக்கவும்.

☆ தமது குடும்ப நிலை குறித்து கிராம அலுவலரின் அத்தாட்சியுடன் விண்ணப்பிக்கவும்.

*விண்ணப்ப முடிவு திகதி 31-12-2001 வரை நீடிக்கப்பட்டுள்ளது.*

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:
'நம்பிக்கைப் பொறுப்பாளர்'
சிவயோகம் அன்னையர் குடியிருப்பு,
கந்தரோடை,
சுன்னாகம்.

(96184)

# மரண அறிவித்தல்கள்

## பொன்னம்பலம் விஜயரட்ணம்

*(இளைப்பாறிய சாலைப் பரிசோதகர் - C.T.B.)*

அரியாலையைப் பிறப்பிடமாகவும், கலைவாணி வீதி, கோண்டாவில் வடக்கை வதிவிடமாகவும்கொண்ட பொன்னம்பலம் - முத்தம்மா ஆகியோரின் அருமை மகன் விஜயரட்ணம் நேற்று (21.12.2001) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் திலகவதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான அருளம்பலம் - கனகம்மா தம்பதியினரின் மருமகனும், கிருஷ்ணகுமார், கிருஷாந்தி (U.K.), திருப்பிரியா (யாழ். இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான குலசேகரம்பிள்ளை, கமலாம்பிகை, தவநாதன் (அரியாலை) மற்றும் தவமணிதேவி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், ரகுநாதன் (U.K.), கோகுலநாதன் (U.K.), கமலநாதன் (U.K.), பரமநாதன் (U.K.), விமலநாதன் (U.K.), புனிதவதி சங்கரசிவம் (France) ஆகியோரின் மைத்துனனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.12.2001) சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கலைவாணி வீதி, கோண்டாவில்.* (96186) தகவல்: வி.திலகவதி (மனைவி)

## மரியாம்பிள்ளை வைற்றஸ்

*(ஓய்வுபெற்ற உபதபாலதிபர் - தாளையடி)*

தாளையடியைப் பிறப்பிடமாகவும் தற்போது பாஷையூரை வசிப்பிடமாகவும் கொண்ட மரியாம்பிள்ளை வைற்றஸ் நேற்று (21.12.2001) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மரியாம்பிள்ளை - ஜேற்றுட்டின் தம்பதியினரின் அன்பு மகனும், அருளம்மாவின் அன்புக் கணவரும், ஜெபநேசனின் (சுவிஸ்) அன்புத் தந்தையும், ஜோகனாவின் (சுவிஸ்) அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (22.12.2001) சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தற்போதைய முகவரி: *இல.42, புதுவீதி, பாஷையூர்.* (96183) தகவல்: வை.அருளம்மா (மனைவி)

## திருமதி கனகலிங்கம் புஸ்பராணி

வண்ணாங்கேணி, பளையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி கனகலிங்கம் புஸ்பராணி அவர்கள் நேற்று (21.12.2001) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகலிங்கத்தின் அன்பு மனைவியும், நாகராசா - குஞ்சுப்பிள்ளை (விஸ்வமடு) தம்பதியினரின் மகளும், கிருஷ்ணமூர்த்தி (ஜேர்மனி), நகுலேஸ்வரன் (வவுனியா), ரவீந்திரன், புஸ்பலதா (விஸ்வமடு), உதயதாஸ் (கனடா), புஸ்பவேணி (புலோலி), மனோகரன் (இந்தியா), புஷ்பவதனி (யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.12.2001) சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் தற்காலிக வதிவிடமான உபயகதிர்காமம், புலோலியில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆனைவிழுந்தான் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

*உபய கதிர்காமம், புலோலி.* (96182) தகவல்: புஸ்பவேணி, புஸ்பவதனி (சகோதரிகள்)

## திருமதி சந்தியாப்பிள்ளை திரேசம்மா (ராசமணி)

புதுவீதி, கொய்யாத்தோட்டத்தைப் பிறப்பிடமாகக்கொண்ட காலஞ்சென்ற சந்தியாப்பிள்ளையின் அன்பு மனைவி திரேசம்மா 18.12.2001 செவ்வாயன்று புதுக்குடியிருப்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர் களான சோமு - றோசம்மா தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற துரைசிங்கம், காலஞ்சென்ற கனகமணி, காலஞ்சென்ற துரைரெட்டிணம் மற்றும் ஐயாத்துரை, புஸ்பமணி(பொந்தா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், மலர், ஜெயரெட்டிணம், ஜீவரெட்டிணம் (சுவிஸ்), விஜயரெட்டிணம் (யாழ்.மாநகரசபை), கமலினி, சாந்தினி, சாள்ஸ், றொபின்சன், சிறி (கனடா), மீனா ஆகியோரின் அன்புத் தாயாரும், துரைமணி, ஜெயமலர் (சுவிஸ்), றதி, மரியதாஸ், சிறி, மார்வின், கௌரி, ராஜன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் ஆத்மசாந்திக்காக கொய்யாத்தோட்ட கிறிஸ்து அரசர் ஆலயத்தில் இன்று (22.12.2001) சனிக்கிழமை மாலை 5 மணிக்கு (புதியநேரம்) திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

*31,புதுவீதி, முதலாம் ஒழுங்கை, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம்.* (96188) தகவல்: ச.ப.விஜயரெட்ணம் (மகன்)

## உதயன்

### ஆயரின் அழைப்பு காதில் ஏறுமா?

"யுத்தத்தை நிறுத்தி, பேச்சுக் களை ஆரம்பிக்க வழிசெய்யும் சமாதான முயற்சிகளுக்குப் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் முழு ஒத்துழைப்பைப் பெற்றுத்தாருங்கள்."

- இப்படி பொ.ஐ.முன்னணியின் தலைவரும் ஜனாதிபதியுமான சந்திரிகா குமாரதுங்கவைக் கோரியிருக்கின்றார் யாழ். ஆயர் கலாநிதி வண. தோமஸ் சௌந்தரநாயகம்.

போரை முடிவுக்குக் கொண்டு வரவும் இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வுகாணவும் இலங்கை மக்கள் மிகுந்த ஆர்வம் கொண்டுள்ளார்கள். நடந்து முடிந்த தேர்தலில் மக்கள் ஏகோபித்து வெளியிட்ட தீர்ப்பு இதனையே காட்டுகின்றது என்று அவர் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

எனவே மக்களின் விருப்பத்தை - ஆணையை - நிறைவேற்ற பிரதான எதிர்க்கட்சி என்ற முறையில் பொ.ஐ.முன்னணியின் ஆதரவை ஆளும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வழங்குங்கள் என்று ஜனாதிபதியைக் கேட்டிருக்கின்றார் யாழ்.ஆயர். முன்னர் அமைதித்தீர்வு காண்பதற்கு ஜனாதிபதி குமாரதுங்க முயற்சி எடுத்த வேளை - அதற்கு ஒத்துழைப்பு வழங்குங்கள் என்று ஜனாதிபதி ஐ.தே. கட்சித் தலைமையிடம் மன்றாடிய சமயம் - ஐ.தே.கட்சி அதற்கு ஒத்துழைக்கவில்லை என்பதைச் சுட்டிக் காட்டவும் யாழ்.ஆயர் தவறவில்லை.

என்றாலும் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளையும் கடந்த காலச் சம்பவங்களுக்குப் பழிக்குப்பழிவாங்கும் எண்ணத்தையும் தள்ளிவைத்துவிட்டு நாட்டின் நன்மை கருதி ஒன்றிணைந்து செயற்பட வாருங்கள் என்று அழைப்பு விடுக்கின்றார் யாழ். ஆயர்.

இலங்கையின் இனப்பிரச்சினை கடந்த அரை நூற்றாண்டு காலமாகப் புரையோடிப்போய்க்கிடக்கின்றது.

கடந்த காலங்களில் இலங்கைத் தமிழர்கள் மறுக்கப்பட்ட தமது உரிமைகளுக்காக இலங்கை அரசுடன் சேர்ந்திருந்தும், அரசுக்கு வெளியில் இருந்தும் ஜனநாயக முறையில் பல்வேறு போராட்டங்களை நடத்தி வந்திருக்கின்றார்கள்.

இந்த அஹிம்சைப் போராட்டங்கள் எழுபதுகளின் பிற்பகுதிகளில் ஆயுதப் போராட்டமாக முகிழ்கத் தொடங்குவதற்கு முன்னரும்சரி, பின்னரும்சரி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு இலங்கை அரசுடன் தமிழ்த் தலைவர்கள் பலதடவைகள் சுமுக உடன்பாடுகளுக்குவரத் தவறவில்லை.

காலத்துக்குக் காலம் காணப்பட்ட உடன்பாடுகள் எல்லாம் காலகதியில் கிழித்து வீசப்பட்டன; தமிழர்கள் ஏமாற்றப்பட்டார்கள்.

அதன் விளைவே இன்று நமது நாட்டை உக்கிரப் போருக்குள் பிடித்துத் தள்ளியிருக்கின்றது என்பது நமக்கு நன்கு தெரிந்ததுதான்.

காணப்பட்ட உடன்பாடுகள், இணக்கங்கள் இப்படித் தூக்கி வீசப்பட்டதற்கும் - அதனால் நாடு போயிருக்கும் இன்றைய அவல நிலைக்குள் தள்ளப்பட்டதற்கும் - காரணம் யார்?

உடன்பாடுகள், இணக்கங்கள் காணப்பட்ட காலங்களில் எதிர்த்தரப்பில் இருந்த பெரும்பான்மை இனத்தவரின் கட்சிகளும் அவற்றின் இனவாதப் போக்கும்தான் என்பது சரித்திரப் பாடமாகிவிட்டது.

நாடு பட்டது போதும் என்று சிங்கள தலைவர்களும் மக்களும் கருதுவார்களேயானால் இந்தச் சரித்திர அனுபவங்களிலிருந்து கற்றுக்கொண்ட பாடத்தை அடிப்படையாகக்கொண்டு, இந்தத் தடவை அமைதி முயற்சிக்கு ஏகோபித்து ஒத்துழைப்புத் தந்து, அதை வெற்றிபெறச் செய்ய வேண்டும். நிரந்தரத் தீர்வுக்கு ஒத்துழைக்க வேண்டும்.

அதைவிடுத்து, ஆட்சி இலக்கு ஒன்றே தமது குறிக்கோள் என்ற குறுகிய நோக்கில் அவர்கள் செயற்படுவார்களேயானால் அதன் விளைவு பின்னர் நிவர்த்தி செய்யமுடியாத பேரிழப்பாகவே போய்முடியும் என்பதையும் அவர்கள் உணரவேண்டும்.

எனவே பொ.ஐ.முன்னணியைச் சேர்ந்த ஜனாதிபதியும், ஐ.தே.கட்சியைச் சேர்ந்த பிரதமரும் யாழ்.ஆயர் கோருவதுபோல குறுகிய கட்சி நோக்கு அரசியலை விடுத்து, தாம் அடிக்கடி கூறும் 'புதிய அரசியல் கலாசாரம்' என்ற தமது பேச்சுக்கு செயல்வடிவம் கொடுத்து, நேர்மையுடன் செயற்பட்டு, நமது நாட்டைப் பிடித்திருக்கும் போர் என்ற சாபத்திலிருந்து நாட்டையும் மக்களையும் விடுவிக்கும் அரும்பணியில் ஒன்றிணைந்து பணிபுரிய முன்வரவேண்டும்.

# பெற்றோல் வாங்குவதற்காக மழைக்கு மத்தியிலும் மக்கள் கியூ!

யாழ்ப்பாணம்,டிசெ.22

குடாநாட்டில் நேற்றுமுன்தினம் பரவலாகப் பெய்த அடைமழைக்கு மத்தியிலும் நகரப்பகுதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பொதுமக்கள் வரிசையில் நின்று பெற்றோல் பெற்றதை அவதானிக்க முடிந்தது.

கடந்த சில தினங்களாக எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மோட்டார் சைக்கிள்கள், ஓட்டோ மற்றும் கார்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பெற்றோல் விநியோகிக்கப்பட்டு வருவது தெரிந்ததே.

நகரப்பகுதியில் உள்ள தனியார் கடைகளில் பெற்றோலின் விலை இருமடங்காக அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் அடைமழைக்கு மத்தியிலும் பொதுமக்கள் எரிபொருள் நிலையங்களில் தமது வாகனங்களுடன் வரிசையில் நின்று பெற்றோல் பெற்றுச் சென்றதை அவதானிக்க முடிந்தது.

(ஐ-6)

# இனி மதுபான விற்பனைக்கு அனுமதிப் பத்திரங்கள் இல்லை

கொழும்பு,டிசெ.22

மதுபான விற்பனை அனுமதிப் பத்திரங்கள் இனி வழங்கப்படமாட்டா.

அமைச்சரவை இத்தீர்மானத்தை மேற்கொண்டது.

ஆயினும், உல்லாசப் பயணத் துறையுடன் சம்பந்தப்பட்ட ஹோட்டல்கள், விடுதிகளுக்கு இத்தீர்மானம் பொருந்தாது.

அனுமதிப் பத்திரம் இன்றி இயங்கும் மதுபான விற்பனை நிலையங்களை வேட்டையாடுமாறு, அரசாங்கம் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளது.

அமைச்சரவையின் ஏனைய தீர்மானங்கள் வருமாறு:-

★ 2002ஆம் ஆண்டு முதல் இரண்டு ஆண்டுகளுக்கு பிரதமர், அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள், எம்.பிக்கள் சம்பளத்தை மட்டுமே பெறுவர்.

★ அரசாங்க சபைகள், கூட்டுத் தாபனங்களின் தலைவர்கள், இயக்குநர்களைத் தெரிவுசெய்ய பிரதமர் தலைமையில் குழு.

★ தேர்தல் தினம் முதல் இன்று வரையிலான வன்முறைச் சம்பவங்கள் குறித்து விசாரணை நடத்த நடவடிக்கை.

★ தேர்தல் அறிவிக்கப்பட்டபின் வழங்கப்பட்ட நியமனங்கள், பதவி உயர்வுகள், இடமாற்றங்கள் குறித்து ஆராய்ந்து சட்டரீதியாக இல்லாதவற்றை ரத்துச் செய்தல். (ஐ)

## நாட்டு நடப்பு

குவலயம் வியக்க வாழ்க!

நிறுத்தியபோர் நிடித்து நிலைத்து வாழ்க!
நிம்மதி நிலைத்து ஓங்க!
மறுபடியாது போர் முடிந்து அரசு என்றும்
மாண்புடன் நிலைத்து வாழ்க!
பொறுப்புடன் பேச்சு வார்த்தைபேணி
பொய்யாது நிலைத்து வாழ்க!
கூறுபட்ட நிந்திடாது கூடியே மக்களெல்லாம்
குவலயம் வியக்க வாழ்க!

வான்புகழ் ஒற்றுமை ஓங்க!
வையகம் வியந்து மெச்ச
கோன்முறை அரசு செய்க
கொடுமைகள் ஒழிந்து போக
தேன்திகர் எங்கள் தாயாள்
தெவிட்டாது அரசு ஓச்ச!
மேன்மைசேர் உடன் பாடுதன்னை
மெச்சுக உலக மெல்லாம்.

- விகடகவி.

# புதிய பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் லண்டனில் இருவர் கைது! வீடுகள் சோதனை!!

லண்டன்,டிசெ.22

லண்டனில் புதிதாகக் கொண்டு வரப்பட்ட பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் இரு வெளிநாட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று லண்டன் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

புதிய சட்டம் நடைமுறைக்கு வந்த பின்னர் அந்தச் சட்டத்தின் கீழ் முதன்முறையாகக் கைதுகள் இடம்பெற்றுள்ளன.

லண்டனின் புற நகரான லூட்டன் பகுதியில் வெவ்வேறு விலாசங்களில் வசித்து வந்த இருவரே கைது செய்யப்பட்டுள்ளனர். இதை வெட்போட்ஷயர் பொலிஸார் உறுதிப்படுத்தியுள்ளனர்.

இது தொடர்பாக வெட்போட்ஷயர் பொலிஸின் பெண் பேச்சாளர் கருத்துத் தெரிவிக்கையில்:-

"நாங்கள் அமைதி பேணும் நடவடிக்கை ஒன்றிற்காக குடியகல்வு திணைக்களத்தினருக்கு ஒத்தாசை புரிகிறோம். கைது செய்யப்பட்ட இருவரினதும் வயது மற்றும் விபரங்கள் இப்போதைக்கு உறுதிப்படுத்தப்படவில்லை" என்றார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் வெளிநாட்டவர்களை விசாரணை செய்ய வீடுகளில் சோதனை நடத்தும் பணியும் அங்கு ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. (ஐ)

# குடிவரவுச் சட்டங்களை கனடாவும் இறுக்குகின்றது!

ரொறன்ரோ,டிசெ.22

கனடிய அரசு தனது குடிவரவுச் சட்டங்களில் இறுக்கத்தைக் கொண்டு வந்துள்ளது. இந்தப் புதிய நடைமுறையினால் பல நூற்றுக்கணக்கானவர்கள் பாதிக்கப்பட உள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிய சட்டத்தின்படி குடியேற விரும்பும் நபர் ஆங்கிலம் அல்லது பிரான்ஸ் மொழியைக் கற்றிருக்க வேண்டும். ஏதாவது ஒரு துறையில் பட்டம் பெற்றிருக்க வேண்டும். அவருடைய குடும்பத்தவர்கள் கனடாவிலே வசிக்கவேண்டும்.

நீண்ட கால தொழில் பயிற்சி பெற்றிருக்கவேண்டும். இப்படியெல்லாம் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்தப் புதிய சட்ட அமுலாக்கம் பற்றி குடியகல்வு, குடிவரவு துறை சட்டத்தரணியான ருடோல்ப் கிஷர் தகவல் தருகையில், இதனால் பல ஆயிரக்கணக்கானோர் பாதிப்படையப் போகின்றனர் என்றார்.

ஏற்கனவே பலர் குடியேற்றத்திற்கு விண்ணப்பித்துவிட்டு 5 வருடங்களுக்கு மேலாக காத்திருக்கின்றனர்.

அவர்களும் இதனால் பாதிப்படையப் போகின்றனர் என்று அவர் மேலும் சொன்னார். (ஐ)


# அவர் மாரடைப்பால் காலமானார். அவருக்கு வயது...

திருமண முதற்பந்தியிலிருந்து ஒரு 'வெட்டு' வெட்டி விட்டு வந்தவர்களில் ஒருவர் இப்படிக் குறைப்பட்டுக் கொள்கிறார். "பரிமாறியவர்கள் படுமோசம் எனக்கு பாவக்காய் கறி போடவில்லை"

நம்மவர்களுக்குப் போதும் என்ற மனமே கிடையாது. கிடைத்தவைகளையிட்டுப் பெருமைப்படுவதை விட்டுவிட்டு கிடைக்காத ஒன்றுக்காகக் குறைப்படுவதே - அதையே பெரிதாகப் பேசுவதே - வழக்கமாகிவிட்டது. அதுவும் மற்றவர்களுக்குக் கிடைத்தது தனக்குக் கிடைக்காவிட்டால் அதை அவர்களால் சகித்துக் கொள்ளவே முடியாதிருக்கிறது.

இந்த நம்மவர்களின் இயல்பைத் தெரிந்து கொண்டு தான் பந்தியிலே உணவு பரிமாறும்போது, எல்லா இலைகளுக்கும் வரிசையாக ஒரேயளவில் அளந்தது போல முதலில் சோறு வைத்துக்கொண்டு வருவார்கள் - அதனை அடுத்து வரிசை தவறாது - அதுவும் ஒவ்வொன்றாக - கறிவகைகளை வைத்துக் கொண்டு வருவார்கள். கடைசியிலே 'பிரமிட்' உச்சியிலே, - அதாவது சோற்றுக்கு மேலே பருப்புக் கறியை ஊற்றி விட்டு 'சரி சாப்பிடலாம்' என்றதும்தான் சாப்பிடுகிறோம்.

இப்படி எல்லாம் பாரபட்சம் இல்லாமல் சமநிலை பேணப்படுகின்ற நமது சபையிலே ஒருவருக்கு பாவம் பாகக்காய்க் கறி கிடைக்கவில்லை என்றால்... ச்சா... சாப்பிடும்போது அது எனக்குத் தெரியாமல் போய்விட்டது... நான் பாகற்காய்க் கறியைத் தொட்டுக்கூடப் பார்ப்பதில்லை...




இப்படியானதொரு தாழ்வுச் சிக்கல் சில சமயம் எம்மிடமும் தலைகாட்டுவதுண்டு. விருந்துச் சாப்பாட்டுக்குப் பின்னர் பீடா, சிகரெட் போன்றவைகளை நீட்டும் போது 'இலாகிரிப் பொருள்களா? - அவை எமதாதர்களல்லவா? அந்தப் பழக்கம்தான் எமக்குக் கிடையாதே' என்று உத்தமர்கள்போல மறுத்து விடுவோம். பின்னர் அதுபற்றி நினைத்துச் சிந்தித்தால்... மற்றவர்களுக்கெல்லாம் கிடைத்த ஓர் அதிகப்படி' - அல்லது 'போனஸ்' நமக்கெல்லாம் கிடைக்காமற் போய்விட்டதே என்றதொரு ஆதங்கம் ஏற்படப்பார்க்கிறது...

வீட்டிலே அளந்து சாப்பிடுபவர்கள் விருந்திலே அளவுக்கு மீறியும் அத்துமீறியும் அறுசுவையுடனும் சாப்பிடுகிறார்கள் என்றால் அதற்குக் காரணம் என்னவாக இருக்கும் என்று நினைக்கிறீர்கள்?

தனக்கு அந்த வருத்தம் இந்த வருத்தம் என்று சொல்லி, எனக்கு அது வேண்டாம் இது வேண்டாம் என்று மறுப்பது சபைக்கு அழகல்ல - நாகரிகம் ஆகாது. 'பெய்க்கண்டும் நஞ்சுண்டமைவர் நயத்தக்க நாகரிகம் வேண்டுபவர்' என்ற உயர்ந்த பண்பாட்டை அவர்கள் இங்கே பின்பற்றுகிறார்கள் என நினைக்கிறீர்களா?

'சாகும்போதும் தமிழ் படித்துச் சாகவேண்டும். என் உடல் வேகும்போதும் தமிழ் மணத்து வேக வேண்டும்' என்ற பண்டிதர் சச்சிதானந்தனின் வாக்கை அவர்கள் உணவுச் சுவையிலும் பின்பற்றத் துணிந்து விட்டார்கள் என்று நினைக்கிறீர்களா?

இல்லேயில்லை. மற்றவர்களுக்குக் கிடைத்தவை தமக்கு இல்லையென்றாகி விடக்கூடாது என்ற மனோபாவம் தான் எல்லாவற்றுக்கும் காரணம். வேண்டுமானால் வீட்டுக்கு வந்ததும் இரண்டு 'டயனோல்' வில்லைகளைக் கூடுதலாக எடுத்துக்கொள்வார்கள்.

கிடைத்தவைகளையிட்டுத் திருப்தியடையாது கிடைக்காதவற்றையே பேசிக்கொள்வதென்பது மருந்து - வியாதிகளைக்கூட விட்டுவைக்கவில்லை. வைத்திய வசதிகளும் நவீன அணுகுமுறைகளும் வந்து விட்டாலும், அவைபற்றி அலட்டிக்கொள்ளாதவர்கள், ஒரு குறிப்பிட்ட மருந்துக்குத் தட்டுப்பாடு என்றால் அது பற்றியே பேசிக்கொள்கிறார்கள். ஊடகத் துறைகள் கூட அதற்கு விதிவிலக்கல்ல.. (அதற்காக அது பற்றிக் கவனம் செலுத்தக் கூடாது - குரல் கொடுக்கக் கூடாது என்பதல்ல) சும்மா... ஒரு பேச்சுக் காகச் சொல்லுகிறேன்...

அப்படித்தான் நோயைப் பற்றிக்கூட அப்படி ஒரு 'பற்றாக்குறை' சிலருக்கு இருப்பதுண்டு. தங்களுக்கேன் 'பிறசர்' இல்லை - தங்களுக்கேன் 'பிறசர்' பார்பதில்லை என்றெல்லாம் அவர்கள் கவலைப்படுவதுண்டு. இருக்கின்ற 'டயபிடிஸ்' போன்றவைகளை வைத்துக்கொண்டு திருப்திப்படுவதை விட்டுவிட்டு இல்லாததற்காக இவர்கள் ஏன் ஏங்க வேண்டும்? (அதற்கான காரணம் பின்னால் வருகிறது)

இத்தகையவர்களுக்கு நான் சொல்வதுண்டு 'பிரசர்' போன்ற இருதய நோய்கள் வரவேண்டுமானால், அதற்கு முதற்கண் அவர்களுக்கு 'இதயம்' இருக்கவேண்டும்... அதாவது இலக்கியங்கள் கூறுகின்ற இதயம்.. இன்னும் விளக்கமாகச் சொல்வதென்றால் பாரதூரமான பொறுப்புக்கள் - கடமைகளை எல்லாம் 'ரேக் இற் ஈஸி' என்று தட்டிக்கழிக்காத உள்ளம்...

இரண்டாவது 'பிரசர்' என்பது பெரும்பாலும் 'பெரிய' மனிதர்களுக்குத்தான் வருவதுண்டு... அரசாங்கத்துக்கு 'அழுத்தம்' கொடுக்கவென்று நாடாளுமன்றம் செல்கிறார்களே... அவர்களும் 'பிரசர்' காரர்கள்தாம்... பெரிய மனிதர்கள் காலமான செய்திகளை ஊடகங்கள் அறிவிக்கும்போது கவனித்திருப்பீர்களே.. '... அவர்கள் மாரடைப்பால் காலமானார். அவருக்கு வயது...'

இந்த இடத்திலே மிக மிக மிகத் தன்னடக்கத்துடன் தெரிவித்துக் கொள்கின்றேன். நானும் ஒரு 'பெரிய' மனிதன்தான் எனக்கு வயது...

- சண் அங்கிள்.

# மழையால் பயிர்களுக்கு சேதம்

வலி.வடக்கு,டிசெ.22

கடந்த இரண்டு நாள்களாகப் பெய்த மழை மற்றும் காற்றுக் காரணமாக வாழை, மரவள்ளி போன்ற பயிர்கள அதிகளவில் அழிந்துள்ளன.

ஏழாலை, கட்டுவன், மல்லாகம், உரும்பிராய் ஆகிய பகுதிகளில் உள்ள வாழைத் தோட்டங்கள் பல வற்றிலும் வாழைகள் குலைகளுடன் முறிந்து வீழ்ந்துள்ளன. மரவள்ளித் தடிகளும் பாறி வீழ்ந்துள்ளன.(ம-86)

## உதயவாக்கு

திறனார்ந்த ஏமாற்றுக்காரன் திறந்த விழிக்கு அஞ்சமாட்டான்.

## நாளை

மார்கழி 08
ஞாயிற்றுக்கிழமை
திதி : அட்டமி
பிற்பகல் 2.06 வரை.
நட்சத்திரம்: உத்தரட்டாதி
முன்இரவு 8.17 வரை.
சுபநேரம் : 9.25 - 10.55
ராகுகாலம் : 4.55 - 6.25
(பழைய நேரப்படி)

# படையினரின் உறவினர்கள் வன்னிவர விடுதலைப் புலிகள் அனுமதி வழங்கினர்

கொழும்பு,டிசெ.22

யுத்தத்தின் போது காணாமற் போன படையினரின் உறவினர்கள் மற்றும் சமாதான விரும்பிகள் இராணுவக்கட்டுப்பாடற்ற வன்னிக்கு விஜயம் செய்வதற்குப் புலிகள் இயக்கத்தினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

இவர்கள் எதிர்வரும் ஜனவரி மாதம் 25ஆம் திகதி இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிக்கு வருகை தர முடியுமென புலிகள் இயக்கத் தலைமையகம் வடக்கு - கிழக்கு யுத்தத்தின் போது காணாமற் போயுள்ள படையினரின் உறவினர்கள் சங்கத்திற்கு அறிவித்துள்ளது. புலிகளின் அனுமதி கிடைத்திருப்பதைச் சங்கத்தின் தலைவர் ஈ.பி. நாணயக்கார உறுதிப்படுத்தினார். இராணுவக்கட்டுப்பாடற்ற வன்னிப் பிரதேசத்திற்கு மூவாயிரம் பேர் தங்களுடன் நல்லெண்ண விஜயம் மேற்கொள்ளவிருப்பதாகவும் இவர்களுக்கும் புலிகள் இயக்கத்தினர் அனுமதி வழங்கியுள்ளதாகவும் நாணயக்கார கூறினார். மூவாயிரம் பேரும் மடு பிரதேசத்தில் இரு நாள்களும் தங்கியிருப்பதற்குத் தேவையான சகல வசதிகளையும் செய்து தருவதற்கும் புலிகள் உறுதியளித்துள்ளதாகவும் அவர் சொன்னார்.(ஐ)

## தலைநகர் கொழும்பில்

# மூடிய பாதைகள் திறப்பு; தடைகள் அகலுகின்றன

கொழும்பில் மூடியபாதைகள் திறக்கின்றன. முன்னர் மூடப்பட்ட பாதைகளைத் திறந்து, தடைகளை அகற்ற பொலீஸாருக்குப் பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது. இதையடுத்து சில பாதைகள் திறக்கப்பட்டுள்ளன.

பாதுகாப்புக் காரணங்களைக் காட்டி கொழும்பில் பல பாதைகள் மூடப்பட்டிருந்தன. இதனால் பொதுமக்கள் பல சிரமங்களை அனுபவிக்க நேர்ந்தது.

இவற்றைக் கவனத்திற்கொண்டு மூடப்பட்டிருந்த பாதைகளைத் திறந்து விட உள்நாட்டு பாதுகாப்பு அமைச்சர் ஜோன் அமரதுங்க பொலீஸாரைப் பணித்துள்ளார்.

வீதித் தடைகளை அகற்றி அதற்குப் பதிலாக வேறு பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ளும்படி பொலீஸாருக்கு அமைச்சர் தெரிவித்துள்ளார். (ஐ)

# தெற்கில் ஜனவரி முதல் 4 மணி நேர மின்வெட்டு!

கொழும்பு,டிசெ.22

நீர்த்தேக்கங்களில் நீர் வற்றிவிட்டதனால் ஜனவரி மாதம் முதல் நான்கு மணித்தியாலங்கள் மின்வெட்டை அமுல்படுத்தவுள்ளதாக மின்சாரசபை தெரிவித்துள்ளது. தற்போதைய காலப்பகுதி மழை வீழ்ச்சிக்குரியது அல்ல என்பதினால் எதிர்வரும் ஏப்ரல் மாதம் வரை எட்டு மணித்தியாலங்களாவது மின்வெட்டை அமுல்செய்ய வேண்டிவரும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - 13 மின்மாற்றி உபகரணங்கள் பழுதடைந்துவிட்டதாகவும் - அவற்றைத் திருத்துவதற்கு ஒரு வருடமாவது செல்லும் என்றும் - மின்சக்தி எரிபொருள் அமைச்சர் கரு ஜயசூரியா தெரிவித்தார்.

ஒருகோடி 10 லட்சம் ரூபா வரை மின்சாரசபைக்கு நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும் - அதனை விசாரிப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டுளளதாகவும் - அவர் தெரிவித்தார்.

எரிபொருள் நெருக்கடிக்கு குறைநதது 180 நாள்களுக்குள் தீர்வு காணப்பட்டு விடும் என்றும் - அதுவரை மின்சாரத்தை சிக்கனமாகப் பயன்படுத் துமாறும் - மக்களை அவர் கேட்டுள்ளார். (ஐ)

## ஜனவரி முதலாந் திகதி சகோதரத்துவ தினம்

கொழும்பு, டிசெ.22

எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி சகோதரத்துவ தினம்.

அரசியற்கட்சிப் பேதங்கள் இன்றி அனைவரும் சகோதரர்களாக ஒன்றுபட்டு நாட்டின் அபிவிருத்திக்கு ஒத்துழைப்பு வழங்குவதே இத்தினத்தின் நோக்கமாகும்.

ஜனவரி முதலாந் திகதி சகோதரத்துவ தினமாகப் பிரகடனம் செய்ய அமைச்சரவை தீர்மானித்துள்ளது. (ஐ)

## உப தபாலகத்தில் உதவிப் பணம் பெற ஏற்பாடு

வலி.வடக்கு,டிசெ.22

கொக்குவில் மேற்கு உப தபால் அலுவலகத்தில் மாதாந்த உதவிப் பணம் வழங்குவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கொக்குவில் மேற்குக் கிராம அலுவலர் பிரிவில் மாதாந்த உதவிப் பணம் பெறுபவர்களின் வசதிகருதியே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுபவர்கள் தமது பகுதி கிராம அலுவலர்களுடன் தொடர்பு கொண்டு இந்த உப தபாலகத்திலும் கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ள முடியும் என சமூக சேவை அலுவலர் தெரிவித்துள்ளார். (க-86)

## விசாரணைக்கு உத்தரவு

கொழும்பு, டிசெ.22

சுசந்திகா மீதான தாக்குதல் தொடர்பாக, விசாரணைகளை நடத்துமாறு விளையாட்டுத்துறை அமைச்சர் ஜொன்ஸ்ரன் பெர்னாண்டோ பிரதிப் பொலீஸ் மா அதிபருக்கு உத்தர விட்டுள்ளார். (ஐ)

## சாவகச்சேரி மகளிர் கல்லூரி ஆசிரியர்களுக்கு

தென்மராட்சி,டிசெ.22

சாவகச்சேரி மகளிர் கல்லூரியின் ஆசிரியர்கள் அனைவரும் எதிர்வரும் 26ஆம் திகதி காலை 10.00 மணிக்கு கரவெட்டி ரலன்ற் கல்வி நிலையத்திற்கு வருகை தருமாறு அதிபர் திருமதி சி.சிவநாதன் அறிவித்துள்ளார்.

ஆசிரியர்கள் 2001ஆம் ஆண்டு பெற்ற லீவு விவரங்களை 'பி 100' படிவத்தில் பதிவு செய்து, கொண்டு வருமாறு கேட்கப்பட்டிருக்கிறது. (ஐ-117)

## பிரதமருக்கு பிரதேச சபை வாழ்த்து

தென்மராட்சி,டிசெ.22

புதிய பிரதமராகப் பதவியேற்றுள்ள ஐ.தே.கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபையினர் வாழ்த்துத் தெரிவிக்கும் தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளனர்.

சமாதானத்தை விரும்பும் பெரும்பாலான மக்களின் ஆதரவுடன் ஆட்சிப்பீடமேறிய தங்கள் அரசு, மக்களின் அபிலாசையை வெகுவிரைவில் தீர்த்து வைக்கும் என்று உறுதியாக நம்புகிறோமென வாழ்த்துச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதாக பிரதேச சபைத் தலைவர் த.ஜெயராசா தெரிவித்தார். (ஐ-117)


## பேரறிஞர் பேராயருக்கு வாழ்த்து



தென்னிந்தியத் திருச்சபையின் பேராயர்
அதிவண. கலாநிதி
**எஸ்.ஜெபநேசன்**

அவர்கள் கேம்பிறிட்ஜ் I.B.C. வரலாற்று ஆய்வாளர்கள் நிறுவனத்தினால் 20ஆம் நூற்றாண்டின் 2000 பேரறிஞர்களில் ஒருவராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார் என்பதை அறிந்து, மனமகிழ்ச்சி அடைகின்றோம். இவரது சிறந்த அறிவும், பரந்த சேவையும் எமக்குக் கிடைத்ததை நாம் பெரும் பாக்கியம் என நினைத்து இறைவனைப் போற்றுகின்றோம்.

ஜீவ ஒளி மன்றம். இன்பர்சோலை.
சமாதானக்கோட்டை (வட்டுக்கோட்டை)
உதயம் நண்பர் கழகம். ஆனந்த நிலையம்.
(96171)

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 06 - 04 - 1928
மறைவு 05 - 01 - 1998

**அமரர் இராஜரட்ணம் அருளானந்தன்**
(இளைப்பாறிய பொலீஸ் லிகிதர்)

"ஆண்டுகள் நான்கு ஆனாலும்
ஆறாதப்பா உங்கள் நினைவு."

என்றென்றும் உங்கள் நினைவோடு:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

82/2, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(96101)

வாடிக்கையாளர்களுக்கு ஒரு நற்செய்தி!
நத்தார் - புதுவருடத்தை முன்னிட்டு மாபெரும் மலிவு விற்பனை! இன்றே நாடுங்கள்!!

**லைடன் புடைவை நிலையம்** 31.12.2001 வரை மட்டுமே!

சகல விதமான புடைவைகளுக்கும் விசேட கழிவு வழங்கப்படும்
என்பதை வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம.
சனி, ஞாயிறுகளில் முழுநாளும் கடை திறந்திருக்கும்.

**லைடன் புடைவை நிலையம்**
410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P:2381 (C-19880)

## தசாக கிருஹயக்ஞ அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் விஷு வருஷம் கார்த்திகைத் திங்கள் 29ஆம் நாள் (14-12-2001) வெள்ளிக்கிழமை பகல் சிவபதமடைந்த எங்கள குடும்பத்தலைவர் **பிரம்மஸ்ரீ வி.பரமேஸ்வரன் ஐயர்** அவர்களின் ஆத்மசாந்திக் கிரியைகள் 23-12-2001 தொடக்கம் நடைபெறும்.

*தசாகம்:* 23-12-2001 ஞாயிற்றுக்கிழமை பகல் 10 மணி.
*கிருஹயக்ஞம் (மதியபோசனம்):* 27-12-2001 வியாழக்கிழமை பகல் 12 மணி.

மேற்படி கிரியைகளில் பங்குபற்றி அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதற்கு இவ்வழைப்பினை சகலரும் ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

*"மாருதி"*
*முதலாம் கட்டையடி,*
*உடுவில்.*
- குடும்பத்தினர்.
(C/19864)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 03 - 03 - 1929
மறைவு 24 - 11 - 2001



**அமரர் தம்பையா மாணிக்கவாசகம்**
(இளைப்பாறிய அஞ்சல் அதிபர்)

*அன்போடும் பாசத்தோடும் எம்மை வளர்த்து*
*நல்வழி காட்டிய எமது தந்தையே!*
*மாதம் ஒன்று கடந்தபோதும் உங்கள்*
*நினைவுகள் எம்மைவிட்டு ஒருபோதும் அகலாது!*
*ஆறாது நெஞ்சம்!!*

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (22-12-2001) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், மருமகன் (சுந்தரேசன்).

*கலட்டிவளவு,*
*கந்த உடையார் ஒழுங்கை,*
*பருத்தித்துறை.*
(96170)

## நாலாம் ஆண்டு நினைவுகளில்

தோற்றம் 03 - 01 - 1925
மறைவு 06 - 01 - 1998



**அமரர் பொன்னம்பலம் தம்பிமுத்து**
**(Retd. Post Master)**
**திதி:-22-12-2001**

குடும்பத்தின் ஒளி விளக்காய்
ஊருக்கு சேவகனாய்
விண்ணுலகை நீயடைந்து
நான்கு ஆண்டுகள் சென்ற தின்று
துயரென்னும் சாகரத்தில்
துவழ்கின்ற எங்களிற்கு - உன்
நினைவுகளே ஒளியாகும் - என்று
உடுவில் மீனாட்சி அம்மனை
வணங்குகின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி - நல்லம்மா தம்பிமுத்து,
மகன்மார்- ஈஸ்வரமூர்த்தி, கணேசமூர்த்தி,
மகள் - ஹரி ஜெயசெல்வி,
மருமக்கள் - லோகா, ஜெயா,
சகோதரி - லக்ஷ்மிபிள்ளை,
பெறாமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

*ஹரிஸ்தான்*
*மானிப்பாய் வீதி,*
*உடுவில்,*
*கன்னாகம்.*
(96138)

விடுதலைப் புலிகளின் அறிவிப்பை

# நல்லதொரு சமிக்ஞையாகக் கொண்டு அரசும் யுத்தநிறுத்தம் செய்யவேண்டும்

## மட்டு. எம்.பி. ஜோசப் பரராஜசிங்கம் கருத்து

கொழும்பு,டிசெ.22

விடுதலைப் புலிகள் அறிவித்துள்ள யுத்தநிறுத்த அறிவிப்பை சமாதான முன்னெடுப்புக்களுக்கான நல்ல சமிக்ஞையாக ஏற்றுக்கொண்டு அரசும் யுத்தநிறுத்த அறிவிப்பை விடுக்க வேண்டும்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் மட்டு.மாவட்ட எம்.பி. ஜோசப் பரராஜசிங்கம்.

விடுதலைப் புலிகள் அறிவித்துள்ள ஒருமாதகால யுத்தநிறுத்த அறிவிப்புக் குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் யுத்த நிறுத்தம், விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கம், சமாதானப் பேச்சு, பொருளாதாரத் தடைநீக்கம் என்ற நான்கு விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருந்தது. இவற்றிற்குத் தமிழ்மக்கள் முழு ஆணையையும் வழங்கியிருந்தார்கள். தென்னிலங்கையிலும் சிங்கள மக்கள் இனப்பிரச்சினைத் தீர்வு, சமாதானம் என்பவற்றிற்கே வாக்களித்திருக்கிறார்கள்.

இந்த மக்கள் ஆணைக்கு மதிப்பளித்து விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்தத்தை அறிவித்திருக்கிறார்கள். எனவே அரசும் தாமதிக்காது யுத்த நிறுத்தத்தைச் செய்யவேண்டும். இரு தரப்பும் யுத்தநிறுத்தத்தைக் கடைப்பிடிக்கின்றபோதுதான் சுமுக நிலை ஒன்று தோன்றும்.

கடந்த வருடத்தில் விடுதலைப் புலிகள் நல்லெண்ண சமிக்ஞையாக யுத்தநிறுத்தத்தை அறிவித்தபோதும் அரசு அதற்கு மதிப்புக்கொடுக்காது யுத்தத்தைத் தொடர்ந்ததால் முறுகல் நிலை அதிகரித்தது. எனவே புதிய அரசு தனது நல்லெண்ண சமிக்ஞையை உடனடியாகக் காட்ட வேண்டும்.

- என்று ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்தார். (க-7)



வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலை அபிவிருத்திச் சபையின் ஏற்பாட்டில் 5 ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் விழா, நன்னீர் வழங்கும் திட்டத்தின் ஆரம்ப வைபவம், கார் - சைக்கிள் தரிப்பிடம் என்பனவற்றின் திறப்புவிழா அண்மையில் நடைபெற்றன.

இந்த நிகழ்வுகளில் கலந்துகொண்ட மேலதிக அரச அதிபர் து.வைத்திலிங்கம் உரையாற்றுவதைப் படத்தில் காணலாம்.

வைத்தியசாலை அபிவிருத்திச் சபைத் தலைவர் டாக்டர் மயிலேறும்பெருமாள், அகதிகளுக்கான ஐ.நா.தூதரக தலைமை அதிகாரி திருமதி மோஹன் மொரிஸ் ஆகியோர் அமர்ந்துள்ளனர். (ஐ)

# வழுக்கையாறு மயானம் அருகே திங்கள் முன்னிரவு கொள்ளை!

நவாலி வழுக்கையாறு வீதி வழியாக மோட்டார் சைக்கிளில் சென்ற குடும்பஸ்தா ஒருவரை வழுக்கையாறு மயானத்துக்கு முன்பாக வழிமறித்த இனந்தெரியாத மூவர் அவரிடம் இருநத நகைகளையும் பணத்தையும் அடையாள அட்டையையும் பறித்து எடுத்ததுடன் மோட்டார் சைக்கிளையும் அபகரித்துச் சென்றுள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை இரவு 7 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. அரசசார்பற்ற நிறுவனங்களினால் நடத்தப்படும் சிறுவர் இல்லங்களின் பொறுப்பதிகாரியாகப் பணி புரியும் நபரே தனது கடமைகளை முடித்துக்கொண்டு வீடு திரும்பும் வழியில் இவ்வாறு கொள்ளையரின் கையில்சிககினார்.

இவரை வழுக்கையாறு மயானத்துக்கு முன்பாக வழிமறித்த மூவர் மோட்டார் சைக்கிளுக்கு காப்புறுதி செய்யப்பட்டுள்ளதா எனக்கேட்டு வரி அனுமதிப்பத்திரத்தைக் காட்டுமாறும் கேட்டனராம்.

அவை வீட்டில் இருப்பதாகப் பதில் கூறியசமயம், அவரை மிரட்டி மோட்டார் சைக்கிளுடன் மயானத்துக்குக் கூட்டிச்சென்று அங்கு வைத்து அவரின் கண்களையும், கைகளையும் கட்டிவிட்டு அவரிடம் இருந்து 20 ஆயிரம் ரூபா பணம், மோதிரம், சங்கிலி, கைச சங்கலி ஆகியவற்றையும், அடையாள அட்டையையும் பறித்துக்கொண்டு அவரது மோட்டார்சைக்கிளில் தப்பிச் சென்றுள்ளனர்.

ஒருவாறு தனது கைக்கட்டுகளை அவிழ்த்துக்கொண்டு சற்றுத் தொலைவில் இருந்த குடியிருப்புகளுக்குச் சென்று அவர்களின் உதவியுடன் தனது வீட்டிற்குச்சென்றார்.

இந்தச் சம்பவம் தொடர்பாகப் பொலீஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (உ-6-100)

# காணாமற்போனோரின் விசாரணைக்கு உறவினரை ஒத்துழைக்கக் கோரிக்கை

## மேலும் 10 பேருக்கு அழைப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.22

குடாநாட்டில் கடந்த 95,96ஆம் ஆண்டு காலப்பகுதியில் காணாமற்போன இளைஞர், யுவதிகளின் நிலைமை தொடர்பாக ஆராய்ந்து அறிவதற்கான விசாரணைகளை மேற்கொண்டுவரும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் அதற்கு அவர்களின் உறவினர்களின் உதவியைக் கோரியுள்ளனர்.

யாழ்.பொலீஸ் நிலையத்தில் நடைபெற்றுவரும் இந்த விசாரணைகளுக்கு காணாமற்போனவர்களின் உறவினர்களை உரிய ஆவணங்களுடன் சமுகமளித்து சாட்சியமளிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

காணாமற்போனவர்களின் பெயர் விவரம், கோவை இலக்கம், காணாமற்போன திகதி, சாட்சிகளின் பெயர் விவரம், முகவரி ஆகியன முறையே வருமாறு:-

★ காணாமற்போனவர்:- சின்னையா ராமசாமி (மட்டுவில் வடக்கு - கோவை இல:- பி.ஐ.330)

காணாமற்போன திகதி:- 26.07.1996

சாட்சிகள்:- கிருபாகரன் (தும்பளை முருகன் கோயிலடி, பருத்தித்துறை), வாமதேவன் (ஜே-312, மட்டுவில் கிராம சேவகர்)

★ ★ ★

காணாமற்போனவர்:- ஜேமிஸ் பிரபாகரன் (இல.-105, கோயில் வீதி, சுண்டுக்குளி - கோவை இல. - பி.ஐ.336)

காணாமற்போன திகதி:- 15.07.1996

சாட்சிகள்:- விக்னேஸ்வரன் கௌரி (இல.-105, கோயில் வீதி, சுண்டுக்குளி), ஜே-78, அத்தியடி கிராம சேவகர்.

ஆவணம்:- பொலீஸ் முறைப்பாடுப் பிரதி, இறப்புச் சான்றிதழ் பிரதி.

★ ★ ★

காணாமற்போனவர்:- அருளானந்தம் ராசா சிவகுமார் (நாகர்கோயில் மேற்கு - கோவை இல. - பி.ஐ-466)

காணாமற்போன திகதி:- 6.10.1996

சாட்சிகள்:- நாகர் கோயில் ஜே-423 கிராம சேவையாளர் எஸ். பாலசுந்தரம்.

★ ★ ★

காணாமற்போனவர்:- அற்புத நேசன் (கற்கோவளம், பருத்தித்துறை - கோவை இல. - ஐ.ஆர்.150)

காணாமற்போன திகதி:- 11.05.1996.

சாட்சிகள்:- அற்புதநேசன் ஈஸ்வரி (கற்கோவளம், பருத்தித்துறை), ஜெயராஜன், கற்கோவளம் பகுதி கிராம வேவையாளர்.

ஆவணம்:- பொலீஸ் முறைப்பாட்டுப்பிரதி, இறப்புச் சான்றிதழ் பிரதி.

★ ★ ★

காணாமற்போனவர்:- கே.சுரேஷ் மற்றும் கே.பாலகிருஸ்ணன் (125/1, பீச் றோட், தம்பிராசா லேன், குருநகர்) கோவை இல. - பி.ஐ-9/67.

காணாமற்போன திகதி:- 10.10.1996, 14.10.1996.

சாட்சிகள்:- நாகம்மா கறுப்பன், குறித்த பகுதி கிராம சேவையாளர்.

ஆவணம்:- காணாமற்போன இருவர் தொடர்பாகப் பொலீஸ் முறைப்பாட்டுப் பிரதிகள், இறப்புச் சான்றிதழ் பிரதிகள்.

★ ★ ★

காணாமற்போனவர்:- செல்லையா பரமநாதன் (இல.-12, செம்மணி வீதி, அரியாலை) கோவை இல. - பி.ஐ - 329.

காணாமற்போன திகதி:- 10.07.96.

சாட்சிகள்:- பரமநாதன் புஸ்பவதி (இல.22, சுவாமிவீதி), ரி.தர்மசந்திரன (ஜே-94, அரியாலை கிராம சேவையாளர்)

ஆவணம்- இறப்புச் சான்றிதழ் பிரதி.

★ ★ ★

காணாமற்போனவர்:- குலசிங்கம் விஜயகுமார் (கரம்பைக்குறிச்சி, வரணி கோவை இல. - பி.ஐ-345)

காணாமற்போன திகதி:- 14.09.96.

சாட்சிகள்:- விஜயகுமார் அழகேஸ்வரி (கரம்பைக் குறிச்சி, வரணி) மற்றும் ஜே-342, கிராம சேவையாளர்.

ஆவணம்:- இறப்புச் சான்றிதழ் பிரதி.

★ ★ ★

காணாமற்போனவர்:- காந்தி சாந்திதீபன் (நாவற்குழி வடக்கு, கைதடி) கோவை இல. - பி.ஐ-331

காணாமற்போன திகதி:- 30.07.1996.

சாட்சி:- காந்தி காண்டீபன் (வேம்படி, துன்னாலை வடக்கு, கரவெட்டி)

காரணம்:- சம்பவம் நடைபெற்ற இடத்தைச் சென்று பார்வையிட வேண்டியுள்ளதால் வருமாறு அழைக்கப்பட்டுள்ளார்.

★ ★ ★

காணாமற்போனவர்:- சின்னத்தம்பி சிவலிங்கம் (12/4,சபாபதிப்பிள்ளை வீதி,சுன்னாகம் தெற்கு, உடுவில் கோவை இல. - பி.ஐ.9/125)

காணாமற்போன திகதி:- 17.07.96.

சாட்சிகள்:- வல்லிபுரம் சிவலிங்கம் (ஆஸ்பத்திரி வீதி, சங்கானை), பரமலிங்கம் (விநாயகர் பேக்கறி, மீசாலை தெற்கு), சின்னத்தம்பி அரசகுமாரி (சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகம்)

ஆவணம்:- இறப்புச்சான்றிதழ் பிரதி.

★ ★ ★

காணாமற்போனவர்:- இராசலிங்கம் இராகணேசன் (சுதுமலை, சாவற்கட்டு) கோவை இல. ஐ.ஆர்-160)

காணாமற்போன திகதி:- 9.4.1996.

சாட்சி:- சுப்பிரமணியம் இராமலிங்கம் (சுதுமலை, சாவற்கட்டு)

ஆவணம்:- இறப்புச் சான்றிதழ் பிரதி, பொலீஸ் முறைப்பாட்டுப் பிரதி. (ஐ-6)

குடாநாடு வழமைக்குத் திரும்பியதும்

# விவசாயம், கால்நடை வளர்ப்புத் துறைகள் வளர்ச்சியுற்று பண்ணையாளர் சிறப்புறுவர்

## பரிசளிப்பு விழாவில் உதவி விவசாயப் பணிப்பாளர் உரை

யாழ்ப்பாணம்,டிசெ.21

யாழ்.குடாநாடு வழமை நிலைக்குத் திரும்பியதும் விவசாயம், கால்நடை வளர்ப்பு ஆகிய இரண்டு துறைகளும் உயர் வளர்ச்சியைப் பெற்றுவிடும். இதன்மூலம் விவசாயிகளும் பண்ணையாளர்களும் சிறப்புப் பெறுவார்கள்.

- இவ்வாறு கூறினார் யாழ்.மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் (விரிவாக்கம்) க.சின்னத்துரை.

யாழ்.மாவட்ட கால்நடை உற்பத்திச் சுகாதாரத் திணைக்களம் ஏற்பாடு செய்த சிறந்த கால்நடைப் பண்ணையாளர்களுக்கான பரிசளிப்பு விழா கடந்த புதனன்று திருநெல்வேலியில் உள்ள விவசாயப் பயிற்சிப் பாடசாலையில் நடைபெற்றது.

கால்நடை வைத்திய அதிகாரி எஸ்.வசீகரன் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

க.சின்னத்துரை தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

பரிபூரணமான - முழுமையான விவசாயத்தை இணைத்துச் செய்பவனே பூரண விவசாயி. அந்த வகையிலேதான் விவசாயத்துடன் கால்நடைப் பண்ணை வளர்ப்பிலும் விவசாயிகள் ஈடுபடுவதன் மூலம் விவசாயத்துக்கு ஏற்ற கால்நடைகளின் கழிவுகளை பசளைகளாகப் பயன்படுத்திக் கொள்ளமுடியும்.

கூட்டெரு பயிர்ச்செய்கைக்கு உறுதுணையாகின்றது. நீடித்த - நிலையான பயிர்ச்செய்கைக்கு இந்த விவசாயத்துடனான கால்நடைப் பண்ணை வளர்ப்பு மிகவும் பயன்தரக் கூடியதாக அமைந்துவிடுகிறது.

கால்நடை வளர்ப்பில் மூன்று விடயங்கள் முக்கியமானவை. உள்ளீடு பெறும் கஷ்டம், சந்தை வாய்ப்பு, கால்நடைகளுக்கான மருந்து என்பனவே அவை. இவைகளைப் பொறுத்தமட்டிலேயே, எமது நாட்டில் சுமுகமானதொரு அமைதி நிலைமை ஏற்படவேண்டும்.

எனவே விவசாயிகள் தங்களின் நிலங்களை நல்ல முறையில் பயன்படுத்தி முன்னேறி ஏனையோரையும் முன்னேற்ற வேண்டும் - என்றார்.

யாழ்.மாவட்ட விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் முகாமையாளர் த.சிவலோகநாதன் தனது உரையில்:-

கடந்த 50 ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கையின் எந்தப் பகுதியிலும் சரி உரவகைகள், கிருமிநாசினிகள் அறிமுகம் செய்யப்படும் முன்னர் விவசாயிகள் சிறு நிலப்பரப்பில் கூட சிறந்த முறையிலான விவசாயத்தைச் செய்து தங்களுக்கு வேண்டிய உற்பத்தியினை நச்சுத் தன்மையற்ற முறையில் நுகர்வோருக்கும் வழங்கினர்.

ஆனால் காலப்போக்கில் சனத்தொகை பெருகியதன் காரணமாக உற்பத்தி பெருகவேண்டிய நிலையில் படிப்படியாக நுகர்வோருக்கு பாதகம் தரக்கூடியதும், கூடிய விளைச்சலைத் தரக்கூடியதுமான கிருமிநாசினி, உரவகைகள் அறிமுகமாகின.

இந்தக் காய்கறி வகைகளை உண்பவர்கள் வைத்தியர்களால் கண்டுபிடிக்கப்படாத நோய்களால் பீடிக்கப்படுகின்றனர் - என்றார்.

விவசாயிகள் கூட்டெரு மூலமாக பயிர்ச் செய்கையில் ஈடுபடுவதே சிறந்தது என்றும் வலியுறுத்தினார்.

யாழ்.மாவட்ட கால்நடை உற்பத்திச் சுகாதாரப் பணிப்பாளர் பொ.இராமநாதன் தனதுரையில்:-

கால்நடைப் பண்ணையாளர்கள் பல கஷ்டங்களுக்கு மத்தியிலும் தமது கால்நடைப் பண்ணை வளர்ப்பில் மிகவும் ஆர்வம் கொண்டுள்ளதை இந்தப் பரிசளிப்பு விழா எடுத்துக்காட்டாகவே உள்ளது.

சிறந்த பண்ணையாளர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள நீங்கள் கால்நடை வளர்ப்பில் பெற்ற அனுபவங்களை ஏனைய கால்நடை வளர்ப்பாளர்களுக்கும் எடுத்து விளக்கி, கால்நடைப் பண்ணையாளர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க உதவ வேண்டும். அதுவே எமது நோக்கம் - என்றார்.

கால்நடைகளின் செயற்கை முறைச் சினைப்படுத்தல் வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.ஞானசேகரம், யாழ்மாவட்ட விவசாயப் பண்ணையின் முகாமையாளர் எஸ்.சிவநேசன், விவசாயிகள் சார்பில் ப.பேரின்பநாதன், எஸ்.சிவபாலகிருஷ்ணன் ஆகியோரும் அங்கு உரை நிகழ்த்தினர்.

இவ்விழாவில் கால்நடை வைத்திய அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இறுதியில் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (க-180)

# தொடர்ந்து பெய்யும் கடும் மழையால் வயல்கள் வெள்ளக்காடாகக் காட்சி!

## பயிரழிவு ஏற்படும் அபாய நிலை

கொழும்பு,டிசெ.22

தற்போது பெய்துவரும் மழை நெற்பயிருக்கும் ஏனைய பயிர்ச் செய்கைகளுக்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியிருப்பதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

தாழமுக்கத்தினால் ஏற்பட்ட கடும் மழை கடந்த மூன்று தினங்களாகக் குடாநாட்டில் பெய்துவருகிறது. இந்த மழை இன்னும் ஓரிரு தினங்களுக்குத் தொடரலாம் என்று திருநெல்வேலியில் உள்ள வளிமண்டல ஆராய்ச்சி நிலையம் தெரிவித்திருக்கிறது.

இதேவேளை - கடந்த புதன்கிழமை மட்டும் 27.4 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியிருக்கின்றது.

இந்த ஆண்டில் இதுவரையும் மொத்தம் ஆயிரத்து 713.3 (1713.3) மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பெறப்பட்டிருக்கின்றது.

புதன்கிழமை இரவு பெய்த காற்றுடன் கூடிய மழையினால் பல இடங்களிலும் வயல் நிலங்கள் வெள்ளக்காடாகக் காட்சியளிக்கின்றன.

கதிர் வெளியாகிய நிலையில் நெற்பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கி உள்ளன. இதனால் பயிரழிவு ஏற்படும் நிலை காணப்படுகின்றது. (ஐ-180)

| | | | |
|---|---|---|---|
| சந். | | சனி | வி. ரா. |
| செவ். | இராசிச் சக்கரம் | | |
| | | | |
| வெ. சூ. கேது. புத. | | | |

மாற்றம்:-

23.12.2001இல் உத்திரட்டாதி நட்ஷத்திரம் - மீனம் இராசியில் சந்திரன் நிற்கும். 27.12.2001 இல் மகர இராசியில் புதன் மாறும்.

அரசியலில் நண்பன் விரோதியாகலாம் - விரோதி நண்பனாகலாம். பேச்சுவார்த்தைகள் சுமுகமாக நடக்கும். கருத்து வேற்றுமைகள் தணிந்து காணப்படும். ஆட்சி செய்யும் கட்சி கண்டனக் குரல்கள் எழுப்பும் நிலை தோன்றும். இந்தியாவின் வட முனையில் பெரும் அழிவுகள் - போர் நிலை பாகிஸ்தான் துண்டாடப்படும். பெரும் பதற்றநிலை ஏற்படும். திடீர் அனுத்தாக்கங்கள் ஏற்படாது எனச் சொல்லமுடியாது. மேற்கு நாடுகளினால் ஈராக், பாகிஸ்தானில் தாக்கங்கள் திடீரென ஆரம்பிக்க இடம் உண்டு. இந்து, பஸுபிக் சமுத்திர பிராந்திய நாடுகளில் தாழமுக்கம், தொடர்மழை விட்டு விட்டு நடக்கும். இயற்கையின் சீற்றம் ஏற்படும் எனக் கிரக நிலைகள் காட்டுகின்றன.

# இந்த வார இராசி பலன்

# 23.12.2001 ~ 29.12.2001

## மேடம்

நம்பிக்கை, நீதி, தர்மத்தை நிலை நாட்ட முயற்சிக்கும். எடுத்த காரியத்தில் வெற்றி தோல்வியை சமநிலைப்படுத்தி வாழும் தைரியமே நம்பிக்கை ஒளிக்கீற்றை ஒருவருக்கு அனுபவரீதியாக உணர்த்தியபடி இருக்கும். தொழில் ஸ்தானத்தில் பதற்றநிலை உருவாகும். அயலவர்களின் உதவிகள் கிடைக்கும். இடமாற்றங்களைத் தவிர்க்கவும். சகோதரர்கள், பிள்ளைகள் நன்மை அடைவார்கள். அரசியல் வாதிகளின உதவிகள், பொருள் வரவு என்பன ஏற்படும். வயிற்று நோ, உஷ்ணபீடைகள், தோல்வருத்தம், மனச் சஞ்சலம என்பன வரும். பிரயாணத்துறை, குருத்துறை, பாதுகாப்புத்துறை போன்ற துறையினர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்: வியாழன், வெள்ளி (மத்தியானம்).*

## இடபம்

அடுத்தவர் குடியைக் கெடுப்பவரை அழிப்பதில் என்ன பாவம் எனச சட்டம் கேட்கின்றது. சட்டத்தை யார் கையில் எடுப்பது என மனித மனங்கள் பேதலிக்கின்றன. தொழில் ஸ்தானத்தில் நன்மை - தீமைகள் கலந்து நடக்கும். கவர்ச்சியால் மயக்கம், பெரியோர்கள் உதவிகள், வீடு, வாகன சுகம், அரச அதிகாரிகளின் உதவிகள், இனஜன வருகை என்பன நடக்கும். நெஞ்சு வருத்தம், அடி வயிற்று நோ, தொண்டை வருத்தம், மலச்சிக்கல் என்பன வரும். நீதித்துறை, சட்டத்துறை, ரீவி, சினிமா, வீடியோ துறை, கொம்பியூட்டர்துறை போன்ற துறையினருக்கு அதிக நன்மைகள் கொடுக்கும்.

*அதிர்ஷ்ட நாள்கள்: வியாழன், வெள்ளி (மத்தியானம்)*

## மிதுனம்

சட்டம் அடிக்கடி தனது சுயத்தை மாற்றிக்கொள்ளும். சட்டவாதிகள் மாறிமாறி வந்து சட்டம் பற்றிப் பேசுவார்கள். ஆனால் நீதி தேவதையைக் கண்டவர் இல்லை என நம்பினாலும், நீதியை நிலைநாட்டியவர்கள் இல்லை என நாம் எண்ணமுடியாது. புதிய வருவாய்கள், இனஜனங்களால் உதவிகள், எதிர்ப்பாலாரின் உதவிகள், தூரதேச யாத்திரை, அவசரப் புத்தி, தலைவலி, களைப்பு, திமர்த் தாக்கம் என்பன இருக்கும். செய்திகளால் மகிழ்ச்சி வரும். கட்டு மீறிப் பணச் செலவு ஏற்படும். எதையும் எதிர்கொள்ளும் நிலை ஏற்படும். குருத்துறை, செய்தித்துறை, போக்குவரத்துத்துறை போன்ற துறையினர்களுக்கு அதிக நன்மைகள் கொடுக்கும்.

*அதிர்ஷ்ட நாள்கள்: வியாழன், வெள்ளி (மத்தியானம்)*

## கடகம்

அமெரிக்கா போர் முடிக்க, இந்தியா காஷ்மீரில் போர் முழங்கத் தொடங்க கால நேரம் சரியாக உள்ளது. ஆனால் அதற்கு அமெரிக்கா ஈராக்கைத் தாக்காது எனச் சொல்ல முடியாது. உலகில் போருக்கு முடிவு இல்லை. உங்களின் மனக்குமுறலுக்கும் முடிவு ஏற்படாது. தொழில் ஸ்தானத்தில் பண வரவு, புதிய திட்டங்கள் நடைமுறைப்படுத்தல் என்பன நடைபெறும். புதிய செய்திகள், மனக் கஷ்டங்களைக் கொடுக்கும். சல வருத்தம், இரத்த அழுத்தம், நெஞ்சு நோ, உஷ்ண பீடைகள் என்பன கொடுக்கும். அரசியல்துறை, சட்டத்துறை, குருத்துறை போன்றவர்களுக்கு நன்மைகள் ஏற்படும். மாற்றங்கள் வர இடமுண்டு.

*அதிர்ஷ்ட நாள்: சனி.*

## சிங்கம்

நல்லவர்கள் எப்பொழுதும் நல்லவர்கள்தான். உயர்பீடங்களில் படிப்படியாகத் தகுதிக்கேற்ப வீறுநடை போடுவார்கள். தொழில் ஸ்தானத்தில் உங்கள் குரல் ஓங்கி ஒலிக்கும். நீதிக்காகப் போராடுவீர்கள். சகோதரர்களின் அலுவல்களாகப் பேச்சுவார்த்தைகள், சத்துருக்களை வெல்லும் சாதுரியம், வருவாய்களுக்கு புதிய வழி, அரசியல் ஆதாயம், இனஜனங்களுடன் கருத்து மோதல்கள், பூர்வீகத் தொடர்பு, தெய்வ அனுகூலம் என்பன இருக்கும். வயிற்றுப் பொருமல், சளி, வாய்வுத் தொல்லைகள் என்பன ஏற்படும். தொண்டை நோ ஏற்படும். பாதுகாப்புப் பகுதி, வியாபாரத்துறை, குருத்துறை, பிரயாணத் துறை போன்ற துறையினருக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்ட நாள்கள்: சனி, வியாழன் (மத்தியாணம்)*

# மகாதேவா ஜோதிடம்

## கன்னி

நல்லவர்களைக் கெட்டவர்களாக்கும் சூழ்ச்சி வித்தையை சிலர் கற்றுள்ளார்கள். அதிகாரம், பணபலம் என்பவற்றைக் கண்டு தர்மவான்கள் என்றும் கலங்குவதில்லை. தொழில் ஸ்தானத்தில் படிப்படியான மாற்றங்கள் ஏற்படும். சகோதர பாசம் தலைதூக்கும். தாயாரோடு கருத்து வேற்றுமை ஏற்படலாம். தூரத்துச் செய்திகளால் நன்மைகள் ஏற்படும். வாகன சுகம் உண்டு. கிருமித் தாக்கம், இடுப்புவலி, சளித்தொல்லை, மூல வருத்தம் என்பன ஏற்படும். செய்தித்துறை, ஆசிரியத்துறை, பிரயாணத்துறை, பாதுகாப்புத் துறை போன்ற துறையினர்கள் லாபங்களை அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்கள்: சனி, வியாழன் (மத்தியாணம்)*

## துலாம்

உயர்பீடத்திலுள்ளவர்கள் தாம் செய்த தவறுகளை மறைக்க பல ஆசைவார்த்தைகளைச் சிலர் மீது திணிப்பார்கள். அது வெளிவரும் நாளில் பலர் துன்பச் சுமைகளைச் சுமக்க வேண்டிவர இடம் உண்டு. தொழில் ஸ்தானத்தில் மறைமுக அழுத்தங்கள் இருப்பினும் அதனால் நன்மைகள் பின்புவராது. எல்லாம் ஒரு ஏமாற்று வேலைதான். மாற்ற யோசனை, எதிரிகளின் மறைமுகத் தாக்கம், ஆடை அல்லது ஆபரணச் செலவுகள் என்பன ஏற்படும். நரம்புச் சோர்வு, வயிற்று வருத்தம், குடல் வருத்தங்கள், மனக்குமைச்சல் என்பன ஏற்படும். சட்டத்துறை, விவசாயத்துறை, மருநதுத்துறை போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் நன்மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்கள்: சனி, வியாழன் (மத்தியாணம்)*

## விருச்சிகம்

உண்மையான கெட்டித்தனத்திற்கு உயர்வு கொடுக்காமல் விடுவதனால்தான் நீதி பிழைக்கின்றது. சமுதாயத்திற்கு நஷ்டம் கிடைக்கின்றது. உயர்பீடங்களைப் பல புல்லுருவிகள் அலங்கரிக்கின்றார்கள். இதனால் யாருக்கு நஷ்டம்? எனச் சிந்தித்துச் செயற்படுவீர்கள். உண்மைக்காக உறுதியுடன் போராடுவீர்கள். தொழில் பீடத்தில் நன்மைகள் ஏற்படும். கிருமித்தாக்கம், தொண்டை நோ, கண்குத்து, இரத்தவருத்தம் என்பன வரும். நகைத்துறை, சட்டத்துறை, மருந்துத்துறை, பாதுகாப்புத்துறை போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்:- சனி.*

## தனுசு

அரசியல்வாதிகள் அடிக்கடி நிலை மாறுவார்கள். கல்விமான்கள் கௌரவமாக நடக்கப் பார்க்கின்றார்கள். இந்நிகழ்விலிருந்து உலக நிகழ்வுகளை நாம் அறியமுடிகின்றது. தொழில் ஸ்தானத்தில் படித்தவர்களுடன் அளவளாவுதல், வாகனசுகம், விவாதித்துத் தெளிவுபெறுதல், கலைத தொடர்புகள் ஏற்படும். வசீகரப் பேசசு என்பன இருக்கும். தெய்வ பீடங்கள் செல்லல், வீட்டுச் செலவுகள், சளி, பித்த ரோகம், விறைப்பு என்பன வரும். நீதித்துறை, வியாபாரத் துறை, சமயத்துறை போன்ற துறையினர்களுக்கு நன்மைகள் ஏற்படும்.

*அதிர்ஷ்டநாள்: சனி*

## மகரம்

பந்தத்தாலோ பொருளாலோ எவ்வளவு தூரம் போகலாம் என நினைக்கின்றீர்களா? ஒரு எல்லைக்கு மேல் எங்கும்போக முடியாது. தொழில ஸ்தானத்தில் பதற்றநிலைவரும். வீண்வதந்திகளை நம்பாதீர்கள். பொருள் தவறுதல், இடமாற்றங்கள், ஏமாற்றங்கள் என்பன ஏற்படும். தூரத்துச் செய்திகளால் தடுமாற்றம் வரும். விறைப்பு, சலிப்பு, உஷ்ண பீடைகள் என்பன ஏற்படும். குருத்துறை, மருந்துத்துறை, ஹோட்டல் துறை, சந்தைத்துறை போன்ற துறையினர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்: சனி, வியாழன் (மத்தியானம்)*

## கும்பம்

மனித வாழ்வு ஒரு சிலந்தி வாழ்வுதான். ஒரு குறிப்பிட்ட வட்டத்திற்குள் சுற்றிச் சுற்றி ஓடி வருவதனால் எமது தேவைகள், காலங்கள் நிறைவு பெறுகின்றன. ஆனால் மன நிறைவு மட்டும் எவருக்கும் ஏறபடுவதில்லை. நண்பர்கள் வருகை, தத்துவப் பேச்சு, சந்தேக மனம், சகோதர உதவிகள், ஆடை, நகைச் செலவு, தாய் வழி கருத்து வேறுபாடு, யாத்திரை என்பன இருக்கும். கால் வருத்தம், குளிர் சூட்டு வருத்தங்கள், சளி, வாய்வு என்பன வரும். வியாபாரம், கோயில், சந்தை, தோட்டம் போன்ற துறைகளில் வேலைசெய்பவர்களுக்கு சிறப்பு ஏற்படும்.

*அதிர்ஷ்ட நாள்கள்: சனி, வெள்ளி (மத்தியானம்)*

## மீனம்

பாசத்தால் வந்த கலக்கம் வேதனை தரவல்லது. நயமற்ற வியாபாரம் நல்ல பெயரைத் தந்தாலும், இலாபமாக இருக்காது. தொழில் ஸ்தானத்தில் மனச்சஞ்சலம், எதிர்ப்பாலார் எதிர்ப்பு, குடும்பச் செலவு, பேச்சு வார்த்தைகள், பெரியோர்கள் உதவி, தூரதேசச் செய்திகள் என்பன வரும். சளி, கைகால் தாக்கம், வாய்வு, பித்த உபாதைகள் வரும். கடல்பிரயாணத்துறை, சட்டத்துறை, விவசாயத்துறை, இரும்பு, மருந்து, செய்தி போன்ற துறையினர்கள் நன்மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: சனி, வியாழன், வெள்ளி (மத்தியானம்)*

# காணாமற்போனோரில் 167 பேர் இறந்ததை 'றான்' தலைவரே எனக்கு அறியத்தந்தார்!

## பாதுகாவலர் சங்கத்துக்கு அனுப்பிய பதிலில் அரச அதிபர் தகவல்

யாழ்ப்பாணம்,டிசெ.22

வடபகுதியில் கைது செய்யப்பட்டு காணாமற்போனோரில் சுமார் 167பேர் வன்செயல்களில் இறந்துவிட்டார்கள் என்பதை வடக்கின் புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகாரசபைத் தலைவரே எனக்கு அறியத்தந்தார்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் யாழ். அரச அதிபர் க.சண்முகநாதன்.

வடபகுதியில் கைதுசெய்யப்பட்டு காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கம் முன்வைத்துள்ள மூன்று நிபந்தனைகள் தொடர்பாக சங்கத்திற்கு எழுதியுள்ள கடிதத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"பாதுகாப்பு அமைச்சினால் அனுப்பிவைக்கப்பட்டதாகத் தெரிவித்து, வடக்கின் புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகாரசபைத் தலைவரால் எனக்கு முன்னிலைப்படுத்தப்பட்ட பட்டியலுடன் இணைந்து அனுப்பிவைக்கப்பட்டதே அக்கடிதமாகும்". - என்றும் அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

பாதுகாவலர் சங்கத்தின் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான மேலதிக அறிவுறுத்தல்களை அனுப்பிவைக்குமாறு, தான் புனரமைப்பு அதிகாரசபைத் தலைவரிடம் கேட்டுள்ளதாகவும் அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை -

யாழ்.பொலீஸ் நிலையத்தில் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் மேற்கொள்ளும் காணாமற்போனோர் தொடர்பான விசாரணைகளுக்கு பொதுமக்களை ஒத்துழைக்குமாறு சங்கம் கேட்டுள்ளது.

மேலும் பாதுகாப்பு அமைச்சினாலோ அல்லது புனர்வாழ்வு அதிகாரசபையினாலோ காணாமற் போனவர்கள், வன்செயலில் இறந்துவிட்டமையை உறுதிப்படுத்தும் கடிதம் சமர்ப்பிக்கப்படாத வரை - இறந்துவிட்டதாக அறிவிக்கப்பட்ட சுமார் 167 பேரின் உறவினர்களில் எவரையும் மரணச் சான்றிதழ் பெற்றுக்கொள்ள விண்ணப்பிக்க வேண்டாம் என்றும் சங்கம் கேட்டுள்ளது.

பாதுகாவலர் சங்கத்தினால் முன்வைக்கப்பட்ட மூன்று நிபந்தனைகளில் ஒன்றிற்குக் கூட இதுவரை அரசஅதிபர் பூரண பதிலை வழங்காமையினால் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் செயலகம் முன்பான தொடர் மறியற் போராட்டம் ஆரம்பிக்கப்படுவது தவிர்க்க முடியாதது என்றும் சங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.(ஐ-9)

# திவ்ய ஜீவன சங்க சிறுவர்களின் பரிசளிப்பு விழா

யோகிராஜ் சுவாமி சச்சிதானந்த மகராஜ் அவர்களின் 87ஆவது ஜெயந்தி தின வைபவமும் நல்லூர் சிவானந்த சிறுவர் சமய பாடசாலையின் வருடாந்தப் பரிசளிப்பு வைபவமும் இன்று சனிக்கிழமை காலை 9.00 மணிமுதல் நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறும்.

பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக குகஸ்ரீ க.சொக்கலிங்கம் (சொக்கன்) கலந்துகொள்வார்.

முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி யோகராசா, சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சிவானந்தி மன்மதராஜன், திவ்ய ஜீவன சங்கத் தலைவர் எஸ்.கனகரத்தினம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்வர்.

சிறுவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். (ஐ)



வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத்தின் 16 ஆவது ஆண்டு நிறைவு விழா அண்மையில் வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

விழாவில் கழக மாணவிகள் கழக கீதம் இசைப்பதைப் படத் தில் காணலாம். கழகச் செயலாளர் க.வ.சிவச்சந்திரதேவன், தென்மராட்சி கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா, இலங்கை வங்கி மாவட்ட முகாமையாளர் சி.நடராசலிங்கம், கழகத் தலைவர் சி.குலசிங்கம், மக்கள் வங்கி வடவலய உதவிப் பொது முகாமை யாளர் சி.இளம்பிறைநாதன், யாழ்.பல்கலைக்கழகப் பட்டப்படிப்புகள் பீடப் பீடாதிபதி பேராசிரியர் அ.சண்முகதாஸ் மற்றும் பேராசிரியை மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோரையும் படத்தில் காணலாம். (க-9)

# 'வனிதா வாஸனா' விதிகளில் தளர்வு

யாழ்ப்பாணம்,டிசெ.22

மக்கள் வங்கியின் 'வனிதா வாசனா' அதிர்ஷ்டச் சீட்டிழுப்பு தொடர்பான விதிமுறைகளில் வாடிக்கையாளர்களின் நன்மை கருதி சில மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக யாழ்.பிராந்திய முகாமையாளர் எம்.கே.சிவபாதவிருதயர் அறிவித்துள்ளார்.

இக்கணக்கினை ஆரம்பிக்கக் கூடிய பெண்களின் வயது 16ஆகக் குறைக்கப்பட்டுள்ளது என்றும் -

அதிர்ஷ்டச் சீட்டிழுப்பில் கலந்து கொள்ள வேண்டுமாயின், ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் மார்ச் மாதம் 31ஆம் திகதி வரை கணக்கில் ஆகக் குறைந்த மீதி 7,500 ரூபாவாக இருக்க வேண்டும் என்றும் - அவர் தெரிவித்தார்.

(ம-9)

# யானை - புலி கூட்டு என்ற கோஷத்துக்கு வேட்டு!

**ஐ.தே.கட்சி நாட்டை துண்டாடப் போகிறது எனக் குற்றஞ் சாட்டிய அரசே வன்னியிலும், மட்டக்களப்பிலும் தமிழ் மக்களின் வாக்குரிமையைப் பறித்து, நாடு பிரிக்கப்படவேண்டும் என்ற எண்ணத்தை அம்மக்களுக்கு உருவாக்கியுள்ளது. ஜனாதிபதி, அமைச்சர்கள், பொ.ஐ.முன்னணி, ஜே.வி.பி. ஆகியன யானை - புலி உறவு தொடர்பாக எத்தனை கட்டுக்கதைகளை அவிழ்த்துவிட்டன. ஆனால், இம்முறை அவர்களது திட்டத்திற்கு சிங்கள மக்கள் வேட்டு வைத்துவிட்டனர். றோஹண புத்திர என்பவரால் எழுதப்பட்டு 9-12-2001 திகதிய லங்காதீபவில் வெளியான கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

வடபகுதியிலுள்ள விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை தென்பகுதியிலுள்ள சிங்கள வாக்காளர்களுக்கு விற்பதற்கு பொ.ஐ.மு. மேற்கொள்ளாத முயற்சிகள் எவையுமில்லை. யானை-புலி (ஐ.தே.க. மற்றும் விடுதலைப் புலிகள்) ஒப்பந்தம் என நாடெங்கும் கோஷங்கள் எழுப்பப்பட்டன. சுமார் ஒன்றரை மாதங்களாக பொதுமக்களின் கண்ணுக்கும், காதுக்கும் என மனங்களுக்கும் இழைக்கப்பட்ட வதைகள் சொற்களில் அடங்கா. அவை புதுமையான தண்டனையாக - மரண வேதனையாக - அமைந்தன.

காலையில் இருந்து இரவு வரை, இரவில் இருந்து அதிகாலை வரை யானை - புலி உறவு குறித்து நாலா திசைகளுக்கும் தகவல்களைக் கொண்டுசெல்ல நாட்டின் சொத்து எவ்வளவோ விரயமாக்கப்பட்டுள்ளது. நிமிர்ந்த தலையுடனும், தன்மானத்துடனும் பணியாற்றும் நோக்கில் அரச சேவையில் இணைந்த எத்தனையோ பேர் அரசைச் சேர்ந்த அரசியல்வாதிகளுக்கு அடிமைகளாகி அவர்களின் அழுக்குத் துணிகளைப் பகிரங்கமாகத் துவைக்கிறார்கள். இந்த அரச ஊழியர்களுக்கான சம்பளங்கள் பொது நிதியில் இருந்து வழங்கப்படுவதானது மக்களுக்கு இழைக்கும் அவமானமாகும். இதை எப்படித்தான் மதிப்பிடுவது?

சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டப் பொறுப்பான பொலீஸ் படையைச் சேர்ந்த சிலர் மற்றும் பாதுகாப்புக்குப் பொறுப்பான இராணுவத்தைச் சேர்ந்த சிலர் மேற்கொண்ட செயல்கள் அருவருப்பையும், ஓங்காளத்தையும் ஏற்படுத்தின. பிரபலங்களுக்கு (V.I.P) பாதுகாப்பை வழங்கும் பிரிவைச் சேர்ந்த சிலர் பாதாள உலகைச் சேர்ந்தவர்களுடன் இணைந்து மேற்கொண்ட செயல்கள் பிசாசுகளின் அட்டகாசங்களை தாண்டின. இத்தகையவர்களை பிசாசுடன் ஒப்பிட்டால் அது நாம் பிசாசுக்கு இழைக்கும் அவமரியாதையாக அமையும்.

பல்வேறு அணிகளால் ஒரே திட்டத்திற்கு அமைய ஓர் இடத்திலேயே இவை அனைத்தும் மேற்கொள்ளப்பட்டன. நாட்டைப் பாதுகாக்கிறார்களாம். நாடு புலிகளுக்குக் கொடுக்கப்படமாட்டாதாம். தாய்நாட்டைப் புலிகளின் இரைக்கு ஆளாக்கமாட்டார்களாம். யானை - புலி ஒப்பந்தத்திலிருந்து ஸ்ரீலங்காவை மீட்கப் போகிறார்களாம்.

12ஆவது நாடாளுமன்றத் தேர்தலின்போது ஒரேயொரு விடயமே தொனிப்பொருளாக அமைந்திருந்தது. யானை - புலி ஒப்பந்தமே அதுவாகும். 7 ஆண்டுகளாக ஆட்சி செய்த பொ.ஐ.முன்னணிக்கு ஆட்சி அதிகாரம் பறி போன காரணத்தினால் திடீர்த் தேர்தலை மேற்கொள்ள நேரிட்டது. 2000 ஒக்ரோபர் 10ஆம் திகதி நடைபெற்ற தேர்தலின் மூலம் மேலும் 5 ஆண்டுகள் ஆட்சி செய்யும் வாய்ப்பு பொ.ஐ.முன்னணிக்கு கிடைத்த போதிலும், அந்த வாய்ப்பை இழக்க நேரிட்ட வேளையில் உயிருடன் ஊசலாடிக்கொண்டிருந்த ஜே.வி.பி. தனது மாக்ஷியக் கொள்கைகளை பகிரங்கமாகப் புதைகுழியில் புதைத்து விட்டு இனவாத முரசைக் கொட்டியவாறு பொ.ஐ.முன்னணிக்கு மறக்க முடியாத சேவையை வழங்க முன் வந்தது.

கொடிய பயங்கரவாதப் புலிகளும், ரணில் விக்கிரமசிங்கவும் நாட்டைத் துண்டாடித் தின்னுகின்றனர் என பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க மாத்திரம் கூக்குரல் எழுப்பவில்லை. ஜனாதிபதி சந்திரிகாவின் தாளத்திற்கு அமைய தாரை தம்பட்டம் அடித்து ஜே.வி.பியினர் அடித்த கூத்து உலகில் உள்ள எந்தவொரு மாக்ஷிசக் கட்சியாலும் இதுவரை அரங்கேற்றப்படாத நாடகமாகும். இருப்பினும் சிறிலங்காவின் மாக்ஷிசவாதிகள் இந்த நாடகத்தை அரங்கேற்றினார்கள். அதனால் பலனையும அடைந்தனர். பொ.ஐ.முன்னணியின் வாக்கு வங்கியைப் பெருக்க பிரபாகரனின் பெயரை இழுத்தனர். தென்பகுதி மக்களுக்கு அவர்கள் புலிப் பூச்சாண்டி காட்டினர்.

பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்கவும், அவரது பிறந்த இடத்தைச் சேர்ந்தவரும், 12 ஆண்டுகளுக்குப் பின்னர் நாடு திரும்பியவருமான சோமவன்ஸ அமரசிங்கவும் இணைந்து யானை - புலிக் கூட்டை ஏற்படுத்தினர். இருப்பினும் அவர்களில் சிலர் (ஜே.வி.பி.) புலிகளுடன் இணைந்து கடந்தகாலங்களில் ஐரோப்பாவில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டுள்ளனர். அது பிரச்சினைக்குரிய விடயமல்ல. உண்ணவேண்டிய தேவை ஏற்பட்டால் கபறக்கொய்யாவை(முதலை இனம்) உடும்பாகக் கூட மாற்றும் ஆற்றல் சோமவன்ஸ அமரசிங்கவுக்கு மாத்திரமல்ல அவரது ஊரைச் சேர்ந்த விமல் வீரவன்ஸ, நந்தன குணதிலக, டில்வின் சில்வா ஆகியோருக்கும் உண்டு.

தனக்குச் சாதகமான சூழ்நிலை தென் இலங்கை அரசியல் மேடைகளில் உருவாகும் போது பிரபாகரன் வன்னியில் இருந்து புன்னகை பூப்பார். சந்திரிகா தனது கணவர் விஜய குமாரதுங்கவுடன் வடபகுதிக்கு மனித நேயம் கொண்டவராக - சமாதானத்தை உருவாக்கும் நோக்கில் விடுதலைப் புலிகளுடன் (தங்களுடன்) கடந்த காலங்களில் மேற்கொண்ட பேச்சுவார்த்தைகளை நினைவுகூர்ந்து, அரசியல்வாதிகளின் அதிகாரத்திற்கான சந்தர்ப்பவாதங்கள் குறித்து பிரபாகரன் சிந்தித்தவண்ணமிருப்பார்.

சந்திரிகாவுக்கும் அவரது கணவர் விஜயகுமாரதுங்கவுக்கும் அன்று யாழ்ப்பாணம் வந்திருந்தபோது தமிழ மக்கள் எத்தனையோ எதிர்பார்ப்புகளுடன் அவர்களது நெற்றியில் திலகமிட்டனர். எவ்வளவுதூரம் நம்பிக்கை வைத்திருந்தனர். இவை அனைத்தையும் தூக்கிவீசி எறிந்துவிட்டு யானை - புலி ஒப்பந்தம் உளளது என பொ.ஐ.முன்னணி கூறியது. மேலும் அதை உறுதிப்படுத்த அவர்கள் மேற்கொண்ட தந்திரங்கள், முயற்சிகள் சொற்களில் அடங்கா. ஒலிப்பதிவு நாடாக்கள் தயாரிக்கப்பட்டன. பொலீஸ் சேவையிலிருந்து ஓய்வுபெற்ற ஒருவர் ஒப்பந்த அடிப்படையில் இந்தப் பணியில் ஈடுபடுத்தப்பட்டார். அவர் வாக்காளர்களைக் கிள்ளுக் கீரை என நினைத்து தனது எஜமான்களுக்குத் திருப்தி ஏற்படும் விதத்தில் எத்தனையோ பம்மாத்து வேலைகளில் ஈடுபட்டார்.

யானை - புலி ஒப்பந்தம் நாட்டைத் துண்டாடிவிடும் என பொ.ஐ.முன்னணியும் அதனுடன் தகுதிகாண் அரசை உருவாக்க முன்வந்த ஜே.வி.பியும் பறைசாற்றினர். பிரபாகரனிடம் ஈழம் வழங்கப்படவுள்ளது என மேடைக்கு மேடை பிரசாரம் செய்தனர். இடைக்கால நிர்வாகம் விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்படவுள்ளது எனக் கூக்குரலிட்டனர்.

மரம் தெரியாதவனுக்கு (சிங்கள மக்களுக்கு) இலைபிடுங்கிக் காட்டினர். உண்மையை மூடி மறைத்தனர். மிகவும் ரகசியமான முறையில் இவை அனைத்தையும் பிரபாகரனுக்கு வழங்க ரணில் விக்கிரமசிங்க ஒப்பந்தம் செய்துள்ளார் எனக் கூறினர். இருப்பினும், அவ்வாறான ஒப்பந்தத்தை தான் பார்த்ததாக பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க இம்முறை கூற முன்வரவில்லை. இருந்தபோதிலும், ஐ.தே.கட்சி மீது அவர் தொடர்ந்து குற்றஞ் சுமத்தியே வந்தார்.

பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து, தொழிற்சாலைகள் மூடப்பட்டு, வேலையில்லாப் பிரச்சினை அதிகரித்து, உல்லாசப் பிரயாணத்துறை முற்றாக முடக்கப்பட்டு, அபிவிருத்தி பூஜ்ஜியத்தைத் தாண்ட - வினைத் திறமையற்ற - லஞ்சம் மற்றும் ஊழல் நிறைந்த நிர்வாகம் நிலவிவரும் வேளையில், இந்தப் பிரச்சினைகள் அனைத்திலிருந்தும் வாக்காளர்களின் கவனத்தைத் திருப்புவதற்காக யானையின் வாலுக்கும், புலியின் வாலுக்கும் முடிச்சுப் போடப்பட்டது. அவர்கள் நினைத்தவாறே ஏனைய பிரச்சினைகள் பின்னுக்குத் தள்ளப்பட்டன. பிரபாகரனின் பெயர் ஏலம் போடப்பட்டது. இதனால் நாட்டின் சமாதானத்திற்கும், இன ஐக்கியத்திற்கும் ஏற்பட்ட பாதிப்புக்கள் கொஞ்சமல்ல. எதிர்பாராத இந்த நடவடிக்கைகளால் (பிரசாரங்களால்) வடக்கிலும், தெற்கிலும் உருவான அச்சங்கள், எதிரொலிகள் ஓயப் பலகாலம் எடுக்கும். இவை இனங்களின் இடையே சந்தேகம், அவநம்பிக்கை, குரோதம் ஆகியன வளரக் காரணமாக அமைந்துள்ளன.

யாழ்ப்பாணத்தை பிரபாகரனிடம் 10 ஆண்டுகள் கையளிக்க உடன்பட்டதை, அதிகார ஆசை காரணமாக ஜனாதிபதி தற்போது மறந்து விட்டார்.

உத்தேச அரசியலமைப்புத் திட்டத்தின் மூலம் இடைக்கால அரசைப் பிரபாகரனுக்கு வழங்கவிருந்ததையும் ஜனாதிபதி மறந்துவிட்டார். விடுதலைப் புலிகளின் கோரிக்கைகளுக்குச் சமமான கோரிக்கைகளை முன்வைத்த ஈ.பி.டி.பியின் தலைவர் டக்ளஸ் தேவானந்தா ஈழத்தைக் கோரியவாறே தனது அமைச்சரவையில் இருக்கிறார் என்பதையும் ஜனாதிபதி மறந்துவிட்டார். வடக்கும் கிழக்கும் இணைக்கப்படவேண்டும் என்ற டக்ளஸ் தேவானந்தாவின் பேச்சை தானும் ஏற்றுக்கொண்டுள்ளதை ஜனாதிபதி மறந்துவிட்டார். விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை மேற்கொள்வேன் எனவும் அதன் முன்னேற்றத்தை அடுத்தே அவர்கள் மீதான தடையை நீக்குவது குறித்து ஆராயப்படும் என வெளிநாட்டுச் செய்தியாளர்களுக்கு கூறியதையும் ஜனாதிபதி மறந்துவிட்டார். அவரது வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கூறியவற்றையும் ஜனாதிபதி மறந்துவிட்டார். 2000 ஒக்ரோபர் பொதுத் தேர்தலின்போது இதேபாட்டைப் படித்த போதிலும், ஐ.தே.கட்சிக்கு 35 லட்சம் வாக்குகள் கிடைத்தன என்பதையும் ஜனாதிபதி மறந்து விட்டார்.

தமிழ் மக்களை சிங்கள மக்களிடமிருந்து தொலைதூரத் துக்குத் தள்ளிவிட்டு ஒரு கோடியே 24 லட்சம் வாக்காளர்களில் பெரும்பாலானோரின் விருப்புரிமையைப் புதைகுழியில் இட்டுவிட்டு - கடவுச் சீட்டை அனுப்பி, ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்கவையும் லண்டனிலிருந்து அழைத்தார்.

யானை - புலி உடன்பாடு என மேற்கொள்ளப்பட்ட பிரசாரங்களின் தொடர்ச்சியாக, ஜனநாயகத்தில் மிகவும் விலைமதிக்கமுடியாத வாக்குரிமையை - அடிப்படை உரிமையை - சுமார் 80 ஆயிரம் தமிழ் வாக்காளர்கள் பயன்படுத்துவதற்குத் தடை விதிக்கப்பட்டது. இந்தக் "கொந்திராத்தை" அரசு இராணுவத்தின் மூலம் நிறைவேற்றி முடித்தது.

யானை - புலி ஒப்பந்தம் தொடர்பாக ஐ.தே.க. மீது குற்றங்களைச் சுமத்தி, நடுநிலைமைக் கொள்கைகளை அனுசரிக்கும் தமிழ்க் கட்சிகளைத் தோல்வியடையச் செய்யவே இந்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன என அனுமானிப்பதில் தவறில்லை.

வன்னியிலும், மட்டக்களப்பிலும் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குச் சென்று பிரசாரங்களை வேட்பாளர்கள் மேற்கொள்ள அனுமதித்த அரசு, முடிவில் புலிகளின் அச்சுறுத்தலைக் காரணம் காட்டி திடீரென புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இருந்து இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு வரும் நுழைவாசல்களை மூடியது. வாக்களிக்க வந்த நூற்றுக்கணக்கான தமிழர்கள் அரசின் நடவடிக்கையால் ஆத்திரமடைந்து சாபமிட்டுத் திரும்பினர்.

நடுநிலைமை வகிக்கும தமிழ் மக்களைத் தாம்பாளத்தில் வைத்து, விடுதலைப் புலிகளிடம் கையளித்து நாட்டைத் துண்டாடுவதற்கு புலிகளுடன் இணையுங்கள் என்ற செய்தியை அந்த மக்களுக்கு அறிந்தோ, அறியாமலோ அரசு அறிவித்துவிட்டது. ஐ.தே.கட்சி நாட்டைத் துண்டாடப் போகிறது எனக் குற்றஞ் சுமத்திய அரசே, நாடு பிளவுபடுவதற்கான வாய்ப்பை உருவாக்கியுள்ளது. ஜே.வி.பிக்கும் இந்தக கைங்கரியத்தில் பங்குண்டு. ஜே.வி.பியினர் பொ.ஐ.முன்னணியுடன் இணைந்து தகுதிகாண் அரசில் பங்குகொண்டபோது, டக்ளஸ் தேவானந்தாவின் திட்டத்திற்கு (வடக்கு - கிழக்கை இணைத்தல்) மௌனம் சாதித்தனர். வடக்கு - கிழக்கு இணைக்கப்படக் கூடாது என ஜே.வி.பியினர் கூறியதாகவும் தெரியவில்லை. டக்ளஸ் தேவானந்தா வடக்கு - கிழக்கை இணைக்க வேண்டும் எனக் கூறியபோது, அவரை (ஈ.பி.டி.பியை) யானை - புலி எனக் கூறப்பட்ட கும்பலுடன் ஜே.வி.பியினால் தள்ளமுடியவில்லை.

ஐ.தே.கட்சியுடன் பணியாற்ற முடியாது என ஜனாதிபதி மீண்டும் மீண்டும் தெரிவித்தார். மேலும் 4 ஆண்டுகள் ஜனாதிபதி பதவியை வகிக்க அவருக்கு மக்கள் ஆணையுண்டு. இருப்பினும், ஆட்சிக்கு வரும் எதிர்கட்சியுடன் இணைந்து நாட்டைப் பரிபாலிக்கமுடியாது என நாட்டின் தலைவி கூறுவது எங்ஙனம்.

அரசு யாருக்கும் சீதனமானது அல்ல. அந்த உரிமை மக்களிடமே உள்ளது. அரசியல்வாதிகள் ஆட்சிக்கு வரும்போது தங்களுக்குரிய மாற்றுடைகளை வாங்கி அணிவதுடன், தங்களது காலம் முடிவடைந்ததும் அந்த மாற்றுடைகளை அழுக்காக்காமல் மீண்டும் புதியவர்களிடம் ஒப்படைக்கவேண்டும். அதைவிடுத்து மாற்றுடைகளைத் தொடர்ந்தும் அணியும் வாய்ப்பு உலகில் இல்லை.

**தமிழில்: கஜனி**

சீரழிந்த நாட்டை வன்முறைகளில் இருந்து - இம்சையிலிருந்து - விடுவித்து சிங்கள, தமிழ், முஸ்லிம் மற்றும் ஏனைய இனங்களுக்கிடையே நம்பிக்கை, ஐக்கியம் ஆகியவற்றை உருவாக்கி அனைவரும் கைகோர்த்து இன்றே செயலில் இறங்கவேண்டும்.

யானை - புலி ஒப்பந்தத்தின் சூத்திரதாரியான மங்கள சமரவீராவே தற்போது என்ன கூறுகின்றீர்கள்? ☆

# ஜேர்மன் தொண்டு நிறுவன அபிவிருத்தி திட்டங்களுக்கு 41 கோடி ரூபா செலவு

யாழ்ப்பாணம்,டிசெ.22

யாழ்.மாவட்டத்தில் யுத்தத்தினால் சேதமுற்ற பாடசாலைகளைப் புனரமைத்தல், வீடுகள் அமைத்தல், நீர் விநியோக வேலைகள் போன்ற அபிவிருத்திப் பணிகளுக்காக ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் கடந்த 3 ஆண்டுகளில் மட்டும் 41 கோடி ரூபாவை செலவிட்டிருக்கின்றது. நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் இத்தகவலைத் தெரிவித்தார்.

நெடுந்தீவு, கரவெட்டி, சாவகச்சேரி, மருதங்கேணி போன்ற பிரதேச செயலக பிரிவுகள் தவிர்ந்த ஏனைய பிரதேச செயலக பிரிவுகளில் இந்தப் பணிகள் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் இந்த 3ஆண்டு திட்டம் மூலம் 24 பாடசாலைகள் புனரமைக்கப்பட்டுள்ளன. 236 பாடசாலைகளில் சுகாதாரம் பேணும் பொருட்டு மலசலகூடங்கள் புதிதாக நிறுவப்பட்டுள்ளன. இதனைவிட 966 வீடுகள், 36 பொதுக்கட்டடங்கள் என்பன புனரமைக்கப்பட்டுள்ளன.

யாழ்.மாநகர சபை குடிதண்ணீர் விநியோகத் திட்டம் மற்றும் 17 கிராமிய நீர் விநியோகத் திட்டங்கள் என்பனவும் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளதாக அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

இதேவேளை -

அடுத்த ஆண்டு (2002) ஜனவரியில் புதிய திட்டம் மூலம் 17 பாடசாலைகளைப் புனரமைக்கவும் - 83 பாடசாலைகளில் புதிய மலசலகூடங்களை நிறுவவும் - ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-180)

# இந்து கலாசார அமைச்சுக்கு யாழ்.செயலகத்தில் அலுவலகம்

## ஜனவரி தொடக்கம் இயங்கும்

யாழ்ப்பாணம்,டிசெ.22

இந்து கலாசார அமைச்சின் அலுவலகம் யாழ்.செயலகத்தில் ஜனவரி மாத முதல்வாரத்தில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் யாவும் தற்பொழுது யாழ்.அரச அதிபரினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

முதற்கட்டமாக அலுவலகத்திற்கு தொலைபேசி, மின் இணைப்புகளைப் பொருத்தும் வேலைகள் இடம்பெற்று வருகின்றன.

(ஐ-8-10)

# தொடர்புகொள்ளக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.22

யாழ்.செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அலுவலகத்துடன் கீழ்க்காணும இருவரையும் உடன் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மந்துவிலைச் சேர்ந்தவர்களான ராஜரட்ணம் தம்பிராஜா (வயது 57), கந்தையா பராசக்தி அம்மா(வயது 51).

(ஐ-8)

# ஆசிரியரது சுயவிவரங்களை கணனி மயப்படுத்த ஏற்பாடு

மனித வள தரவுத் தளத்தினை உருவாக்குவதற்காக வடக்கு-கிழக்கு மாகாணத்தில் கடமை புரியும் ஆசிரியர்கள் உட்பட அனைத்து உத்தியோகத்தர்களினதும் சுயவிவரக்கோவை விவரங்கள் கணனி மயமாக்கப்பட உள்ளன.

இதன் பொருட்டு சகல உத்தியோகத்தர்களிடமிருந்தும் வினாக்கொத்து படிவம் ஒன்று பூரணப்படுத்தப்பட்டு வருகின்றன.

வலிகாமம் கலவி வலய பாடசாலைகளில் கல்வி கற்பித்து, தற்போது பலாலி, கோப்பாய் ஆசிரிய கலாசாலைகளில் பயிற்சிகளை மேற்கொண்டுவரும் ஆசிரியர்கள் தாம் ஏற்கெனவே கற்பித்த பாடசாலை அதிபருடாக தொடர்புகொண்டு மேற்படி படிவத்தைப் பூரணப்படுத்தி வழங்க வேண்டும் எனவும் -

இதுவரை அவ்வாறு படிவத்தைப் பூரணப்படுத்தத் தவறியவர்கள் வலிகாமம் கல்வி வலய அலுவலகத்துடன் தொடர்புகொள்ளுமாறு கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா அறிவித்துள்ளார்.

(ஐ-152)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள PEUGEOT கார் (6SRI 0120) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: Dr.T.குலசிங்கம், நந்தாவில் லேன், கொக்குவில். (96036)

வீட்டுப் பாவனைக்கு உரிய குளிர் சாதனப் பெட்டிகள் (சிசில், உஷா) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சி. ரொபின்சன், 25, மவுண் கார்மல் றோட், யாழ்ப்பாணம். (96165)

SD 235 AM, NV 7000 ஆகிய வீடியோ டெக் வகைகள் விற்பனைக்கு உண்டு. சனி, ஞாயிறுகளில் பார்வையிடலாம். தொடர்பு:- T.ரஞ்சித், 81,பலாலி வீதி, கந்தர்மடம். T.P.2215. (96152)

## நாய்க்குட்டி விற்பனைக்கு

60 நாள்கள் நிரம்பியதும், ஆண் கறுப்பு நிறம் கொண்டதுமான கலப்பற்ற பொமனேரியன் நாய்க்குட்டி (பூச்சி நீக்கப்பட்டது) உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ஸ்ரீரங்கன், 67, இந்துக்கல்லூரி ஒழுங்கை, வண்ணார்பண்ணை. (96177)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுத்தம் செய்து (பாதிக்கோழி உட்பட) தினமும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு:-19,முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (96061)

இறைச்சிக் கோழிகள், புறொயிலர், கல்பேட் என்பன சுத்தம் செய்து (பாதிக்கோழி உட்பட) வேண்டிய நிறைகளில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு:இல.227, பிறவுண் வீதி (கலட்டிச் சந்திக்கு அருகில்), யாழ்ப்பாணம். (96169)

இறைச்சிக் கோழி Broiler விற்பனைக்கு உண்டு. 1Kg 160/- பாதிக் கோழி உட்பட பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: 157,நாயன்மார் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (96172)

புறொயிலர் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு:- சிவகுமார், பருத்தித்துறை வீதி, கட்டைப்பிராய்ச் சந்தி. (96170)

## புத்தகங்கள்

அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் நூல்கள் 1.நாடகம் எழுதுவது எப்படி? 2.யாழ்ப்பாணமா? கொழும்பா? நாடக நூல்கள் 3.யாழ்ப்பாணம் சிறுகதைகள் 4.வீடற்றவன் நாவலின் விளக்கமும் விமர்சனமும் 5.இலக்கியக் கட்டுரைகள், இலக்கிய திறனாய்வு நூல்கள் 6.ஒரு காதலின கதை நாவல். (96143)

## தவறிவிட்டது

கொழும்புத்துறை, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த து.வின்துசாவின் விசேட அ.அட்டை (இல.0901005756) நவாலிக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் நவாலி, சயன்ஸ் ஹோலில ஒப்படைக்கவும். (96167)

## செயலாளர் கூட்டம்

யாழ்.மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்களுக்கான மாதாந்த கூட்டம் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 10 மணிக்கு உள்ளூராட்சித் திணைக்கள யாழ். பிராந்திய அலுவலகத்தில் நடைபெறும்.

அனைத்து உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்களையும் கலந்து கொள்ளுமாறு உள்ளூராட்சி திணைக்கள உதவி ஆணையாளர் ரி.வி. கிருஸ்ண சாமி அறிவித்துள்ளார். (ஐ-8)

## காப்புறுதி கூ.தாபன அலுவலகம் திங்களன்று மூடப்படும்

கிறிஸ்மஸ் பண்டிகைக்கு முதல் நாளான நாளை மறுதினம் திங்கட்கிழமை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் யாழ். அலுவலகம் விடுமுறைக்காக மூடப்பட்டிருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை -

சனிக்கிழமைகளில் நண்பகல் 12 மணிவரையும் அலுவலகப் பணிகள் இடம்பெறும் எனவும், பணம் செலுத்துவோர் சனிக்கிழமைகளில் பணத்தைச் செலுத்த முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-10)

# 62ஆவது பிறந்ததின நினைவு

22-12-2001



## அமரர் ஆறுமுகம் கமலநாதன்

(B.A.DIP. IN EDUCATION - S.L.P.S.GRADE - I,
முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர், வலிகாமம்)

பாசத்தின் உறைவிடமாய்
பண்பின் சிகரமாய்
பாங்குடனே பலருக்கு உதவி பல புரிந்து
இந்நில மீதினில் ஒளியாகி
இலங்கிட வைத்துயர் காசினியில்
புன்னகை தவழ்ந்திடச் செய்தவரே!
புவியினில் இன்றுமை நாமிழந்து
செய்வழி ஏதெனக் கலங்கியே
இன்று உங்கள் பிறந்தநாள் நினைவாக
அஞ்சலி செய்கிறோம்.


திருமதி
சர்வேஸ்வரலலிதா கமலநாதன்,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(96180)

மனைவி, மருமகன்,
சந்திரன் - மச்சான்,
மச்சாள்மார், சகலன்மார்,
பெறாமக்கள்.

# 17ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
09 - 12 - 1959



மறைவு
22 - 12 - 1984

## அமரர்
## அமிர்தலிங்கம் செல்வக்குமாரன் (கிச்சி)

(முன்னாள் ஆங்கில ஆசிரியர்,
நறுவிலிக்குளம் றோ.க.பாடசாலை, மன்னார்)

அன்பின் திருவுருவாய் ஆறுதலளிக்கும் நிழலாய்
இரக்கத்தின் இருப்பிடமாய் ஈன்றவளின் செல்வமாய்
உற்றாரின் உறுதுணையாய் ஊரெலாம் போற்றுபவனாய்
என்றுமே சிறந்திருந்தா ஏழைக்கெலாம் இரங்கிய
ஐயனே உனை ஒழித்தனரே ஓதாதார்.

உன் பிரிவால் துயருறும்
உன் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:

அம்மா, ஐயா, அக்காமார்,
தங்கை, அண்ணாமார்,தம்பியர்,
மருமக்கள்:-
சசிகலா, சர்மிலா, செல்வக்குமார்,
செந்தூரன்.

வடக்குத் தெரு,
தொண்டமனாறு.
த.முகவரி:
வி.எம்.றோட்,
பருத்தித்துறை.

(96173)

# வெளிவந்துள்ளது

சங்கீதம்
தரம் 10, 11
ஆக்கம்: பொன். ஸ்ரீ வாமதேவன்

வெளியீடு:
ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, யாழ்ப்பாணம்.

(96149)

# SUBRA (14) கல்வி நிறுவனம்

சித்தன்கேணி

## பரிசுத் தின விழா - 2001

இடம்: **சித்தன்கேணி பெரியவளவு மகா கணபதிப் பிள்ளையார் ஆலய தெற்கு வீதி.**

காலம்: **நாளை (23-12-2001) ஞாயிற்றுக்கிழமை (பிற்பகல் 1.00 மணி)**

பிரதம விருந்தினர்:-

**செல்வி கிறேஷ்பங்கர்** (M.A.)
(இலங்கைக்கான அமெரிக்க விசேட பிரதிநிதி)
**கலாநிதி S.சிவலிங்கராஜா** (Phd.)
(தலைவர், தமிழ்த்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)

சிறப்பு விருந்தினர்:-

**விகடகவி மு.திருநாவுக்கரசு**
(இளைப்பாறிய மாவட்ட நீதிபதி)
**திரு. மா. பத்மநாதன்**
(உதவிப் பொறியியலாளர் இலங்கை மின்சாரசபை)
**திரு. S.சிறிதரன்**
(கிராம உத்தியோகத்தர்)

*தொடர்ந்து மாணவர்களது கலை நிகழ்வுகளும் பரிசளிப்பு நிகழ்வுகளும் இடம்பெறும்.*

*சிறப்பு நிகழ்வு* - பட்டிமண்டபம்

சிறப்பான குடும்ப வாழ்விற்குப் பெரிதும் பங்கெடுப்பது

புரிந்து கொள்ளும் மனமா? போது மென்ற மனமா?

(யாழ். பிரபல பேச்சாளர் இணைந்து வழங்குவர்)

அனைவரையும் அன்புக்கரம் நீட்டி அழைக்கின்றோம்.

*நிறுவன இயக்குநர்:* **எஸ். ஐங்கரன்,**
**ஆசிரியர்கள், மாணவர்கள், ஊழியர்கள்.**

# நன்றி நவிலல்

"உறங்குவது போலும் சாக்கா டுறங்கி
விழிப்பது போலும் பிறப்பு" - திருக்குறள்



**அமரர்**
**அப்பா ஸ்ரீநிவாசன்**

தோற்றம்: 30-10-1925
மறைவு: 18-11-2001

**திருமதி**
**சரஸ்வதி ஸ்ரீ. ஸ்ரீநிவாசன்**

தோற்றம்: 30-03-1936
மறைவு: 08-11-2001

மறைந்த எங்கள் குடும்பத் தலைவர், தலைவி ஆகியோரின் 41ஆம் நாள் நினைவஞ்சலி நிகழ்ச்சிகள் நாளை (23-12-2001) ஞாயிற்றுக்கிழமை பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எமது பெற்றோர்களின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டும், செய்தியறிந்தும் பல வகையில் உதவி செய்தும், ஆறுதல் தெரிவித்த எமது நண்பர்கள், அன்பர்கள், உற்றார், உறவினர் ஆகியோருக்கு எமது உளம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

444/2, ஹவ்லக் றோட்,
கொழும்பு - 06.

(C/19878)

தகவல்:
குடும்பத்தினர்.

# யுத்தநிறுத்தம் வேண்டாம்! தாக்குதலை ஆரம்பியுங்கள்!!

## அரசு மீது பாய்கிறது சிஹல உறுமய

கொழும்பு,டிசெ.22

அரசு தனது யுத்தநிறுத்த அறிவிப்பை உடனடியாக வாபஸ்பெற வேண்டும். விடுதலைப் புலிகள் மீதான தாக்குதலை உடனடியாக ஆரம்பிக்கவேண்டும்.

- இப்படிக் கூறுகிறார் சிஹல உறுமயக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திலக் கருணாரத்ன.

விடுதலைப் புலிகளின் யுத்தநிறுத்த அறிவிப்பு ஓர் ஏமாற்று நடவடிக்கை ஆகும். இதனை நம்பி ஏமாந்திருக்கும் அரசு, தானும் யுத்தநிறுத்தம் செய்வதாக அறிவித்திருப்பது அரசின் ஏமாளிப் போக்கை அப்பட்டமாக வெளிப்படுத்துகின்றது.

இந்த யுத்தநிறுத்த அறிவிப்பை உடனடியாக அரசு வாபஸ்பெற வேண்டும் - என்று திலக் கருணாரத்ன மேலும் தெரிவித்திருந்தார். (க-4)

# ரணிலை வாழ்த்துகிறார் வரதர்!

கொழும்பு,டிசெ.22

"இலங்கையின் புதிய பிரதமராகப் பதவியேற்றிருக்கும் ரணில் விக்கிரமசிங்காவையும் அவரது அரசாங்கத்தில் பதவியேற்றுள்ள அனைத்து அமைச்சர்களையும் வெற்றிகரமாகச் செயற்பட எமது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்."

ஈ.பி.ஆர்.எல்.எவ். (வரதர் அணி) சார்பில் முன்னாள் முதலமைச்சர் அவரதராஜப்பெருமாள் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த அறுபது ஆண்டுகளாக எரிந்துகொண்டிருக்கும் இலங்கையின இனப்பிரச்சினை மற்றும் பொருளாதாரப் பிரச்சினை ஆகியவற்றுக்கு உடனடியாகத் தீர்வு காணவேண்டும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் அரசும் மிகுந்த அக்கறையுடன் செயற்பட முற்படுவதை புதிய நம்பிக்கைகளுடன் வரவேற்கிறோம். இவ்விடயங்களில் புதிய அரசு ஆக்கபூர்வமாகவும், தீர்மானகரமாகவும் செயற்பட எம்மாலான ஒத்துழைப்புக்களை வழங்குவோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

ரணில் விக்கிரமசிங்க புதிய பிரதமராகப் பதவியேற்று முதலாவதாக மேற்கொள்ளும் இந்தியப் பயணம் அதற்கான இலக்குகளை அடையும் வகையில் வெற்றிகரமாக அமைய எமது உளமார்ந்த வாழ்த்துக்களையும் இத்தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறோம் என்றும் அதில் மேலும் கூறப்பட்டுள்ளது. (க)

## விபத்தில் இளைஞரின் இரு கால்களும் முறிந்தன

யாழ்ப்பாணம்,டிசெ.22

எதிரெதிரே வந்து கொண்டிருந்த தட்டிவானும் இராணுவ 'ட்ரக்' கும் ஒன்றை ஒன்று உரசிக்கொண்டு சென்ற வேளை தட்டிவானில் பயணம் செய்த இளைஞரின் இரு கால்களும் முறிந்தன.

நேற்றுமுன்தினம் வரணிப் பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் கொடிகாமத்தைச் சேர்ந்த சோமசுந்தரம் கவிராஜ் (வயது 17) என்ற இளைஞரே காயமடைந்தார். இவர் யாழ.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தட்டிவானின் சாரதிக்கு அருகில் அமர்ந்திருந்த இந்த இளைஞர் தமது கால்களை வெளியே போட்டவாறு பயணம் செய்ததால் அனர்த்தம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (க-4-6-117)

## மின்சாரம் தாக்கி வயோதிபர் மரணம்

யாழ்ப்பாணம்,டிசெ.22

பாண் வாங்க கடைக்குச் சென்ற வயோதிபர் ஒருவர் வீதியின் குறுக்கே விழுந்து கிடந்த முள்முருங்கை மரத்தைத் தூக்கி அப்புறப்படுத்த முயன்ற சமயம் மின்சாரம் தாக்கி அந்த இடத்திலேயே மரணமானார்.

மானிப்பாய், சுதுமலை வடக்கில் நேற்றுக்காலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த கனகரட்ணம் நடராசா (வயது - 70) என்பவரே உயிரிழந்தார்.

நேற்றுமுன்தினம் இரவு கடும் காற்றுடன் கூடிய மழையால் முருங்கை மரம் முறிந்து மின் கம்பிகளையும் அறுத்துக் கொண்டு வீதியின் குறுக்கே கிடந்துள்ளது.

அதனை அகற்ற முயற்சித்த சமயமே மின்சாரம் தாக்கி அவர் அந்த இடத்திலேயே மரணமானார் என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த வாரமும் கொக்குவில் நந்தாவில் அம்மன் கோயிலடிப் பகுதியைச் சேர்ந்த, முத்துலிங்கம் வசந்தன என்ற இளைஞர் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (க-6-139)

# யுத்தநிறுத்தம், சமாதான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி ஆற்றிய உரையின் விபரத்தை அக்கூட்டத்தில் பங்குபற்றிய கட்சிப் பிரமுகர் ஒருவர் வெளியிட்டார். ஜனாதிபதி குமாரதுங்க அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண புதிய அரசு எடுக்கும் சமாதான முயற்சிகளுக்கு பூரண ஆதரவை - நூற்றுக்கு நூறு வீதம் ஒத்துழைப்பை - நாம் வழங்கவேண்டும்.

இந்த முயற்சியின் ஒரு கட்டமாக யுத்தநிறுத்தம் செய்வதற்கு அரசு முன்வந்தால் அதற்கும் முழு அளவில் நாம் ஆதரவு தரவேண்டும்.

அமைதிக்கான பேச்சு முயற்சிக்கு எந்தவிதத்திலும் குந்தகம் விளைவிக்காமல் அதில் பூரண வெற்றியீட்ட பொறுப்புள்ள எதிர்க்கட்சியாகச் செயற்பட்டு, அந்த முயற்சிகளை ஆதரிப்பதே நமது கடமையாகும்.

இந்த நடவடிக்கையின் ஒரு கட்டமாக அரசமைப்பையும் மாற்றவேண்டி நேரலாம். நாட்டின் நலனை மட்டுமே கவனத்தில் எடுத்துத் தேவைப்பட்டால் அந்த நடவடிக்கைக்கும் நாம முழு ஆதரவு வழங்குவோம்.

இனவாதம் பேசும் எந்தக் கட்சியையும் பெரும்பான்மைச் சிங்கள மக்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்ற படிப்பினையை இந்தத் தேர்தல் நமக்குத் தெளிவாகத் தந்திருக்கின்றது. இனிமேலும் இனவாதம் பேசுவதில் பயனேதும் கிடைக்காது என்பதை அரசியல் தலைவர்கள் உணர்ந்துகொள்வது அவசியம்.

கடந்த பொதுத்தேர்தலில் சில பிற்போக்கு சக்திகள் நமது முன்னணிக்குள் ஊடுருவி, இனவாதப் போக்குடைய பிரசார யுக்திகளை நம்மிடையே புகுத்திவிட்டன. ஆனால் மக்கள் அதைப் பூரணமாக நிராகரித்துவிட்டனர்.

### இனவாதப் பிரசாரம் எடுபடவில்லை

புலி - யானை கூட்டு என்ற இனவாதப் பிரசாரம் மக்கள் மத்தியில் எடுபடவில்லை.

கடந்த தேர்தலில் யார் வென்றார்கள், யார் தோற்றார்கள் என்பது குறித்து நான் கவலைப்படவில்லை. ஆனால் இத்தேர்தலின் மூலம் இனவாதத்துக்கு இடமில்லை என்று உணர்த்தப்பட்டிருப்பது குறித்து நான் மகிழ்வடைகின்றேன்.

நாம் தேசிய அரசில் இணைவது என்ற பேச்சுக்கு இடமில்லை. பலம் வாய்ந்த எதிர்க்கட்சியாக - நாட்டின் நலனை மட்டும் கவனத்தில் கொண்டு - நாம் செயலாற்றுவோம். நாட்டு நலன் கருதி எடுக்கப்படும் சகல நடவடிக்கைகளுக்கும் ஒத்துழைப்போம்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதும் நாட்டின் பொருளாதாரத்தைச் சீரமைப்பதும் எங்கள் முக்கிய இலக்காக இருக்கவேண்டும்.

கட்சிக் கட்டுப்பாடுகளை மீறிச் செயற்படுவோர் மீது கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

தேர்தலின் பின்னர் பொ.ஐ.முன்னணிக்கு எதிராக வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. என்றாலும்கூட, நான் பாதுகாப்பு அமைச்சுப் பதவியைக்கூட அரசுத் தரப்புக்குக் கையளித்தேன். அதற்கு விசேட காரணம் உண்டு. சமாதான முயற்சிகளைப் புதிய அரசு முன்னெடுக்கும் போது அது தொடர்பான விவகாரங்களுக்கு பாதுகாப்பு அமைச்சு அந்த அரசின் கட்டுப்பாட்டில் இருப்பது அதற்குச் சாதகமாக இருக்கும் என்று கூறப்பட்டது. அதை நான் கருத்தில் எடுத்தேன். சமாதான முயற்சிகளுக்கு ஒரு வீதம்கூட நாம் தடையாக இருக்கக் கூடாது என்பதால் அந்த அமைச்சுப் பதவியையும் அவர்களிடம் ஒப்படைத்தேன் என்றார். (உ)

# ஆரம்ப சுகாதார நிலையத்துக்கென பன்னாலையில் தனியான கட்டடம்

## அமைக்கக் கோருகிறது கிராம அபி. சங்கம்

வலிகாமம்,டிசெ.22

வலிகாமம் வடக்கு தெல்லிப்பழையில் உள்ள பன்னாலைக் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலைய கட்டடம் ஒன்று நிர்மாணிக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்றினை விரைவில் கட்டுவதற்கு அனுமதியளிக்குமாறு பன்னாலை மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரியூடாக யாழ்ப்பாண மாவட்ட சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளரிடம் விண்ணப்பம் செய்துள்ளனர்.

மேற்படி கட்டடத்தைக்கட்ட விரைவாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனவும், இதன்மூலம் இக்கிராமத்தில் உள்ள தாய் - சேய் சிகிச்சை நிலையத்தினை நடத்த வசதியாயிருக்கும் எனவும் சங்கம் தெரிவித்துள்ளது.

நிரந்தரக் கட்டடம் ஒன்று இல்லாமையால் தாய் - சேய் சிகிச்சை நிலையம் தற்போது தனியார் இல்லம் ஒன்றில் வசதிகளற்ற நிலையில் இயங்கிவருவதாகவும் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

ஆரம்ப சுகாதாரநிலைய கட்டடத்தை நிறுவுவதற்கு தேவையான காணியொன்றினை சங்கத்தினர் அன்பளிப்பாகப் பெற்றுள்ளனர். (க-152)

## கிறிஸ்மஸ் தினம் 'பார்'களுக்குப் பூட்டு.

கொழும்பு,டிசெ.22

கிறிஸ்மஸ் தினமான டிசெம்பர் 25 ஆம் திகதி சகல மதுபான விற்பனை நிலையங்களும் மூடப்படும்.

அரசு இவ்வாறு தீர்மானித்திருப்பதாக மதுவரி ஆணையாளர் நாயகம் பி.ஏக்கநாயக்க பண்டார அறிவித்துள்ளார். (உ)

## யாழ்.பல்கலைக்கு தங்கப்பதக்கம்

யாழ்ப்பாணம்,டிசெ.22

பல்கலைக்கழகங்களுக்கு இடையில் பேராதனையில் நடைபெற்று வரும் மினிஒலிம்பிக் போட்டியில் நேற்று யாழ்.பல்கலைக்கழகத்திற்கு ஒரு தங்கப் பதக்கமும், ஒரு வெண்கலப் பதக்கமும் கிடைத்துள்ளன.

உதைபந்தாட்ட அணிக்கு தங்கப் பதக்கமும், பளுதூக்கும் போட்டியில வெற்றிபெற்ற எஸ்.எழிலழகனுக்கு வெண்கலப்பதக்கமும் கிடைத்துள்ளன. (க-7-9)

## ஆங்கில ஆசிரியர் தெரிவுப் பரீட்சை

யாழ்ப்பாணம்,டிசெ.22

யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளுக்கான பகுதிநேர ஆங்கில ஆசிரியர் தெரிவுக்கான பரீட்சை எதிர்வரும் 26 ஆம் திகதி புதன்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இவர்களுக்கான அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

அண்மையில் கோரப்பட்ட விண்ணப்பங்களின் பிரகாரம் தகுதியானவர்களுக்கு மட்டுமே அனுமதி அட்டைகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக யாழ்.கல்வி வலய வட்டாரங்கள் தெரிவித்தன. (க-10)


நிறஞ்சனாஸ்
சங்கானை
புதிய வெளியீடு,
அஜித், தேவயானி, பார்த்தீபன்
நடித்த
நீ வருவாய் என
(ரீல்ஸ்)
சிறந்த பாடல்கள் நிறைந்த படம்
காட்சிகள் : 11.10, 2.30, 5.30
(C/19779)

ராஜா யாழ்ப்பாணம்
இன்று முதல்
தருசிஷ்யன்
(ரீல்ஸ்),
தினசரி:- 10.00, 3.00 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு 10.00, 2.00, 5.00
நாளை ஞாயிறு முதல்
நினைத்தேன் வந்தாய்
(C/19778)

நாகம்ஸ் சுன்னாகம்
பிரசாந்த், ஷாலினி, மணிவண்ணன
நடித்த
பிரியாத வரம் வேண்டும்
(ரீல்ஸ்)
காட்சிகள் 11.00, 3.00 (புதிய நேரம்)
திங்கள் முதல்
ஆளவந்தான்


## ஆனைக்கோட்டையில் மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம் லயன்ஸ் கழகம் நடத்தும் மருத்துவ முகாம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு ஆனைக்கோட்டை உயரப்புலம் அமெரிக்க மெதடிஸ்த மிஷன் பாடசாலையில் இடம்பெறவுள்ளது.

உதயதாரகை சனசமூகநிலையத்தின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ள இம்மருத்தவ முகாமில் கண் பரிசோதனையும் பொது மருத்துவ பரிசோதனைகளும் மேற்கொள்ளப்படவுள்ளன. (க-9)

# உள்ளூராட்சித் தேர்தல்கள் மார்ச் முதல் வாரத்தில்!

பிரதேச சபை, நகரசபை, மாநகரசபை ஆகியவற்றுக்கான தேர்தல்கள் மார்ச் மாத முதல் வாரத்தில் நடைபெறுமென அமைச்சரவைச் செயலாளர் தெரிவித்தார்.

தேர்தல்கள் நடைபெறுவதற்கு முன் வரவு - செலவுத் திட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

கடந்த உள்ளூராட்சித் தேர்தல்களின்போது பொதுமக்கள் ஐக்கிய முன்னணியே அதிகமான சபைகளைக் கைப்பற்றியிருந்தது.

இம்முறை ஐக்கிய தேசியக் கட்சி அதிக சபைகளைக் கைப்பற்ற முயற்சி எடுக்குமென கட்சியின் செயலாளர் சேனரத் கப்புகொட்டுவ தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளுக்கும் மார்ச்சில் தேர்தல் நடைபெறும் என கொழும்பில் விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

# ஜா - எல பிரதேச சபையின் நேற்றைய மாதாந்தக் கூட்டம் குழம்பியது!

## பொ.ஐ.மு. உறுப்பினர்கள் தடுக்கப்பட்டனர்!!

ஜா - எல பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டம் நேற்றுக் காலை கூடுவதாக இருந்தது. ஆனால் அந்த கூட்டம் நடத்தப்படாமல் குழப்பப்பட்டது.

சபை கூட இருந்த சமயம் அங்கு வந்த ஐ.தே.க. ஆதரவாளர்கள் சுமார் 200 பேர், பொ.ஐ.முன்னணி உறுப்பினர்கள் 14 பேரையும் தடுத்தனர்.

சபையில் நேற்று ஒரு 'டெண்டர்' தொடர்பான விவாதமே நடைபெறவிருந்தது.

இந்தப் பிரதேச சபையின் அதிகாரம் பொ.ஐ.முன்னணி வசமே உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

சபைக்கு வந்த உறுப்பினர்களைத் தடுத்த கூட்டத்தினர், அவர்களைத் தாக்கினர் என்று கம்பஹா மாவட்ட (பொ.ஐ.மு) எம்.பி.பீலிக்ஸ் பெரேரா தெரிவித்தார். (க)


சாவகச்சேரி பங்கில்
கிறிஸ்மஸ் விழா, புதுவருட திருவழிபாடுகள்

சாவகச்சேரி புனித லிகோரியார் ஆலயத்தைச் சேர்ந்த கத்தோலிக்கர்களுக்கான கிறிஸ்து பிறப்பு விழா, புதுவருட திருப்பலிகள் மேற்படி ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும். அனைத்து பங்கு மக்களையும் இத் திருப்பலியில் பங்குபற்ற அழைக்கின்றோம்.

| | கிறிஸ்து பிறப்புவிழா | புதுவருடத் திருப்பலி |
|---|---|---|
| திகதி - | 25.12.2001 | 01.01.2002 |
| நேரம் - | காலை 9.30 பு.நே. | காலை 9.30 பு.நே. |
| இடம் - | புனித லிகோரியார் ஆலயம் | புனித லிகோரியார் ஆலயம் |

பி.கு:- மக்கள் செல்வதற்கான இராணுவ அனுமதியுண்டு.

புனித மடுத்தினார் குருமடம்,
யாழ்ப்பாணம். (C/19890) அருட்திரு.ஞ.லோறன்ஸ்


# மரண அறிவித்தல்கள்

## திருமதி இராசையா நாகேஸ்வரி

ஈச்சமோட்டை, கடற்கரை வீதியைச் சேர்ந்த திருமதி இராசையா நாகேஸ்வரி 21.12.2001 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - கண்மணி தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற இராசையாவின் அன்பு மனைவியும் புவனேஸ்வரி (வன்னி), பாக்கியலட்சுமி (ஹொலண்ட்), பாலசுப்பிரமணியம், (ஜேர்மனி), கோபாலகிருஷ்ணன் (ஹொலண்ட்), பாலச்சந்திரன் (செல்வன் - மாநகரசபை - யாழ்.), மகாலட்சுமி (ஜேர்மனி), பொன்னம்பலம் (யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் தில்லைநாதன் (யாழ். ரெலிக்கொம்), யோகேஸ்வரி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் சகோதரியும் சிவபாதம் (வன்னி), குமாரரத்தினம் (ஹொலண்ட்), தயாநிதி (ஜேர்மனி), ஞானேஸ்வரி (ஹொலண்ட்), பத்மலோஜினி (யாழ்ப்பாணம்), சிவக்குமாரன் (ஜேர்மனி), ஆனந்தி (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.12.2001) சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு (புதியநேரம்) அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

15/10, ஈச்சமோட்டை,
கடற்கரைவீதி,
யாழ்ப்பாணம். (96,93)

தகவல்:
பாலச்சந்திரன் (செல்வன்)
(மகன்)

## நடராசா இரத்தினகோபால்

பருத்தித்துறையைச் சேர்ந்த நடராசா இரத்தினகோபால் (ஓய்வுபெற்ற மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர்), 20.12.2001 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் ஆவரங்காலைச் சேர்ந்த காலஞ்சென்ற, நடராசா - ராசரத்தினம் தம்பதியினரின் புதல்வனும் பருத்தித்துறையைச் சேர்ந்த காலஞ்சென்ற கதிர்காமத்தம்பி செட்டியார் - பூலட்சுமி தம்பதிகளின் மூத்த மருமகனும் கமலாசனியின் அன்புக் கணவரும் சேயோன் (சிவில் நிர்வாகம், பருத்தித்துறை), மனோகரன், ஜெனார்த்தனன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 20.12.2001 வியாழக்கிழமை அன்று நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வி.மு.வீதி,
பருத்தித்துறை. (C-19891)

தகவல்:
சேயோன் (மகன்)

யாழ். முற்றவெளிப் பகுதியில்

# தூக்கில் தொங்கிய சடலம் அடையாளம் காணப்பட்டது

யாழ்ப்பாணம்,டிசெ.22

யாழ் முற்றவெளிப் பகுதியில் சுருக்கிடப்பட்டு தொங்கியநிலையில் இருந்து நேற்றுமுன்தினம் மீட்கப்பட்ட சடலம் நேற்று அவரது மனைவியால் அடையாளம் காட்டப்பட்டது.

பருத்தித்துறை, தம்பசிட்டி வீதியைச் சேர்ந்த மு.சோதிலிங்கம் (வயது 53) என்பவரது சடலமே யாழ். போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைத்து அவரது மனைவியால் அடையாளம் காட்டப்பட்டது.

மனநிலை பாதிக்கப்பட்ட இவர், கடந்த புதன்கிழமை யாழ்.போதனா வைத்தியசாலை 'கிளினிச்'குக்காக வந்ததாகவும் இரவு வீடு வந்து சேராததால் இவரைத்தேடி தான் வைத்தியசாலைக்கு வந்ததாகவும் இவரது மனைவி தெரிவித்தார்.

இவரது மரணம் குறித்து சந்தேகம் தெரிவிக்கப்படுகின்றது. இவர் படுகொலை செய்யப்பட்ட பின்னர் தூக்கில் தொங்கவிடப்பட்டிருப்பதற்கு வாய்ப்பு இருப்பதாகக் கூறப்பட்டதை அடுத்து, இவரது சடலம் தூங்கிக் கொண்டிருந்த யாழ். முற்றவெளிப் பகுதியை சட்ட வைத்திய அதிகாரி நேரில் சென்று பார்வையிட்டார். (உ-6-86-139)

## இந்தியாவின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

"இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் முயற்சிகளில் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் விடுதலைப் புலிகள்தான் எனக் கருதக்கூடாது. ஏனைய தமிழ்க் கட்சிகளுடனும் இதுகுறித்துப் பேச வேண்டும். அக்கட்சிகளையும் கவனத்தில் எடுத்துக்கொள்ளவேண்டும்.

"இந்தியாவில் புலிகள் இயக்கம் தடைசெய்யப்பட்டிருப்பதால், இலங்கையில் சமாதானத் தீர்வு காணும் முயற்சியில் இந்தியா அனுசரணையாளராகச் செயற்படமுடியாது என்று கூறுவதை ஏற்கமுடியாது."

- இப்படி அவர்கள் இருவரும் வலியுறுத்தியதாகக் கூறப்படுகின்றது.

நான்கு தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு புலிகள் சார்புப் போக்கைப் பின்பற்றுவதால் -

தீவிர புலிகள் எதிர்ப்பு நிலைப்பாட்டைக் கொண்டுள்ள ஈ.பி.டி.பியும், ஈ.பி.ஆர்.எல்.எவ். (வரதர்) அணியும் சேர்ந்து விரைவில் தேசிய ஜனநாயக முன்னணி என்ற அமைப்பை ஏற்படுத்தும் என்றும் இந்தியத் தூதுவரிடம் தெரிவிக்கப்பட்டதாக அறியவந்தது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க - இந்தியா செல்வதற்கு முதல்நாள் இவர்கள் இருவரும் இந்தியத் தூதுவரைக் கொழும்பில் சந்தித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

ரணில் இந்தியாவிலிருந்து திரும்பிய கையோடு வரதராஜப்பெருமாள் இந்தியா புறப்பட்டுச் செல்வார் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ)

## பொருளாதார.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிங்கவைச் சந்தித்து உரையாடிய பின்னர் அவர் இத்தகவலைத் தெரிவித்தார்.

இதற்கிடையில் -

சகல பகுதிகள் மீதான பொருளாதாரத் தடைகளையும் எதிர்வரும் தைப் பொங்கல் தினத்துக்கு முன்னர் நக்குவதற்குத் தாம் திட்டமிட்டிருப்பதாகப் பிரதமர் நேற்றுக் கூறினார் என்று தமிழ்க் கட்சிக் கூட்டமைப்பின் பேச்சாளர் இரா.சம்பந்தனை மேற்கோள் காட்டி பி.பி.ஸி. அறிவித்தது.

தமிழ்க் கட்சிக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் நேற்றுப் பிரதமரைச் சந்தித்துப் பேசிய பின்னர் சம்பந்தன் இந்தத் தகவலை வெளியிட்டிருக்கிறார்.

"வன்னிக்குப் பொருள்களை அனுப்புவதற்கான முன்முயற்சிகளை ஆரம்பித்துள்ளேன். வர்த்தகப் பிரமுகர்கள் மூலம் பொருள்களை அனுப்ப ஏற்பாடு செய்துள்ளேன். அவர்களின் வாகன அணியை நானே அழைத்துச் சென்று புலிகளின் பிரதேசத்தில் அவற்றை ஒப்படைத்துவிட்டு அங்கு மிதமிஞ்சி விளைந்திருக்கும் உற்பத்திகளை தென்பகுதிக்கு எடுத்து வர ஏற்பாடு செய்வேன்." - என்று அமைச்சர் மகேஸ்வரன் மேலும் தெரிவித்தார். (உ)

## சிசில் வைத்தியரத்ன காலமானார்

இலங்கையின் முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் எல்.டி.சிசில் வைத்தியரத்ன (வயது 63) கடந்த திங்கள் திருவனந்தபுரத்தில் காலமானார்.

இருதய சத்திரசிகிச்சை ஒன்றின் பின்னர் அவர் காலமானதாக அறிவிக்கப்பட்டது. 1991 நவம்பரில் இராணுவத் தளபதியாகப் பதவியேற்ற லெப்ரினன்ட் ஜெனரல் வைத்தியரதன 1994 இல் ஜெனரல் தர நிலையோடு பதவியிலிருந்து ஓய்வுபெற்றார்.

அவரது இறுதிக்கிரியைகள் கொழும்பு பொரளை கனத்தை பொது மயானத்தில் இன்று நடைபெறும்.(உ)

## பணப் புழக்கம் பாதிப்பு

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதியில் திரவப்பணத்துக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுவதாக வவுனியாச் செய்திகள் தெரிவித்தன.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் உள்ள வங்கிக் கிளைகளில் திரவப் பணத்துக்கான தட்டுப்பாடு தொடர்கிறது என்றும் -

இது குறித்து வங்கி அதிகாரிகள் கொழும்பில் உள்ள உயர் அதிகாரிகளுக்கு பலமுறை அறிவித்தும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என வங்கி அதிகாரிகள் கூறுகின்றனர் என்றும் - அந்தச் செய்தி மேலும் தெரிவித்தது. திரவப் பணமின்றி வன்னியில் பணப்புழக்கம் பாதிக்கப்பட்டுள்ளது.

## மத்தியஸ்தம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில் முதல்நாளான நேற்று இந்திய அதிகாரி இவ்வாறு தகவல் வெளியிட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

"நல்ல அறிகுறிகள் தென்படுகின்றன. ஆயினும் இலங்கை விவகாரத்தில் மத்தியஸ்தம் வகிப்பது தொடர்பான இந்தியாவின் நிலைப்பாட்டில் மாற்றம் எதுவும் ஏற்பட்டிருப்பதாக நான் நினைக்கவில்லை."

- என்று அந்த அதிகாரி 'ராய்ட்டர்' செய்தி நிறுவனத்துக்குத் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் இயக்கம், இலங்கை அரசு ஆகிய இரண்டு தரப்பும் அழைத்தால் அன்றி இலங்கைப் பிரச்சினையில் தலையிடுவதில்லை என்ற நிலைப்பாட்டையே இந்தியா கடைப்பிடித்து வருகிறது.

சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்னர் விடுதலைப் புலிகளின் கிளர்ச்சியை முடிவுக்குக் கொண்டுவரும் முயற்சியில் ஈடுபட்டு இந்தியா கையைச் சுட்டுக்கொண்டது என்று அவதானிகள் கூறுகின்றனர்.

இதனாலேயே இந்தியா ஆலோசனை வழங்குவதோடு மட்டும் நின்றுவிடும்; மிகுந்த ஈடுபாடு காட்டாது என்று அவர்கள் கூறுகின்றனர்.

இதைவிட இந்திய நாடாளுமன்றத்தின் மீதான தாக்குதலை அடுத்து பாகிஸ்தானுடன் இராஜதந்திர மோதலில்வேறு புதுடில்லி இப்போது ஈடுபட்டுள்ளது என்றும் அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இலங்கை இனப்பிரச்சினையில் நோர்வே சமாதான முயற்சி மேற்கொண்டபோது இந்தியா ஓர் அவதானியாகவே இருந்துவந்தது.

புலிகள் மீது இந்தியா இப்பொழுதும் செல்வாக்கைப் பிரயோகிக்க முடியும் என்று இலங்கைத் தலைவர்கள் சிலர் கூறுகின்றனர்.

ஆயினும் இந்தியாவின் குறிக்கோள்கள் குறித்து விடுதலைப் புலிகள் சந்தேகம் கொண்டவர்களாகவே உள்ளனர். இதனால் புலிகள் மீது இந்தியா இனியும் எந்தவொரு கட்டுப்பாட்டையும் கொண்டிருக்க முடியாது என்றே இந்திய அவதானிகள் தெரிவித்திருக்கின்றனர். (உ)

காலநிலை மோசம்; பல சேவைகள் ரத்து

# மீளமைக்கப்பட்ட விமானப் பயண அட்டவணை அறிவிக்கப்பட்டது

யாழ்ப்பாணம்,டிசெ.22

பலாலிக்கும் இரத்மலானைக்கும் இடையில் பயணிகள் சேவையில் ஈடுபடும் ஹெலிரூர்ஸ் நிறுவனத்தின் விமான சேவைகளை நேற்றுமுதல் நாளாந்தம் நான்காக அதிகரிக்க முயற்சி எடுக்கப்பட்டபோதிலும் மோசமான காலநிலை காரணமாக நேற்றைய நான்கு சேவைகளும்கூட ரத்துச் செய்யப்பட்டதாக ஹெலிரூர்ஸ் நிறுவன அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் நடைபெறவிருந்த சேவைகள்கூட மோசமான காலநிலை காரணமாக ரத்துச்செய்யப்பட்டிருந்தன என்பது தெரிந்ததே.

காலநிலை சீராக இருந்தால் இன்றும் நான்கு சேவைகள் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இன்றுமுதல் எதிர்வரும் 24 ஆம் திகதிவரை தினமும் இடம்பெறவிருக்கும் நான்கு சேவைகளில் ஏற்கனவே ரிக்கெட் பெற்றுப் பயணம் செய்ய முடியாமற்போனவர்களுக்கும் இடம் அளிக்கும் விதத்தில் சேவை ஒழுங்கு மீளமைக்கப்பட்டிருப்பதாக ஹெலிரூர்ஸ் அதிகாரி தெரிவித்தார்.

அதன்படி மீள் ஒழுங்கமைக்கப்பட்ட சேவையின் விவரம் வருமாறு:-

| திகதி | விமானசேவை | மீள் ஒழுங்கமைப்பின்படி அதில் பயணம் செய்ய அழைக்கப்படுவோர் |
|---|---|---|
| 22.12.2001 (இன்று) | விசேட சேவை | ஏற்கனவே பதிவுசெய்யப்பட்ட ஒழுங்கின்படி |
| | முதலாவது சேவை | ஏற்கனவே பதிவுசெய்யப்பட்ட ஒழுங்கின்படி |
| | இரண்டாவது சேவை | ஏற்கனவே பதிவுசெய்யப்பட்ட ஒழுங்கின்படி |
| | மூன்றாவது சேவை | 20.12.2001 வியாழக்கிழமை காலை நடைபெற இருந்து ரத்துச் செய்யப்பட்ட விசேடசேவைக்கு பதிவுசெய்தோர். |
| 23.12.2001 (நாளை) | முதலாவது சேவை | 21.12.2001 விசேடசேவைக்குப் பதிவுசெய்தோர் |
| | இரண்டாவது சேவை | 20.12.2001 முதல் சேவைக்குப் பதிவுசெய்தோர் |
| | மூன்றாவது சேவை | 20.12.2001 2ஆவது சேவைக்குப் பதிவுசெய்தோர் |
| | நான்காவது சேவை | 21.12.2001 முதல் சேவைக்குப் பதிவுசெய்தோர் |
| 24.12.2001 (திங்கள்) | முதலாவது சேவை | ஏற்கனவே பதிவுசெய்யப்பட்ட ஒழுங்கின்படி |
| | இரண்டாவது சேவை | ஏற்கனவே பதிவுசெய்யப்பட்ட ஒழுங்கின்படி |
| | மூன்றாவது சேவை | ஏற்கனவே பதிவுசெய்யப்பட்ட ஒழுங்கின்படி |
| | நான்காவது சேவை | 21.12.2001 2ஆவது சேவைக்குப் பதிவுசெய்தோர் |

எதிர்வரும் 25 ஆம் திகதி கிறிஸ்மஸ் தினத்தன்று மட்டும் மூன்று விமான சேவைகள் நடைபெறும்.

அதன்பின்னர் ஜனவரி 2 ஆம் திகதிவரை தொடர்ந்து தினசரி நான்கு சேவைகளே நடைபெறும் என்றும் -

ஆனால் 30 ஆம் திகதி ஞாயிறன்று மட்டும் விமானசேவை ஏதும் நடைபெறாது என்றும் -

ஹெலிரூர்ஸ் அதிகாரி மேலும் தெரிவித்தார். (உ-ஜ-10)

## பிரதமருடன் கூட்டமைப்பினர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின் தேர்தல் விஞ்ஞாபனத்தையும் மகஜர் ஒன்றையும் கையளித்தனர்.

நேற்றைய சந்திப்பின்போது முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் வருமாறு:-

★ தமிழீழ விடுதலைப் புலிகளுடன், அரசு உடனடியாகப் பேச்சை ஆரம்பிக்க வேண்டும்.

★ அதற்கு, சர்வதேச மூன்றாம் தரப்பின் ஈடுபாட்டைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

★ புலிகளோடு பேசும்போது வேறு எந்தக் கட்சியினருடனும் அரசு பேசக்கூடாது.

★ புலிகள் சுதந்திரமாகவும் முழுமையாகவும் பேச்சுக்களில் பங்குகொள்வதற்கு வசதியாக அவர்களின் இயக்கம் மீது விதித்துள்ள தடையை அரசு நீக்க வேண்டும்.

★ உடனடியாகப் போர்நிறுத்தம் செய்யவேண்டும். (அது நடந்து விட்டது! ஒரு மாத காலப் போர் நிறுத்தத்தை அரசு அறிவித்திருக்கிறது)

★ வடக்கு கிழக்குக்கான பொருளாதாரத் தடையை உடனடியாக நீக்க வேண்டும். உணவு, மருந்து வகைகள், கல்வி கற்பதற்குத் தேவையான பொருள்கள், எரிபொருள் ஆகியவை தாராளமாகக் கிடைக்கச் செய்ய வேண்டும்.

★ பிரயாணக் கட்டுப்பாடுகளை நீக்க வேண்டும்.

★ வடக்கு கிழக்கு மற்றும் மலையகத் தமிழர்கள் நாட்டின் ஏனைய பகுதிகளில் தங்கியிருப்பது தொடர்பான கட்டுப்பாடுகளையும் நீக்க வேண்டும்.

★ துணைப்படையாக விளங்கும் முன்னாள் போராளிக் குழுக்களிடம் உள்ள ஆயுதங்களைக் களைய வேண்டும்.

★ வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் வாழும் பகுதிகளில் ஷெல் வீச்சு நடத்துவதையும் குண்டுமாரி பொழிவதையும் நிறுத்த வேண்டும்.

★ நீதிமன்ற நடவடிக்கை எதுவும் இல்லாமல் மூன்று மாதங்களுக்கு மேல் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ்பேசும் மக்கள் அனைவரையும் விடுவிக்கவேண்டும்.

★ ஒப்புதல் வாக்குமூலத்தைக் கொண்டு தாக்கல் செய்த வழக்குகள் அனைத்தையும் நீதியின் அடிப்படையில் விலக்கிக் கொள்ளவேண்டும்.

★ மீன்பிடிக் கட்டுப்பாடுகளை முற்றாக நீக்க வேண்டும்.

இதேவேளை -

நேற்றைய சந்திப்பு சுமுகமாக நடந்ததாகவும், தங்களின் கோரிக்கைகள் குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கருத்தில் எடுத்து ஆவண செய்வதாக உறுதியளித்ததாகவும் இரா.சம்பந்தன் கூறியிருந்தார்.

விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கம் சம்பந்தமாக அரசு ஆலோசித்து வருவதாகத் தெரிகின்றபோதிலும் அது தொடர்பாக பிரதமர் எதையும் பேசவில்லை என்றும் சம்பந்தன் சொன்னார். (க-7-4)

## அரசும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசு சாதகமான பதிலை இரண்டு தினங்களுக்குள் விடுத்தது.

இது தொடர்பாக விசேட ஊடகத் தகவல் மையம் வெளியிட்ட அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

நாளை மறுதினம் திங்கட்கிழமை தொடக்கம் எதிர்வரும் ஜனவரி 24ஆம் திகதிவரை அரசுப் படைகளும் யுத்த நிறுத்தத்தை நடைமுறைப்படுத்தும்.

இது தொடர்பாக ரணில் விக்கிரமசிங்கவின் அலுவலகம் நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டது.

நாட்டைப் பிளவுபடுத்தாமல் பேச்சு மூலம் அரசியல் தீர்வு ஒன்றினை எட்டுவதற்கு நாட்டின் அனைத்துச் சமூகத்தினரும் ஐ.தே.கட்சிக்குத் தெளிவான ஆணையை வழங்கியிருக்கின்றனர்.

அதன்பிரகாரம் சமாதான நடவடிக்கைகளுக்குப் பொருத்தமான சூழ்நிலையை ஏற்படுத்தும் ஆரம்பக்கட்ட நடவடிக்கையாக இந்த யுத்தநிறுத்தம் கடைப்பிடிக்கப்படவுள்ளது.

கடந்த 19 ஆம் திகதி விடுதலைப் புலிகள் தமது சமாதான நல்லெண்ணத்தை வெளிப்படுத்தும் முகமாக ஒருமாத கால யுத்தநிறுத்தத்தை அறிவித்தனர்.

அவர்களின் அந்த அறிவிப்பை வரவேற்குமுகமாக அரசாங்கமும் ஒரு மாதகால யுத்தநிறுத்தத்தைக் கடைப்பிடிக்கத் தீர்மானித்திருக்கின்றது.

அத்துடன் சமாதான நல்லெண்ண நடவடிக்கையின் அடுத்தகட்டமாக இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன - இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (உ-4)

சுந்தர் வெளியீடு

புலமைப்பரிசில் பயிற்சிப் பரீட்சை நாளை முதல் குடாநாட்டிலுள்ள எமது வழமையான பரீட்சை நிலையங்களிலும் எமது தலைமையலுவலகத்திலும் நடைபெறும். புத்தகசாலைகளில் திங்கள் முதல் பெற்றுக்கொள்ளலாம்.

(96194) சுந்தர்.

புதிய வருடத்தில்....
அதிரடி விலைச் சலுகையில்....
அதி நவீன கணனிகள்....

நியாயமான விலையில்,
அதி நவீன கணனிகளைப் பெற்றுக் கொள்ள
உங்கள் தெரிவு.....................

WORLD'S NO.1 ORIGINAL
INTEL PROCESSOR
1000 MHz / 1400 MHz /
1700 MHz with
256 Cache Memory,
Shuttle Mother Board,
40 GB Segate Hard Disks,
14" View Sonic Monitors,
Acer 52X CD Rom Driver,
56K Modem
Printers (Laser, Dot Matrix),
Scanner, UPS

COMPUTER WITH MULTI MEDIA




BONUS PAPER HOLDER & DUST COVER

* Generator இலும் செயற்படும்
* 2 Computer களுக்குப் பாவிக்கக்கூடிய "FENTON" UPS (2 Year Warranty)

IBMS IT MARKET
No.701,K.K.S. Road, Jaffna. TP 021-3165

கணனிப் பயிற்சி

உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான கணனிப் பயிற்சிநெறி ஆரம்பமாகியுள்ளது. இதுவரை விண்ணப்பிக்கத் தவறிய மாணவர்கள் 24.12.2001 திகதி 9 மணிக்கு சமுகமளிக்கவும்.

(96190) Director, UNIVAC.

324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
கணனியூடான ஆங்கிலம்
பாலர் முதல் பல்கலைக்கழக மாணவர்கள்வரை
பதிவுகள் 24.12.2001 இற்கு முன்



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22.12.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.